இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2023

முரசொலி

Murasoli

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in facebook.com/murasoli180 twitter.com/murasoli180 instagram.com/murasoli180 youtube.com/murasoli180 murasolidaily@gmail.com

தொடக்கம்: 10.8.1942 - முரசு: 82 - ஒலி: 44 - திருவள்ளுவர் ஆண்டு 2054 - புரட்டாசி 05 - வெள்ளிக்கிழமை 22 செப்டம்பர் 2023 - திருச்சி ★★ 10 பக்கங்கள்

Established: 10.8.1942 - Volume: 82 - Issue 44: Thiruvalluvar Year - 2054 - Purattasi 05 - Friday 22 September 2023 - Trichy ★★ 10 Pages ₹ 5.00

## மகளிர் உரிமைக்கு 75 ஆண்டு காலம் பாடுபட்டு வரும் இயக்கம் !

# மகளிர் இட ஒதுக்கீட்டை தி.மு.க. என்றும் வரவேற்கும்!

## தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிக்கை !

**சென்னை, செப். 22-**

**“மகளிர் உரிமைக்கு 75 ஆண்டு காலமாக பாடுபட்டு வரும் தி.மு.கழகம், மகளிர் ஒதுக்கீட்டை அன்றும் வரவேற்றது; இன்றும் வரவேற்கிறது!” என்றும்,**

**“சர்ச்சைக்குரிய வேளாண் சட்டங்கள், குடியுரிமைத் திருத்தச் சட்டம், காஷ்மீர் சிறப்பு அந்தஸ்து பறிப்பு சட்டம் மற்றும் முற்பட்ட சாதியினருக்கு 10% இடஒதுக்கீடு வழங்கும் சட்டங்களை நிறைவேற்றுவதில் காட்டிய அக்கறையில் 100-ல் 1 விழுக்காடு கூட மகளிர் மசோதாவை நிறைவேற்ற மோடி அரசு காண்பிக்காதது ஏன்?” எனவும் “பெரும்பான்மை பலம் இருந்தும் கடந்த 9 ஆண்டு காலமாகப் பாராமுகமாக இருந்து விட்டு, தேர்தல் நேர வண்ணஜாலம் காட்டி ஏமாற்ற நினைக்கும் முயற்சியை மக்கள் புரிந்து கொள்வார்கள்!” “மக்கள் தொகைக் கணக் கெடுப்பு எப்போது நடத்தப்படும் என்ற உத்தரவாதம் இல்லை; நடைபெறாத மக்கள்தொகை கணக்கெடுப்பு, அதன் அடிப்படையிலான தொகுதி மறுவரையறை - அதன் பேரில் 2029-இல் அமலுக்கு வரப் போவதாக கூறப்படுவதற்கு இப்போது சட்டம் நிறைவேற்றும் விசித்திர தந்திரம் - எல்லாம் தோல்வி பயம் ஏற்படுத்தும் தேர்தல் மாய்மாலம்!” என்றும்,**

**“தொகுதி மறுவரையறை என்ற பெயரில் தென்னிந்திய மக்களை, குறிப்பாக தமிழ் நாட்டு மக்களின் மக்களவைப் பிரதிநிதித் துவத்தை குறைக்கும் பேராபத்து - சூழ்ச்சி முளையிலேயே கிள்ளி எறியப்பட வேண்டும்; தமிழ்நாட்டை வஞ்சிக்கமாட்டோம் என்ற உத்தரவாதத்தை ஒன்றிய அரசு இப்போதே தர வேண்டும்!” என்றும்**

**“பிற்படுத்தப்பட்ட - மிகவும் பிற்படுத்தப் பட்ட சமுதாயப் பெண்களுக்கும் இடஒதுக் கீடு வழங்க வேண்டும் என்ற கோரிக்கையில் உள்ள நியாயத்தை பா.ஜ.க. அரசு பரிசீலிக்க வேண்டும்!” எனவும்,**

**- கழகத் தலைவர் - முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.**



தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

நாடாளுமன்றத்திலும், சட்டமன்றங்களிலும் மகளிருக்கு 33 விழுக்காடு இட ஒதுக்கீடு வழங்கும் மசோதா மக்களவையில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. மகளிர் மீது பா.ஜ.க.வுக்கு உண்மையான அக்கறை இருந்திருக்குமானால், ஆட்சிக்கு வந்ததும் இதனைக் கொண்டு வந்திருப்பார்கள்.

### கடந்த 9 ஆண்டுகளாக ஏன் மகளிர் மசோதாவை நிறைவேற்றவில்லை?

சர்ச்சைக்குரிய வேளாண் சட்டங்கள், குடியுரிமைத் திருத்தச் சட்டம், காஷ்மீர் சிறப்பு அந்தஸ்து பறிப்பு சட்டம் மற்றும் முற்பட்ட சாதியினருக்கு 10% இடஒதுக்கீடு வழங்கும் சட்டம் போன்றவற்றைக் கடும் எதிர்ப்புக்கு இடையில் அவசர கதியில் பிடிவாதமாக நிறைவேற்றிய பா.ஜ.க. அரசு - அவற்றுக்காகக் காட்டிய அவசரத்தையோ முனைப்பையோ, எல்லோரும் வரவேற்கும் மகளிர் மசோதாவை நிறைவேற்ற கடந்த 9 ஆண்டுகாலமாகக் காட்டவில்லை. இப்போது, நாடாளுமன்றத் தேர்தல் நெருங்கி வரும் நிலையில், தோல்வி பயம் பா.ஜ.க.வினரை வாட்டி வரும் நிலையில் மகளிருக்கு 33 விழுக்காடு இட ஒதுக்கீட்டை வழங்கி - ஒரு சாதனையைச் செய்துவிட்டதாக காட்டிக் கொள்கிறார்கள்.

2016ஆம் ஆண்டு மார்ச் 8-ஆம் தேதி மகளிர் நாள் அன்று நாடாளுமன்றத்தின் மக்களவை - மாநிலங்களவை ஆகிய இரண்டிலும் அனைத்துக் கட்சிகளையும் சேர்ந்து பெண் எம்.பி.கள் அனைவரும் சேர்ந்து இதற்காக குரல் கொடுத்தார்கள். ‘33 விழுக்காடு இடஒதுக்கீடு என்ன ஆனது?’ என்று கேட்டார்கள். அப்போது பா.ஜ.க. அரசு வாய் திறக்கவில்லை. வாய் திறக்க ஏழு ஆண்டுகள் ஆகி இருக்கிறது. பெண்கள் சமுதாயத்தின் மீது உண்மையான அக்கறையில் இந்த மசோதாவைக் கொண்டு வரவில்லை என்பது இதன் மூலம் தெரியவில்லையா?

### பெண்களுக்கான அங்கீகாரம் தி.மு.க. தொடர்ந்து வலியுறுத்துகிறது!

சாதி வேறுபாடுகளற்ற சமத்துவமும், பாலின சமத்துவமும் நாகரிக சமூகத்தின் அடையாளங்கள் ஆகும். சாதி வேறுபாடுகள் அற்ற சமத்துவத்தை உருவாக்கவே சமூகநீதிக் கோட்பாட்டை தொடர்ந்து வலியுறுத்தி வருகிறோம். பாலின சமத்துவம் என்பது அனைத்து வகையிலும், அனைத்து இடங்களிலும் பெண்ணுக்கு உரிய அதிகாரத்தை வழங்குவது ஆகும்.

> **“சுமார் 27 ஆண்டுகளாக இந்த மசோதா நிலுவையில் உள்ளது. 1996-ஆம் ஆண்டு தி.மு.க. அங்கம் வகித்த ஒன்றிய அரசில் மகளிர் இடஒதுக்கீடு மசோதா முதன்முதலாக தாக்கல் செய்யப்பட்டது. 2005-ஆம் ஆண்டும் தி.மு.க. இடம்பெற்ற ஒன்றிய அரசு இதனைத் தாக்கல் செய்தது. முதலில் ஆதரிப்பதாகச் சொன்ன பா.ஜ.க. எதிர்த்தது. பா.ஜ.க. பெண் உறுப்பினரான உமா பாரதியே இதனைக் கடுமையாக எதிர்த்தார். கடந்த காலத்தில் இதை எதிர்த்தவர்களில் தற்போதைய உ.பி. முதல்வர் யோகி ஆதித்யநாத்தும் முக்கியமானவர்.”**

அதற்கு முதலில் அவர்களுக்கு உரிய இடங்களை வழங்க வேண்டும். இதையே தொடர்ந்து திராவிட முன்னேற்றக் கழகம் வலியுறுத்தி வருகிறது. ஆட்சி அமையும் போதெல்லாம் செயல்படுத்திக் காட்டியும் வருகிறது.

* பெண்களுக்குச் சொத்தில் சம உரிமைச் சட்டம்.
* பெண் காவலர்கள் நியமனம்
* அரசுப் பணியிடங்களில் பெண்களுக்கு 40 விழுக்காடு இடஒதுக்கீடு.
* உள்ளாட்சித் தேர்தலில் பெண்களுக்கு 33 விழுக்காடு இடஒதுக்கீடு.
* பெண்கள் தம் சொந்தக் காலில் நிற்க வசதியாக மகளிர் சுய உதவிக் குழுக்களை அமைத்தது.
* ஒடுக்கப்பட்ட சமூகப் பெண்களுக்கு

தொடர்ச்சி 4 ஆம் பக்கம்

## தென்னிந்தியாவின் பிரதிநிதித்துவத்தைக் குறைக்க அரசியல் சூழ்ச்சி!

# மகளிர் இட ஒதுக்கீடு மசோதாவை திடீரெனக் கொண்டு வருவது ஏன்?

## மக்களவையில் கழகக் குழு துணைத் தலைவர் கனிமொழி கருணாநிதி கேள்வி!

**புதுடெல்லி, செப். 22-**

**“மகளிர்” இட ஒதுக்கீடு மசோதாவை ரகசியமாகக் கொண்டு வருவது ஏன்?” என்று நாடாளுமன்ற மக்களவையில் கழகக் குழு துணைத் தலைவர் கனிமொழி கருணாநிதி கேள்வி எழுப்பினார்.**

பெண்களுக்கு 33 சதவிகித இட ஒதுக்கீடு வழங்கும் மசோதா நாடாளுமன்றத்தில் 19.9.2023ஆம் தேதி தாக்கல் செய்யப்பட்ட நிலையில் நேற்றுமுன்தினம்(20.9.2023) அதன் மீதான விவாதம் நடந்தது. இந்த விவாதத்தில் திமுக துணைப் பொதுச் செயலாளரும் மக்களவை தி.மு.க. துணைத் தலைவருமான கனிமொழி கருணாநிதி பேசினார்.

இதுகுறித்து அவரது உரை வருமாறு:-

“நான் மகளிர் இட ஒதுக்கீட்டு மசோதாவில் உரையாற்றுவதற்காக மகிழ்கிறேன். இதுபோன்ற வெகு சில மசோதாக்கள்தான் நாம் அனைவரும் ஏற்கும் வகையில் உள்ளது. ஏனென்றால், அனைவருடைய ஒத்துழைப்போடும் இந்த மசோதா நிறைவேற்றப்பட உள்ளது. ஆனால் துரதிர்ஷ்டவசமாக பாரதிய ஜனதா இந்த சட்ட மசோதாவையும் தனது குறுகிய அரசியலுக்கு பயன் படுத்திக் கொள்ள முயற்சிக்கிறது.

இந்த விவாதத்தில் நான் பேசத் தொடங்கும்போதே எதிர்ப்புக் குரல் எழுப்புகிற பி.ஜே.பி.யினருக்கு தந்தை பெரியார் சொன்னதை நினைவு படுத்துகிறேன். ‘பெண்களை மதிக்கிறோம், அவர்களின் சுதந்திரத்திற்காக பாடுபடுகிறோம் என்ற ஆண்களின் பேச்சுகள் பெண்களை ஏமாற்றும் சூழ்ச்சி மட்டுமே’ என பெரியார் கூறியதை நினைவுபடுத்துகிறேன். மேலும் சிலியின் முன்னாள் அதிபர் மெஷல் பாஷிலே, ‘சிறப்பான ஜனநாயகம் என்பது பெண்கள் வாக்களிப்பது மட்டுமல்ல... பெண்கள் தேர்வு செய்வது மட்டுமல்ல... பெண்களை தேர்வு செய்யப்படுவதும் ஆகும்’ என்கிறார்.

1910களில் Montagu-Chelmsford Reforms சீர்திருத்தத்துக்குப் பிறகு அப்போதைய மெட்ராஸ் மாகாணத்திலும், பாம்பே மாகாணத்திலும் பெண்களுக்கு வாக்களிக்கும் உரிமை பெற்றார்கள். நீதிக் கட்சி 1921 ஆம் ஆண்டு மே 10 ஆம் தேதி பெண்களுக்கு ஓட்டுரிமை அளிக்கும் தீர்மானத்தை இந்தியாவிலேயே முதல் முறையாக நிறைவேற்றினார்கள்.

### டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி!

1927 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்தியாவிலேயே முதல் முறையாக தனது முதல் சட்டமன்ற உறுப்பினரை தேர்ந்தெடுத்தது. அவர்தான் டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி. தேவதாசி என்னும் பெண்களுக்கு எதிரான கொடுமையை ஒழித்தவர் அவர்தான்.



இப்படிப்பட்ட பின்னணியில் 100 ஆண்டுகளுக்குப் பிறகும் நாம் மகளிர்க்கு 33% இட ஒதுக்கீடு அளிக்கும் மசோதாவை இன்னமும் நிறைவேற்றவில்லை. 1929 ஆம் ஆண்டு செங்கல்பட்டில் நடந்த சுயமரியாதை மாநாட்டில் தந்தை பெரியார், பெண்களுக்கு கல்வி, வேலைவாய்ப்பு மற்றும் அரசியலில் இட ஒதுக்கீடு வேண்டும் என்ற தீர்மானத்தை நிறைவேற்றினார்.

பெண்களுக்கான இட ஒதுக்கீடு மசோதா முதன்முறையாக 1996 ஆம் ஆண்டு ஐக்கிய முன்னணி ஆட்சியில் தி.மு.க.வின் ஆதரவோடு நாடாளுமன்றத்தில் கொண்டுவரப்பட்டது. தேவகவுடா அவர்கள் பிரதமராக இருந்தபோது சட்ட அமைச்சர் ராம்நாத் கலாப் கொண்டுவந்தார். மீண்டும் எங்களது மரியாதைக்குரிய முன்னாள் பிரதமர் வாஜ்பாய் அவர்கள் இந்த மசோதாவை கொண்டு வந்தார்.

ஆனால் 2010 இல் ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசில் இந்த மசோதா ராஜ்யசபாவிலே நிறைவேற்றப்பட்டது. அப்போது அந்த மசோதா குறித்த விவாதத்தின் மீதான உரையாற்றும் நல்வாய்ப்பு எனக்கு கிடைத்தது. 13 ஆண்டுகளுக்கு முன்பே இந்த மசோதா மீதான விவாதத்தில் கலந்துகொண்டு பேசினேன். 13 ஆண்டுகளுக்குப் பிறகு இப்போதும் விவாதித்துக் கொண்டுதான் இருக்கிறோம்.

### கலைஞர் கடிதம்!

இந்த பெண்களுக்கான இட ஒதுக்கீடு மசோதா என்பது பா.ஜ.க.வின் தேர்தல் வாக்குறுதியாக இருந்தது. பா.ஜ.க. ஆட்சிக்கு வந்ததும் பல தலைவர்கள் இந்த மசோதாவை நிறைவேற்ற வேண்டும் என்று கோரிக்கை வைத்தோம். எங்களது தலைவர் கலைஞர் 2014 இல் இந்த மசோதாவை நிறைவேற்ற வேண்டும் என்று பிரதமருக்கு கடிதம் எழுதினார். திருமதி. சோனியா காந்தி 2017 ஆம் ஆண்டு இந்த மசோதாவை நிறைவேற்ற வேண்டும் என்று பிரதமருக்கு வேண்டுகோள் வைத்தார். எங்களது முதலமைச்சர் ஸ்டாலின் 2017 இல் இந்த மசோதாவை நிறைவேற்றுமாறு பிரதமருக்கு மீண்டும் வேண்டுகோள் வைத்தார். நம் நாட்டில் பெண்களுக்கான அதிகாரமளிக்கும் இந்த இட ஒதுக்கீடு மசோதாவை இன்னமும் நிறைவேற்ற முடியாமல் போராடிக் கொண்டிருப்பது கவலையளிப்பதாகவும் அப்போது அவர் குறிப்பிட்டார்.

பெண்களுக்கான இட ஒதுக்கீட்டை வலியுறுத்தி தி.மு.க. டெல்லியில் பேரணி நடத்தியது. ஒருமித்த கருத்து கொண்ட பெண்ணிய அமைப்புகள் இந்த பேரணியில் கலந்துகொண்டனர். இந்த விவகாரம் தொடர்பாக இந்த அவையில் நான் பல முறை பேசியிருக்கிறேன். பல முறை இது தொடர்பாக கேள்வி எழுப்பியிருக்கிறேன். அப்போதெல்லாம் அரசு சார்பில் சொல்லப்பட்டதெல்லாம், ‘நாங்கள் இந்த மசோதா தொடர்பாக சம்பந்தப்பட்ட அனைவருடன் பேசி ஒருமித்த கருத்தை ஏற்படுத்த முயற்சித்துக் கொண்டிருக்கிறோம்’ என்பதுதான்.

இப்போது என்ன ஒருமித்த கருத்து ஏற்பட்டது, மசோதாவைக் கொண்டுவரும் முன் என்ன விவாதங்கள் நடத்தப்பட்டது என்பதை அறிய விரும்புகிறேன். இந்த மசோதா ரகசியமாக கொண்டுவரப்பட்டிருக்கிறது. இந்த சிறப்பு நாடாளுமன்றக் கூட்டத் தொடர் எதற்காக கூட்டப்படுகிறது என்பதை முன்கூட்டியே சொல்லவில்லை. அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் கூட இந்த மசோதா கொண்டுவரப் படுகிறது என்பதை அரசியல் தலைவர்களுக்கு தெரிவிக்கவில்லை. உரையாடல் நடத்தப்படவில்லை.

### சீருடை மாற்றம்!

திடீரென எங்களது கணினித் திரைகளில் இந்த மசோதா கொண்டு வரப்பட்டிருக்கிறது. நாடாளுமன்றப் பணியாளர்களின் சீருடை திடீரென தாமரைக்கு மாற்றப்பட்டதைப் போல இந்த மசோதாவும் திடீரென கொண்டுவரப்பட்டிருக்கிறது.

மகாகவி பாரதி பாடுகிறார், ‘பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதும் பாரினில் பெண்கள் நடத்த வந்தோம்... எட்டும் அறிவினில் ஆணுக்கு இங்கே பெண் இளைப்பில்லை காணென்று கும்மியடி’ என்று. இந்தியாவின் கோடானு கோடி சகோதரிகள் இந்த மசோதாவுக்காக காத்திருந்தார்கள். இன்னும் இந்த மசோதா எப்போது சட்ட வடிவமாகி அமலுக்கு வரும் என்று எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்.

2010 இல் ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசில் பெண்கள் இட ஒதுக்கீடு மசோதா கொண்டுவரப்பட்ட போது எந்த நிபந்தனைகளும் விதிக்கப் படவில்லை. நிறைவேற்றப்பட்ட உடனேயே கொண்டுவரப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. ஆனால் இப்போது கொண்டுவரப்பட்டிருக்கும் மசோதாவில் மக்கள் தொகைக் கணக்கெடுப்புக்குப் பின், அதை யடுத்து தொகுதி மறுவரையறைக் குப் பின்னர்தான் அமல்படுத்தப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சி 4 ஆம் பக்கம்

இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
வெள்ளிக்கிழமை 22-09-2023

# இப்போதுதான் புரிகிறதா?

இந்தியாவின் முதல் தலைமை அமைச்சர் ஜவஹர்லால் நேருவைப் பற்றி இன்றைய தலைமை அமைச்சர் மோடி அவர்களுக்கு இப்போதுதான்புரிகிறது. பத்தாண்டுகாலம்நேருஎதிர்ப்புபிரச்சாரத்தைச் செய்து வந்த மோடி அவர்கள், புதிய நாடாளுமன்றத்துக்குப் புறப்படுவதற்கு முன்னால் ஆற்றிய உரையில் நேருவைப் புகழ்ந்துவிட்டார். அதற்காகவே அவரை பாராட்டத்தான் வேண்டும்.

**ஒன்றிய கல்வித் துறை அமைச்சகத்தின் கீழ் உள்ள அமைப்பு இந்திய வரலாற்று ஆராய்ச்சிக் கவுன்சில். 2021 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 15 ஆம் நாள் இந்த அமைப்பு வெளியிட்ட பதாகையில் ஜவஹர்லால் நேருவின் படமும் இல்லை, மௌலானா அபுல் கலாம் ஆசாத் படமும் இல்லை. சுதந்திரப் போராட்டத்தில் பங்கெடுத்து 9 ஆண்டுகள் சிறையில் இருந்த நேருவின் படமே மறைக்கப்பட்டது. நேருவின் பெயரை 2022ஆம் ஆண்டு சுதந்திர தின உரையில் பிரதமர் நரேந்திரமோடி குறிப்பிடவில்லை.**

**டெல்லியில் நேரு நினைவு அருங்காட்சியகம் மற்றும் நூலகம் இருக்கிறது. இதன் பெயரையே பிரதமர் அருங்காட்சியகம் மற்றும் நூலகச் சங்கம் என்று மாற்றி விட்டார்கள். முன்னாள் பிரதமர் லால் பகதூர் சாஸ்திரி அவர்களால் உருவாக்கப்பட்டது இது. இதனை முன்னாள் துணை குடியரசுத் தலைவர் ராதாகிருஷ்ணன் திறந்து வைத்தார். அத்தகைய புகழுக்குரியது இது. இதன் பெயராக இருந்த நேரு பெயரை கடந்த ஆகஸ்ட் 14 அன்றுதான் தூக்கினார்கள்.**

கோவா பிரச்சினையில் பிரதமர் நேரு சரியாக நடந்து கொள்ளவில்லை, தனது உலகளாவிய இமேஜை காப்பாற்றிக் கொள்வதில் தான் அக்கறை செலுத்தினார் என்று நாடாளுமன்றத்தில் 2022 பிப்ரவரி மாதம் பேசினார் பிரதமர் மோடி.

“காந்தி, நேரு என குடும்பப் பெயர்களில் 600 திட்டங்கள் இருந்ததாகச் செய்தி படித்தேன். அவர்களுடைய தலைமுறையைச் சேர்ந்தவர்கள் ஏன் நேருவின் பெயரை குடும்பப் பெயராக வைப்பது இல்லை? நேருவின் பெயரை எங்காவது நாங்கள் குறிப்பிட மறந்துவிட்டால் காங்கிரசார் அப்செட் ஆகிறார்கள். நேரு மிகப்பெரிய மனிதர். பிறகு ஏன் அவரது பெயரை யாரும் குடும்பப் பெயராகப் பயன்படுத்துவது இல்லை? நேரு பெயரை பயன்படுத்துவதில் உங்களுக்கு என்ன அவமானம்? பயம்?” என்று கடந்த பிப்ரவரி மாதம் மாநிலங்களவையில் பேசினார் பிரதமர் மோடி.

பெரோஸ் காந்தி – என்ற பெயரை வைத்தே இந்திரா காந்தி, ராஜீவ் காந்தி, ராகுல் காந்தி எனச் சொல்லப்பட்டது. இதனை தான் ‘நேரு’ என்று ஏன் வைக்கவில்லை என்று நாடாளுமன்றத்தில் கேட்டார் பிரதமர்.

காஷ்மீர் விவகாரத்தில் நேரு சரியாக நடந்து கொள்ளவில்லை என்று விமர்சித்தார் ( 2022 அக்டோபர்) பிரதமர். நேருவுக்கும் இந்திய ஜனநாயகத்துக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்று (2018 பிப்ரவரி) நாடாளுமன்றத்திலேயே குற்றம் சாட்டினார் பிரதமர் மோடி. இப்படி எல்லாம் தொடர்ந்து நேருவை அவமானப்படுத்தி வந்தவர் தான் பிரதமர் மோடி. ஆனால் இப்போது நாக்கை அப்படியே திருப்பிப் போட்டுவிட்டார்.” ‘உலகம் உறங்கிக் கொண்டிருக்கும் போது இந்தியாவே விழித்துக் கொண்டிருக்கிறது’ என்ற பிரதமர் நேருவின் பேச்சு தான் உலகமெங்கும் பெரும் பாராட்டைப் பெற்றது. அந்தப் பேச்சு தற்போது நமக்கு உற்சாகத்தை அளிக்கிறது” என்று சொல்லி இருக்கிறார் பிரதமர் மோடி. நேரு,சாஸ்திரி, இந்திரா, நரசிம்மராவ், வாஜ்பாய் என்று பல்வேறு பிரதமர்கள் தங்கள் சிறப்பான தலைமையை வெளிப்படுத்தி இருக்கிறார்கள் என்றும் குறிப்பிட்டு இருக்கிறார்.

இந்திரா காந்தி காலத்தில் வங்க தேசம் உருவானதையும் நினைவூட்டி இருக்கிறார் பிரதமர். இராஜேந்திர பிரசாத், அண்ணல் அம்பேத்கர், மாவீரன் பகத்சிங் ஆகியோரையும் நினைவு கூர்ந்துள்ளார் பிரதமர்.

இந்திய நாடாளுமன்ற ஜனநாயக வரலாற்றை இப்போதுதான் அவர் படிக்க ஆரம்பித்து பேசுகிறார் என்பதை இதன் மூலமாக உணர முடிகிறது. இதற்கே ஒன்பது ஆண்டுகள் ஆகிவிட்டது!

**ஒன்பது ஆண்டுகள் - ஒன்பது முறை - ஒன்பது சிறைகளில் இந்தியாவின் விடுதலைக்காக அடைக்கப்பட்டு இருந்தவர் நேரு. ‘என்னுடைய அரசியல் வாரிசு நேருதான்’ என்று காந்தி சொன்னார். ‘விடுதலை பெற்ற இந்தியாவின் தலைமை மகுடம் நேருவுக்குத்தான் போகவேண்டும், ஏனென்றால் அவர்தான் முழுமையான இந்தியர்’ என்றும் காந்தி சொன்னார். அத்தகைய ஆட்சியை தான் நேருவும் வழங்கினார்.**

பல்வேறு மொழி பேசும் மக்கள் ஒற்றுமையாக வாழ மொழி வாரி மாகாணங்களை உருவாக்கிக் கொடுத்தார். இந்தி பேசாத மக்கள் விரும்பும் வரை இந்தி அவர்கள் மீது திணிக்கப்பட மாட்டாது என்று உறுதி அளித்தார். ஐந்தாண்டுத் திட்டங்களைக் கொண்டுவந்து – அனைத்து மாநிலங்களுக்கும் பல்வேறு திட்டங்களை உருவாக்கிக் கொடுத்தார். வறுமை ஒழிப்புத் திட்டங்களை செயல்படுத்தினார். அனைத்து மாநிலங்களிலும் பொதுத்துறை நிறுவனங்களை உருவாக்கித் தந்தார். மதச்சார்பற்ற மனிதராக அவர் இருந்தார். சகோதரத்துவத்தை வலியுறுத்தினார். நாடாளுமன்ற ஜனநாயகத்துக்கு முக்கியத்துவம் கொடுத்தார். அனைத்து தரப்பும் விவாதம் செய்யும் களமாக நாடாளுமன்றத்தை நடத்திக் காட்டினார். மதச்சார்பின்மையின் இலக்கணமாகத் திகழ்ந்தார். கூட்டாட்சி நெறிமுறைகளை அவர் அடிக்கடி பேசினார். அணிசேராக் கொள்கையை கடைப்பிடித்தார். அதனால் உலகத் தலைவர்கள் அனைவரும் அவரை வணங்கினார்கள்.

இத்தகைய நேருவின் பெருமையை மறைக்கப் பார்த்தார்கள். முடியவில்லை. பாராட்டத் தொடங்கிவிட்டார்கள். நல்ல மாற்றம் தான்!

## மசோதாவை காங்கிரஸ் ஆதரிக்கிறது!

# சாதிவாரி கணக்கெடுப்பு உடனே நடத்தப்பட வேண்டும்!

### மக்களவையில் சோனியா காந்தி பேச்சு!




**புதுடெல்லி, செப்.22–**

**நாடாளுமன்ற மக்களவையிலும் மாநிலச் சட்டமன்றங்களிலும் யூனியன் பிரதேசச் சட்டமன்றங்களிலும் பெண்களுக்கு 33 சதவீத இடஒதுக்கீடு அளிக்க வழிவகை செய்யும் மசோதா மக்களவையில் நேற்று முன்தினம் தாக்கல் செய்யப்பட்டது. காங்கிரஸ் சார்பில் உரையாற்றிய சோனியா காந்தி இந்த மசோதாவுக்கு ஆதரவு தெரிவித்தார்.**

**தனது கணவர் ராஜீவ்காந்தியின் கனவு நிறைவேறுகிறது என்று அவர் உருக்கமாகக் குறிப்பிட்டார். மகளிர் இட ஒதுக்கீட்டில் பிற்பட்டோருக்கு உள்ஒதுக்கீடு அளிக்கப்பட வேண்டும் என்று அவர் யோசனை தெரிவித்தார். சாதிவாரி கணக்கெடுப்பை உடனே நடத்த வேண்டும் என அவர் வற்புறுத்தினார்.**

நாடாளுமன்ற இறப்புக் கூட்டத் தொடர் பழைய கட்டடத்தில் தொடங்கியது. நேற்று முன்தினம் பிற்பகல் புதிய கட்டடத்தில் நாடாளுமன்றம் செயல்படத் தொடங்கியது. மக்களவையிலும் சட்டமன்றங்களிலும் பெண்களுக்கு 33 சதவீத இட ஒதுக்கீடு அளிக்க வழிவகை செய்யும் “நாரி சக்தி வந்தன் அதிநியம்'', ஒன்றிய அமைச்சர் அர்ஜுன் ராம் மெக்வால் நேற்று தாக்கல் செய்தார்.

இந்நிலையில், மக்களவையில் நேற்று முன்தினம் காலை 11 மணி அளவில் விவாதம் தொடங்கியது. 7 மணி நேரம் விவாதம் நடைபெறும் என அறிவிக்கப்பட்டது. காங்கிரஸ் கட்சி சார்பில் சோனியா காந்தி உரையாற்றினார்.

அப்போது அவர் பேசியதாவது:

“சட்டமன்றத்திலும், நாடாளுமன்றத்திலும் பெண்களுக்கு 33% இட ஒதுக்கீடு வழங்கும் ‘நாரி சக்தி வந்தன்’ (பெண் சக்திக்கு வணக்கம்) மசோதாவை காங்கிரஸ் ஆதரிக்கிறது. எனது தனிப்பட்ட வாழ்க்கையிலும் இது ஒரு உணர்வுப்பூர்வமான தருணம். பெண்களுக்கு உள்ளாட்சித் தேர்தலில் இட ஒதுக்கீடு கொண்டு வர முதல்முறையாக முயன்றவர் எனது கணவர் ராஜிவ் காந்தி. ஆனால், அந்த மசோதா மாநிலங்களவையில் 7 வாக்குகள் வித்தியாசத்தில் தோற்கடிக்கப்பட்டது.

அதன் பிறகு பி.வி. நரசிம்ம ராவ் ஆட்சிக் காலத்தில் அந்த மசோதா நிறைவேற்றப்பட்டது. இதன் மூலம், இன்று நாட்டில் 15 லட்சம் தேர்ந்தெடுக்கப்பட்ட பெண் தலைவர்கள் உருவாகி இருக்கிறார்கள். இதன் மூலம் ராஜிவ் காந்தியின் கனவு ஓரளவு நனவானது.

சட்டமன்றம் மற்றும் நாடாளுமன்றத்திலும் பெண்களுக்கு 33% இட ஒதுக்கீடு வழங்கும் இந்த சட்டம் நிறைவேறினால் தான் அவரது கனவு முழுமையாக நனவாகும்.

இந்த மசோதா நிறைவேறுவதில் நாங்கள் மகிழ்ச்சி அடைகிறோம். அதேநேரத்தில், காங்கிரஸ் தலைமையிலான முந்தைய ஆட்சிக்காலத்தில் இந்த மசோதா மாநிலங்களவையில் நிறைவேற்றப்பட்டது.

அவ்வாறு நிறைவேற்றப்பட்டு 13 ஆண்டுகளாக இந்திய பெண்கள் காத்திருக்கிறார்கள். இன்னும் எத்தனை ஆண்டுகளுக்குக் காத்திருப்பது? இந்திய பெண்களை இவ்வாறு காத்திருக்க வைப்பது சரியா? இந்த மசோதா நிறைவேற்றப்பட்டு உடனடியாக அமல்படுத்தப்பட வேண்டும்.

இது நம் தேசத்தின் வரலாற்றில் நிச்சயமாக புதிய திருப்பத்தை ஏற்படுத்தும். இந்த மசோதாவை காலம் தாழ்த்தாமல் நிறைவேற்றுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு சோனியா காந்தி தெரிவித்தார்.

## 12, 500 கன அடி நீரை உடனடியாக கர்நாடகம் திறக்க வேண்டும்!

# காவிரி விவகாரம் - உச்சநீதிமன்றம்தான் ஒரே நம்பிக்கை!

### நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் பேட்டி



**புதுடெல்லி, செப்.22–**

**காவிரி விவகாரத்தில் உச்ச நீதிமன்றம்தான் தமிழ்நாட்டுக்கு இருக்கும் ஒரே நம்பிக்கை என நீர்வளத் துறை அமைச்சர் துரைமுருகன் தெரிவித்துள்ளார்.**

தமிழ்நாட்டுக்கு தர வேண்டிய தண்ணீரை, கர்நாடக அரசு உடனடியாக திறந்துவிடுமாறு ஒன்றிய அரசு உத்தரவிட வலியுறுத்தி, ஒன்றிய நீர்வளத் துறை மந்திரி கஜேந்திர சிங் ஷெகாவத்தை, நீர்வளத் துறை அமைச்சர் துரைமுருகன் தலைமையில் தமிழ்நாட்டின் அனைத்துக் கட்சி எம்.பி.க்கள் சந்தித்து கோரிக்கை மனு அளித்தனர்.

இந்நிலையில், காவிரி வழக்கு உச்சநீதிமன்றத்தில் விசாரணைக்கு வர உள்ள சூழலில், தமிழ் நாடு அரசு சார்பில் காவிரி வழக்கில் ஆஜராகி வரும் மூத்த வழக்கறிஞர் முகுல் ரோத்தகியுடன் டெல்லியில் அமைச்சர் துரைமுருகன் ஆலோசனை மேற்கொண்டார்.

ஆலோசனைக்குப் பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அமைச்சர் துரைமுருகன், கூறுகையில் காவிரி விவகாரத்தில் ஆரம்பம் முதல் உச்சநீதிமன்றம்தான் தமிழ்நாட்டுக்கு தீர்வை வழங்கி வருவதாகத் தெரிவித்தார். நடுவர் மன்றம் அமைத்தது முதல் காவிரி ஆணையம் அமைக்கப்பட்டது வரை உச்சநீதிமன்ற உத்தரவுப்படியே நடைபெற்று வருவதாகக் குறிப்பிட்ட அமைச்சர் துரை முருகன், காவிரி வழக்கில் உச்சநீதிமன்றம்தான் தமிழ்நாட்டுக்கு ஒரே நம்பிக்கை எனத் தெரிவித்தார். தொடர்ந்து பேசிய அமைச்சர் துரைமுருகன், தமிழ்நாட்டின் உடனடித் தேவைக்கு 12 ஆயிரத்து 500 கன அடி நீரை திறக்க, உச்ச நீதிமன்றத்தில் கோரிக்கை வைக்க உள்ளதாகவும் தெரிவித்தார்.



நாகையில் இருந்து இலங்கைக்கு கப்பல் போக்குவரத்து தொடங்க நாகை துறைமுகத்தில் ஆய்வு மேற்கொண்ட பொதுப்பணித்துறை, நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு, துறைமுகம் ஆழப்படுத்தும் பணியை தொடங்கி வைத்து ஆய்வு மேற்கொண்டார். உடன் நாகை மாவட்டக் கழகச் செயலாளரும், தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத் தலைவருமான என்.கௌதமன், தாட்கோ தலைவர் உ.மதிவாணன், கூடுதல் தலைமைச் செயலாளர் பிரதீப்யாதவ், கீழ்வேளூர் சட்டமன்ற உறுப்பினர் நாகைமாலி, தலைமைச் செயற்குழு உறுப்பினர் இல.மேகநாதன், மாநில மீனவர் அணி துணைச் செயலாளர் ஜி.மனோகரன், மாவட்டக் கழக பொருளாளர் மு.லோகநாதன், மாவட்ட ஊராட்சித் தலைவர் உமாமகேஸ்வரிசங்கர், நகரக் கழகச் செயலாளர்கள் இரா.மாரிமுத்து, எம்.ஆர்.செந்தில்குமார், ஒன்றியக் கழகச் செயலாளர்கள் மகா.குமார், சிக்கல் என்.ஆனந்த், மங்கை எம்.சங்கர் மற்றும் பலர் உள்ளனர்.

## காலத்தால் அழிக்க முடியாத ஒரு கருவூலத்தை கலைஞருக்காக உருவாக்கிய விகடன்!

# நல்லவைகளை வரவேற்பதும் - அல்லாதவைகளை விமர்சிப்பதும்தான் பத்திரிகை தர்மம்!

## விகடன் குழுமத்தின் ‘கலைஞர் 100 – விகடனும் கலைஞரும்’ நூல் வெளியீட்டு விழாவில் பத்திரிகை – ஊடகத் துறையினருக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் வேண்டுகோள்!

**சென்னை, செப். 22 -**

**நல்லவைகளை வரவேற்பதும் - அல்லாதவைகளை விமர்சிப்பதும்தான் பத்திரிகை தர்மம் என விகடன் குழுமத்தின் ‘கலைஞர் 100 - விகடனும் கலைஞரும்’ நூல் வெளியீட்டு விழாவில் பத்திரிகை - ஊடகத் துறையினருக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளார்.**

**இதில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய உரை வருமாறு: -**

உரையினைத் தொடங்குவதற்கு முன்னால், வரவேற்புரை ஆற்றியிருக்கக்கூடிய சீனிவாசன் அவர்கள் இங்கே எடுத்து வைத்திருக்கக்கூடிய உரிமையோடு எடுத்து வைத்திருக்கக்கூடிய, நம்பிக்கையோடு எடுத்து வைத்திருக்கக்கூடிய, அவருடைய கோரிக்கைக்கு ஒரு விளக்கம் சொல்ல விரும்புகிறேன். அவர் எடுத்து வைத்திருக்கக்கூடிய கோரிக்கை நிச்சயம் நிறைவேற்றப்படும் என்ற நம்பிக்கையை முதலில் நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

### நிபுணர்கள் அடங்கிய தேர்வுக் குழு!

நாங்கள் ஆட்சிக்கு வரும் முன்னர் இந்த நூல்கள் வாங்கக்கூடிய விஷயத்தில் நடந்திருக்கக்கூடிய பல்வேறு தவறுகள் இங்கே சொல்லமுடியாது. சொல்வதும் முறையல்ல. ஆனால் அவைகள் எல்லாம் சரிசெய்யப்பட்டுக் கொண்டிருக்கிறது. சரி செய்வதற்கே இவ்வளவு நாட்கள் ஆகியிருக்கிறது. அதற்குள் நான் போக விரும்பவில்லை. சீனிவாசன் சொன்னது போன்று ஒளிவு மறைவற்ற நூல்களைத் தேர்வு செய்ய ஆன்லைன் வழியாக விண்ணப்பங்கள் பெற்று அதனை தேர்வு செய்ய நிபுணர்கள் அடங்கிய தேர்வுக்குழு அமைப்பதற்கான பணிகள் விரைவில் முடிக்கப்படும் என்பதை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

கூடுதலாக, இன்னொரு தகவல். கலைஞர் நூற்றாண்டு நூலகத்தில் நூல்கள் வாங்குவதற்கு 190 உறுப்பினர்கள் பரிந்துரைக்க, 20 துறை சார்ந்த நிபுணர்கள் தேர்வு செய்து மூன்றரை இலட்சம் புத்தகத்தை 50 கோடி ரூபாய்க்கு வாங்கியிருக்கிறோம் என்பதையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

### நான் மெய் மறந்துபோனேன்!

‘கலைஞர் 100 - விகடனும் கலைஞரும்’ என்ற புத்தகத்தை நாங்கள் தயாரித்திருக்கிறோம், அதற்கு நீங்கள் உங்களுடைய அணிந்துரையை வழங்கிட வேண்டும் என்று என்னிடத்தில் கோரிக்கை வைத்தார்கள். இந்தப் புத்தகத்தை எனக்கு அனுப்பி வைத்தார்கள். அதைப் பார்த்ததும் நான் மெய் மறந்து போனேன். மெய் சிலிர்த்துப் போனேன். மிகப் பிரமிப்பாக இருந்தது.

இப்போது எனக்கு இருக்கக்கூடிய கவலையெல்லாம் தலைவர் கலைஞர் அவர்கள் இருந்து இதைப் பார்க்கவில்லையே என்ற அந்த கவலைதான் என்னை இப்போது ஆட்கொண்டிருக்கிறது. அவர் பார்த்திருந்தால் மிகுந்த மகிழ்ச்சி அடைந்திருப்பார். ஆனால் அவர் இல்லை என்று சொன்னாலும் அவருடைய அன்பு மகனாக இருக்கக்கூடிய நான் அதைப் பார்த்து அவர் சார்பில், மகிழ்ச்சி அடைந்து கொண்டிருக்கிறேன்.

நம்முடைய முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களுடைய நூற்றாண்டு விழாவை, ஊடகங்களும் - ஊடகவியலாளர்களும் முக்கியமாக கலைஞரை கொண்டாடியாக வேண்டும்.

### கலைஞரை ஊடகத் துறையினர் போற்றுவது பொருத்தமானது!

பத்திரிக்கையாளர் - எழுத்தாளர் - அரசியல் ஆளுமை - திரையுலக கதை வசனகர்த்தா - நாடக நடிகர் - சின்னத்திரை வசனகர்த்தா என்று பன்முக ஆற்றலைக் கொண்டவர் கலைஞர் என்பதால், அவரை ஊடகத் துறையைச் சேர்ந்தவர்கள் அனைவருமே போற்றுவது பொருத்தமான ஒன்று.

அப்படிப்பட்ட கடமையைதான், ஆனந்த விகடன் மறக்காமல் - மறுக்காமல் இன்றைக்கு அதை நிறைவேற்றிக் கொண்டிருக்கிறார்கள். அந்த அடிப்படையில், இந்த நிகழ்ச்சியை சிறப்போடு நடத்திக் கொண்டிருக்கக்கூடிய நிர்வாக இயக்குநர் சீனிவாசன் அவர்களுக்கு என்னுடைய மனமார்ந்த நன்றியை உங்கள் அனைவரின் சார்பில் நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

பேரறிஞர் அண்ணா அவர்களை பற்றி ‘தி இந்து’ குழுமத்தின் சார்பில் தயாரிக்கப்பட்ட ‘மாபெரும் தமிழ்க் கனவு’. அதேபோல், தலைவர் கலைஞர் அவர்களை பற்றி தயாரிக்கப்பட்ட ‘தெற்கிலிருந்து ஒரு சூரியன்’ போல, விகடன் சார்பில்

‘கலைஞர் 100’ புத்தகத்தை இந்த மேடையில், நாம் பார்க்கிறோம், இனி அனைத்து மேடைகளிலும் இதைப் பார்க்கத்தான் போகிறோம்.

இது ஏதோ திராவிட முன்னேற்றக் கழகத்தின் தொண்டர்கள் - தோழர்கள் - பொறுப்பாளர்கள் மட்டுமல்ல, பத்திரிகையாளர்கள் - பொதுமக்கள் எல்லோரும் வாங்கிப் படித்துப் பகிர்ந்துகொள்ள வேண்டும் என்று நான் அன்போடு கேட்டுக் கொள்ள கடமைப் பட்டிருக்கிறேன்.

கலைஞர் 100 - வெளியிடுகின்ற ஆனந்த விகடன், இன்னும் சில ஆண்டுகளில் ‘விகடன் 100’ விழாவை காண இருக்கிறது. அதற்கு முன்கூட்டியே இந்த விழாவின் மூலமாக என்னுடைய வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். அந்த நிகழ்ச்சிக்கு நிச்சயமாக என்னை அழைப்பார்கள். நம்முடைய கலைஞானியையும் அழைப்பார்கள். ‘இந்து’ ராம் அவர்களையும் அழைப்பார்கள். இருந்தாலும் முன்கூட்டியே என்னுடைய வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்ள கடமைப் பட்டிருக்கிறேன்.

விகடன் தொடங்கப்பட்ட காலத்திலிருந்து திராவிட இயக்கத் தலைவர்களோடு ஆனந்த விகடன் நெருக்கமான நட்பைப் பெற்றிருந்தது. நம்முடைய பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியார் அவர்கள் ‘குடிஅரசு’ ஏட்டை நடத்தியபோது, அதற்கு அதிகப்படியான விளம்பரங்களை பெற்றுத் தந்தவர், யார் என்று கேட்டால், ஆனந்த விகடனின் பிதாமகரான எஸ்.எஸ். வாசன் அவர்கள்தான்.

### ‘வருக அண்ணாதுரை’ என்று தலையங்கம் தீட்டிய விகடன்!

அதேபோல் பேரறிஞர் அண்ணா அவர்களும் எஸ்.எஸ்.வாசன் அவர்களும் மிகமிக நெருக்கமாக இருந்தவர்கள். பேரறிஞர் அண்ணா அவர்கள் முதல்முறையாக முதலமைச்சராக 1967-ஆம் ஆண்டு வெற்றி பெற்று சட்டமன்றத்திற்கு உள்ளே வருகின்ற நேரத்தில் ‘வருக அண்ணாதுரை’ என்று விகடன் தலையங்கம் தீட்டியது.

அதுமட்டுமல்ல, திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய முதல் மாநாட்டின்போது தனியாக 8 பக்கம் சிறப்புப் பகுதியை வெளியிட்டதும் ஆனந்த விகடன்தான். இங்கே குறிப்பிட்டு நினைவுபடுத்தினார்கள், இரண்டாம் உலகத் தமிழ் மாநாடு. பேரறிஞர் அண்ணா அவர்கள் அதை சென்னையில் நடத்தியபோது, அலங்கார ஊர்திகள் தயாரிக்கின்ற பொறுப்பை எஸ்.எஸ்.வாசன் அவர்களிடம்தான் முதலமைச்சராக இருந்த அண்ணா அவர்கள் ஒப்படைத்து இருந்தார்கள்.

அன்றைக்குப் பொதுப்பணித் துறை அமைச்சராக இருந்த கலைஞர் அவர்களும், எஸ்.எஸ்.வாசன் அவர்களும் இணைந்து நடத்திய ஊர்வலம் மிகப்பெரிய பாராட்டுகளை பெற்றது.

### கலைஞரை பாராட்டிய எஸ்.எஸ்.வாசன்!

பேரறிஞர் அண்ணா அவர்கள் மறைந்தநேரத்தில், தலைவர் கலைஞர் அவர்கள் எழுதிய கவிதாஞ்சலி, இன்றைக்கும் கேட்டுக் கொண்டிருக்கிறோம். யாரும் அதை மறக்க முடியாது... அதில் கடைசியாக சொல்வார்.

‘இரவலாக உன் இதயத்தை தந்திடண்ணா’ என்று அந்தக் கவிதை எல்லாரையும் கலங்க வைக்கும்.

இந்தக் கவிதையை கேட்டு அதிகம் கலங்கினார் எஸ்.எஸ்.வாசன் அவர்கள். ‘உலகிலேயே இதயத்தை இரவலாகக் கேட்ட தலைசிறந்த கவிஞர் நீங்கள்தான்’ என்று வாசன் அவர்கள் கலைஞரை பாராட்டினார். இதை கலைஞர் அவர்களே பல மேடைகளில் குறிப்பிட்டுக் காட்டியிருக்கிறார்.

அதே நட்பானது எஸ்.எஸ்.வாசன் அவர்களின் புதல்வர் மரியாதைக்குரிய எஸ்.பாலசுப்பிரமணியம் அவர்களுக்கும் தலைவர் கலைஞர் அவர்களுக்கும் தொடர்பு இருந்தது. 1980-ஆம் ஆண்டு ‘ஆனந்த விகடன் பொன்விழா’ நடந்தது. அப்போது அ.தி.மு.க. ஆட்சி, எம்.ஜி.ஆர். அவர்கள் முதலமைச்சர். ஆனாலும், அந்த விகடன் பொன்விழாவிற்கு, பல நிகழ்ச்சி கள், அதில் கவியரங்க நிகழ்ச்சிக்கு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களைத்தான் இந்த விகடன் அழைத்தது.

கலைஞர் பேசினார், அதைக் கவிதையாகவே சொன்னார். “கொள்கையிலே வேறுபாடு இருந்தாலும் - அதைச் சொல்கையிலே பண்பாடு தேவை என்று செய்கையிலே காட்டியவன் விகடன் தானே!” என்று தலைவர் கலைஞர் அவர்கள் கவிதையால் பாராட்டினார்.

“எத்தனையோ அரசியல் மாறுபாடுகள் - கருத்து வேறுபாடுகள் இவற்றிற்கு இடையே எல்லாவற்றையும் கடந்து அன்பும், நட்பும், தூய்மையான பாசமும் இருவரிடையே நிலவிட முடியும் என்பதற்கு எடுத்துக்காட்டாக, ஒரு தோழமை வேண்டும் என்றால், அது நானும், பாலுவும் கொண்டுள்ள தோழமைதான்’- என்று தலைவர் கலைஞர் அவர்களே எழுதி இருக்கிறார். அந்தளவிற்கு இருவரும் நட்பாக இருந்தவர்கள்.

### சோலை என்னைப் பற்றி எழுதிய புத்தகம்!

மூத்த பத்திரிக்கையாளர், என்னுடைய அன்பிற்குரிய சோலை அவர்கள் என்ன பற்றி ஒரு புத்தகம் எழுதினார். 2010-ஆம் ஆண்டு விகடன் பிரசுரம்தான் வெளியிட்டது. ‘ஸ்டாலின் - மூத்த பத்திரிக்கையாளர் பார்வையில்’ என்ற தலைப்பில் அந்த புத்தக வெளியீட்டு விழா, சென்னை காமராசர் அரங்கில் மிகப் பிரமாண்டமாக நடத்தப்பட்டது.

இன்று கலைஞர் 100 நூலை விகடன் தயாரித்து வெளியிடுகிறது. எனவே, இந்த நட்பு என்பது காலம் காலமாக தொடரக்கூடிய ஒரு குடும்ப நட்பாக விளங்கிக் கொண்டிருக்கிறது!

இந்தப் புத்தகம் தலைவர் கலைஞர் பற்றிய கருவூலமாக அமைந்திருக்கிறது. இதைப் படிக்கும்போது தலைவர் கலைஞருடைய வாழ்க்கையோடு நாம் பயணிப்பதை போலவே அமைந்திருக்கிறது. இன்னும் சொல்லப்போனால், தலைவர் கலைஞர் அவர்களுடைய டைரியைப் போல இருக்கிறது என்றே சொல்லலாம். முக்கியமான காலக்கட்டத்தில், தலைவர் கலைஞர் அவர்கள் அளித்திருக்கக்கூடிய பேட்டிகள், நிருபர் களுக்கு தந்திருக்கக்கூடிய பதில்கள், விகடன் எழுதிய கட்டுரைகள் எல்லாம் இதில் இடம் பெற்றிருக்கிறது.

> *இந்தப் புத்தகம் தலைவர் கலைஞர் பற்றிய கருவூலமாக அமைந்திருக்கிறது. இதைப் படிக்கும்போது தலைவர் கலைஞருடைய வாழ்க்கையோடு நாம் பயணிப்பதை போலவே அமைந்திருக்கிறது. இன்னும் சொல்லப்போனால், தலைவர் கலைஞர் அவர்களுடைய டைரியைப் போல இருக்கிறது என்றே சொல்லலாம். முக்கியமான காலக்கட்டத்தில், தலைவர் கலைஞர் அவர்கள் அளித்திருக்கக்கூடிய பேட்டிகள், நிருபர்களுக்கு தந்திருக்கக்கூடிய பதில்கள், விகடன் எழுதிய கட்டுரைகள் எல்லாம் இதில் இடம் பெற்றிருக்கிறது.*

தன்னுடைய கலைப் பயணம் பற்றி 60 வாரங்கள் தலைவர் கலைஞர் அவர்கள் எழுதியிருக்கிற துணுக்குகளை படித்தாலே ஐம்பது ஆண்டு கால சினிமா உலகத்தை நாம் தெரிந்து கொள்ளலாம்.

1969-ஆம் ஆண்டு அண்ணா மறைவிற்கு பிறகு, தலைவர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக பொறுப்பேற்ற நேரத்தில், “கழகத்தின் முன்னேற்றத்திற்குப் பெருமளவு காரணமாக இருந்த கருணாநிதியின் ஆர்வமும் ஆற்றலும் அவரது நிர்வாகத்திலும் பிரதிபலித்து, தமிழகம் மேலும் முன்னேற்றம் அடைய வேண்டும் என்று விகடன் உளமார விரும்புகிறான்” - என்று 23.2.1969 தேதியிட்ட விகடன் தலையங்கம் எழுதி இருந்தது.

### கலைஞரே வருக! கருத்தான ஆட்சி தருக!

1989-ஆம் ஆண்டு மீண்டும் ஆட்சிக்கு வந்தபோது, ‘கலைஞரே வருக! கருத்தான ஆட்சி தருக’- என்று தலையங்கம் தீட்டியதும் ஆனந்த விகடன்தான். அப்படிப்பட்ட ஆட்சியை தான் கலைஞர் அவர்கள் தந்தார்கள்.

ஒவ்வொரு காலக்கட்டத்திலும், கலைஞர் அவர்கள் எடுத்த நிலைப்பாடுகளை இந்த நூலில் நாம் தெரிந்து கொள்ளமுடியும். கலைஞருடைய உழைப்பு, அறிவு, ஆற்றல் பற்றி தெரிந்து கொள்வதற்கு கருவூலமாக இந்த நூல் அமைந்திருக்கிறது. இந்த ஐம்பது ஆண்டு காலத்தில் கலைஞரை பற்றிய 108 பதிவுகள் இதில் இடம் பெற்றிருக்கிறது. இதற்கு மேல், மீதியை புத்தகத்தை வாங்கி நீங்களே படித்து தெரிந்து கொள்ளுங்கள்.

பத்திரிக்கை அதிபர்கள் எல்லாம் பெருமளவு இங்கே குழுமியிருக்கிறீர்கள். எனவே அவர்கள் குழுமியிருக்கக்கூடிய இந்த மேடையில், ஒரு ஆட்சி செயல்படுத்தி வருகிற நல்ல திட்டங்களை மனப்பூர்வமாக ஆதரித்து எழுதுங்கள். அப்படி எழுதினால்தான், நீங்கள் விமர்சிக்கும்போதும், அதற்கு உண்மையான மதிப்பும் மரியாதையும் இருக்கும்.

### நான்காவது தூணாக இருப்பது பத்திரிகைகள் தான்!

எதையும் ஆதரித்து எழுதாமல் - விமர்சித்து மட்டுமே எழுதினால், அந்த விமர்சனங்களுக்கு மதிப்பே இருக்காது. சரியானதை ஆதரிப்பதும், விமர்சனம் இருந்தால் அதை சுட்டிக் காட்டுவதும்தான் நடுநிலையான பத்திரிகைக்கு இருக்கக்கூடிய தர்மம்! அதன்படி தமிழ்நாட்டு ஊடகங்கள் செயல்பட வேண்டும் என்று மிகுந்த பணிவோடு நான் கேட்டுக் கொள்கிறேன். எனக்காக இல்லை, நாட்டுக்காக, நாட்டு மக்களுக்காக, இந்த சமுதாயத்திற்காக, இந்த இனத்திற்காக. ஏன் என்றால், இன்று ஜனநாயகம், மதச்சார்பின்மை, சகோதரத்துவம், சமூகநீதி ஆகியவை நெருக்கடிக்கு உள்ளாகியிருக்கிறது. இதை அரசியல்ரீதியாக நாங்கள் எதிர்கொண்டு தடுப்போம். ஆனால், அது மட்டும் போதாது.

ஜனநாயகத்தினுடைய நான்காவது தூணாக இருப்பது, போற்றப்படுவது, பத்திரிகைகள்தான். எனவே, தங்களுடைய கடமையை நீங்கள் செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

### பிரிட்டிஷ் ஆட்சியாளர்களால் விகடன் நெருக்கடிக்கு ஆளானது!

இந்து, ஆனந்த விகடன் போன்ற இதழ்கள் இந்தியாவின் விடுதலைப் போராட்டக் காலத்தில் வீறுகொண்ட போராட்டங்களை ஆதரித்த இதழ்கள். 1930-ஆம் ஆண்டும் - 1942-ஆம் ஆண்டும் பிரிட்டிஷ் ஆட்சியாளர்களால் ஆனந்த விகடன் நெருக்கடிக்கு உள்ளானது. ‘அடக்குமுறை நீண்ட நாள் தலைவிரித்தாட முடியாது’- என்று அப்போது ஆனந்தவிகடன் தலையங்கம் தீட்டியது.

‘இந்தியாவிற்கு சுதந்திரம் கொடுங்கள் என்று சொல்வது ஆட்சேபகரமானது என்றால் விகடனும் குற்றவாளிதான்’- என்று அப்போது துணிச்சலாக விகடன் தலையங்கம் எழுதியது!

அதே ஆனந்த விகடனில், கடந்த மாதம் 16.8.2023 இதழில் தீட்டப்பட்ட தலையங்கம் மிகமிக முக்கியமானது. ஒன்றிய அரசால் நாடாளுமன்றத்தில் அறிமுகம் செய்யப்பட்ட பத்திரிகை மற்றும் காலமுறை இதழ்கள் பதிவு மசோதாவை கண்டித்து அந்த தலையங்கம் இருந்தது.

### ஒன்றிய அரசின் மசோதாவைக் கண்டித்து விகடன் தலையங்கம்!

- கொடுமையான விதிகளுடன் ஒன்றிய அரசு கொண்டு வந்திருக்கும் புதிய மசோதா, பத்திரிகைச் சுதந்திரத்தை மிக மோசமாக நசுக்கும், அபாயகரமான விதிகளைக் கொண்டுள்ளது என்றும் -
- இவர்கள் செய்துள்ள திருத்தத்தின் மூலமாக செய்தித்தாள் பதிவாளர் - ஒரு செய்தித்தாள் நிறுவனத்துக்குள் நுழைந்து சோதனையிட முடியும் என்றும் -
- நாடாளுமன்றத்தில் சமீபத்தில் நிறைவேற்றப்பட்ட தனிநபர் தகவல் பாதுகாப்பு மசோதாவிலும், பத்திரிகைச் சுதந்திரத்தைப் பறிக்கும் பல அம்சங்கள் உள்ளன என்றும் -
- ஜனநாயகத்தின் நான்காம் தூணான பத்திரிகைச் சுதந்திரத்தைப் பறிக்கும் செயலை ஒன்றிய அரசு தொடர்ச்சியாகச் செய்து வருகிறது என்றும், ஆனந்த விகடன் கண்டித்து தலையங்கம் தீட்டி இருக்கிறது.

கடந்த ஏப்ரல் மாதம், ஒன்றிய அரசு அமல்படுத்திய தகவல் தொழில்நுட்பத் திருத்த விதிகள் 2023-ம், இதேபோன்ற மோசமான அம்சங்களை கொண்டிருந்தது என்று விகடன் தலையங்கம் கண்டித்திருக்கிறது. விமர்சனம் செய்பவர்களின் குரல்வளையை நெரிப்பது ஜனநாயகத்திற்கு அழகல்ல என்றும் சொல்லி இருக்கிறது விகடன்.

நான் சொல்லவில்லை. விகடன் தலையங்கம் சொல்லி இருப்பதைதான் இங்கே நான் சுட்டிக்காட்டியிருக்கிறேன். இதைத்தான் நான் வாசித்தேன். இதைத்தான் ஜனநாயகத்திற்கு ஏற்பட்டிருக்கிற நெருக்கடி என்று சொல்கிறேன். நான் அரசியல் பற்றிப் பேசவில்லை, ஜனநாயகத்தை பற்றி தான் பேசிக் கொண்டிருக்கிறேன்.

### எடிட்டர்ஸ் கில்டு அமைப்புக்கே இந்த நிலை!

மணிப்பூர் மாநிலம் நான்கு மாதங்களாக எரிந்து கொண்டு இருக்கிறது. அதை பற்றி நான் விவரிக்க விரும்பவில்லை. அது எல்லாருக்கும் தெரியும். மணிப்பூரில் என்ன நடக்கிறது என்று மூன்று வாரங்களாக விகடன் இதழிலேயே தொடர் கட்டுரை வெளியாகி இருக்கிறது. அங்கு உண்மையில் என்ன நடக்கிறது என்று தெரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காக எடிட்டர்ஸ் கில்டு ஆப் இந்தியா அமைப்பைச் சேர்ந்தவர்கள் சென்றார்கள். சென்று விட்டு அந்த அறிக்கையையும் கொடுத்தார்கள்.

அப்படி அறிக்கை கொடுத்தவர்கள் மீதே மணிப்பூர் அரசு வழக்கு போட்டிருக்கிறது. எடிட்டர்ஸ் கில்டு அமைப்புக்கே இந்த நிலைமை என்றால், யோசித்துப் பார்க்கவேண்டும். ஏன் உச்சநீதிமன்றத் தலைமை நீதிபதி கடுமையாக இதை கண்டித்திருக்கிறார்.

உச்சநீதிமன்றமாக இருந்தாலும், தேர்தல் ஆணையமாக இருந்தாலும், அரசியல் சட்ட அமைப்புகள் அனைத்தும் நெருக்கடிக்குள்ளாகி இருக்கின்ற இந்த நேரத்தில், ஜனநாயகம் காக்க - அதன் மூலமாக இந்தியாவை காக்க வேண்டிய கடமை என்பது நான்காவது தூணாக இருக்கின்ற பத்திரிகைகளிடம் தான் இருக்கிறது.

ஜனநாயகம் காக்கப்பட்டால் தான் பத்திரிக்கைத் துறை என்பதே எதிர்காலத்தில் இருக்கும் என்பது என்னுடைய அக்கறையுள்ள வேண்டுகோளாக நான் இங்கே சுட்டிக்காட்டுகிறேன். அதை இந்த மேடையில் வைப்பது பொருத்தமாக இருக்கும் என்று கருதித்தான் எடுத்துச் சொன்னேனே தவிர வேறு ஒன்றும் இல்லை!

காலத்தால் அழிக்கமுடியாத ஒரு கருவூலத்தை கலைஞருக்காக உருவாக்கிக் தந்திருக்கக்கூடிய இந்த நூலை அர்ப்பணித்திருக்கக்கூடிய ஆனந்த விகடன் நிர்வாக இயக்குநர் சீனிவாசன் அவர்களுக்கும் - விகடன் பிரசுரம் ஆசிரியர் குழுவுக்கும் என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியை, வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (20.9.2023) சென்னை, கலைவாணர் அரங்கத்தில், விகடன் குழுமத்தின் சார்பில் ”கலைஞர் 100 விகடனும் கலைஞரும் நூல் வெளியீட்டு விழாவில் கலந்து கொண்டு “கலைஞர் 100 விகடனும் கலைஞரும் என்ற நூலினை வெளியிட, அதன் முதல் பிரதியை மக்கள் நீதி மய்யத்தின் தலைவர் கலைஞானி கமல்ஹாசன் அவர்கள் பெற்றுக் கொண்டார். இவ்விழாவில், அமைச்சர் பெருமக்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், பல்வேறு கட்சிகளின் தலைவர்கள், விகடன் குழுமத்தின் நிர்வாக இயக்குநர் பா. சீனிவாசன், தி இந்து குழுமத்தின் இயக்குநர் என். ராம், தினமலர் இணை ஆசிரியர் கிருஷ்ணமூர்த்தி, ஆனந்த விகடன் ஆசிரியர் தி. முருகன், பத்திரிகை மற்றும் ஊடகத்துறையினர் கலந்து கொண்டனர்.

# நாடாளுமன்றத் தேர்தல் தோல்வி பயத்தில் சட்டம் இயற்றும் பா.ஜ.க.வின் தந்திரம்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிக்கை... முதல் பக்கத் தொடர்ச்சி

முதலில் பள்ளிக்கல்வி வரை இலவசக் கல்வியும், அதன் பிறகு கல்லூரி வரை இலவசக் கல்வியும் வழங்கப்பட்டது.

* ஒன்று முதல் 5 வரையிலான அரசுப் பள்ளி ஆசிரியர்களாக மகளிரை நியமித்த அரசு தி.மு.க. அரசு.
* கிராமப்புறப் பெண்களுக்குப் பணி நியமனத்தில் முன்னுரிமை கொடுத்தது கழக அரசு.
* மகளிருக்குப் பேருந்து களில் கட்டணமில்லாவிடியல் பயணம்.
* மகளிருக்கு 1000 ரூபாய் உரிமைத்தொகை - ஆகிய பல்வேறு திட்டங்களைச் செயல்படுத் திக் காட்டியது தி.மு.க. அரசு.

**உள்ளாட்சி அமைப்புகளில் 33 சதவிகிதம் பெண்களுக்கு இடஒதுக்கீடு தந்தவர் கலைஞர்!**

பெண்களுக்கு உள்ளாட்சி அமைப்புகளில் 33 விழுக்காடு இடஒதுக்கீட்டை முதலமைச்சர் கலைஞர் அவர்கள் 1996-ஆம் ஆண்டு வழங்கினார்கள். ஊராட்சி ஒன்றியம், நகராட்சி, மாநகராட்சி போன்ற உள்ளாட்சி மன்றங்களுக்கான தேர்தல் 1990-ஆம் ஆண்டு இறுதியில் தி.மு.க. ஆட்சியில் அறிவிக்கப்பட்ட பின்னர், கழக ஆட்சி கலைக்கப்பட்டு விட்டது. அதன் பின்னர் நடைபெற்ற ஐந்தாண்டு கால அ.தி.மு.க. ஆட்சியில் உள்ளாட்சி மன்றங்களுக்கான தேர்தலை நடத்த அந்த ஆட்சியினர் முன்வரவே இல்லை.

1996-ஆம் ஆண்டு, தி.மு.க. வெளியிட்ட தேர்தல் அறிக்கையில் பக்கம் 6-இல், "அடுத்து அமைக்கப்படும் தி.மு.க. அரசு, புதிய சட்டமன்றத்தின் முதல் கூட்டத் தொடரிலேயே உள்ளாட்சி மன்றங்களுக்கான தேர்தல் தேதிகளை அறிவிக்கும் என்று உறுதி கூறுவதோடு, அது வெறும் அறிவிப்பாக இருந்து விடாமல், நிச்சயமாக நடைமுறைப்படுத்தப்படும் என்ற உறுதியை அளிக்கிறோம்" என்றும் குறிப்பிட்டிருந்தோம்.

அவ்வாறு அறிவித்ததற்கிணங்க 96-ஆம் ஆண்டு அக்டோபர் 9 மற்றும் 12 தேதிகளில் உள்ளாட்சித் தேர்தல்கள் நடத்தப்படும் என்று தமிழ்நாடு தேர்தல் ஆணையர் மூலமாக அறிவிப்பு செய்யப்பட்டது.

இந்தத் தேர்தலில் முக்கியமானது என்னவென்றால் தமிழ்நாட்டில் உள்ளாட்சித் தேர்தல்களில் முதல் முறையாக பெண்களுக்கு இடஒதுக்கீடு செய்யப்பட்டுத் தேர்தல் நடத்தப்பட்டதுதான். மொத்தமுள்ள ஆறு மாநகராட்சி களில் திருச்சி மாநகராட்சி மேயர் பதவி பெண்களுக்காக ஒதுக்கப்பட்டது. திருநெல்வேலி மாநகராட்சி பட்டியலின வகுப்பைச் சேர்ந்த பெண்களுக்காக ஒதுக்கப்பட்டது.

மொத்தம் 474 மாநகராட்சி வார்டுகளில் பெண்களுக்கு 161 என்றும் பட்டியலின வகுப்பைச் சேர்ந்தவர்களுக்கு 35 என்றும் - மாவட்டப் பஞ்சாயத்து தலைவர் பதவிகள் மொத்தம் 28-இல் பெண்களுக்கு 10 என்றும் பட்டியலின வகுப்பைச் சேர்ந்தவர்க்கு 4 என்றும் - மாவட்டப் பஞ்சாயத்து வார்டுகள் பதவிகள் மொத்தம் 649-இல் பெண்களுக்கு 242 என்றும் பட்டியலின வகுப்பைச் சேர்ந்தவர்க்கு 97 என்றும் - நகராட்சித் தலைவர்கள் பதவிகள் மொத்தம் 106-இல் பெண்களுக்கு 35 என்றும், பட்டியலின வகுப்பைச் சேர்ந்தவர்க்கு 6 என்றும் இப்படியே ஒவ்வொரு பதவியிலும் பெண்களுக்கு 33 விழுக்காடு என்ற அளவிற்குத் தொகுதிகள் பிரிக்கப்பட்டன. அதுதான் இன்று 50 விழுக்காடாக உயர்ந்துள்ளது. உள்ளாட்சி அமைப்புகள் இவ்வளவு பெண்கள் அதிகாரம் பொருந்திய இடங்களுக்கு வந்து, தங்களது நிர்வாகத் திறனை மெய்ப்பித்துக் காட்டி வருகிறார்கள். இதையே நாடாளுமன்ற, சட்டமன்றங்களும் வழங்க வேண்டும் என்றும் தி.மு.க. தொடர்ந்து வலியுறுத்தி வந்துள்ளது.

சுமார் 27 ஆண்டுகளாக இந்த மசோதா நிலுவையில் உள்ளது. 1996-ஆம் ஆண்டு தி.மு.க. அங்கம் வகித்த ஒன்றிய அரசில் மகளிர் இடஒதுக்கீடு மசோதா முதன்முதலாக தாக்கல் செய்யப்பட்டது. 2005-ஆம் ஆண்டும் தி.மு.க. இடம்பெற்ற ஒன்றிய அரசு இதனைத் தாக்கல் செய்தது. முதலில் ஆதரிப்பதாகச் சொன்ன பா.ஜ.க. எதிர்த்தது. பா.ஜ.க. பெண் உறுப்பினரான உமா பாரதியே இதனைக் கடுமையாக எதிர்த்தார். கடந்த காலத்தில் இதை எதிர்த்தவர்களில் தற்போதைய உ.பி. முதல்வர் யோகி ஆதித்யநாத்தும் முக்கியமானவர்.

**மக்கள் தொகை கணக்கெடுப்பு எப்போது என்ற உத்தரவாதமின்றி மகளிர் மசோதாவை கொண்டு வருவதா?**

**ஐக்கிய முற்போக்குக் கூட்டணி ஆட்சியில் நிறைவேறிய மசோதா!**

காங்கிரஸ், தி.மு.க. உள்ளிட்ட கட்சிகளின் நீண்ட நாள் முயற்சியின் விளைவாக ஐக்கிய முற்போக்குக் கூட்டணி ஆட்சியில் 2010-ஆம் ஆண்டு மகளிர் தினமான மார்ச் 8-ஆம் தேதி நாடாளுமன்ற மாநிலங்களவையில் மகளிர் இடஒதுக்கீடு மசோதா தாக்கல் செய்யப்பட்டு மறுநாள் நிறைவேற்றப்பட்டது. மக்களவையில் சில கட்சிகளின் எதிர்ப்பின் காரணமாக நிறைவேற்றப்படவில்லை. அதன் பின்னர் ஆட்சிக்கு வந்த பா.ஜ.க. அரசு அந்த மசோதாவைக் கிடப்பில் போட்டுவிட்டது. 2014-ஆம் ஆண்டும், 2019-ஆம் ஆண்டும் நடந்த தேர்தல்களில் பெரும்பானையைப் பெற்றது பா.ஜ.க. அரசு. நினைத்திருந்தால் அவர்கள் அதனை உடனடியாக நிறைவேற்றி இருக்கலாம். ஆனால் செய்யவில்லை.

**கனிமொழி எம்.பி. தலைமையில் டெல்லியில் நடந்த பேரணி!**

2017ஆம் ஆண்டு தி.மு.க சார்பில் மகளிரணிச் செயலாளரும், அப்போதைய மாநிலங்களவை உறுப்பினருமான கனிமொழி தலைமையில் டெல்லியில் பேரணி நடத்தினோம். 33 விழுக்காடு இடஒதுக்கீட்டை அமல்படுத்த வலியுறுத்தி இந்தப் பேரணி நடத்தப்பட்டது. மகளிர் மசோதாவை நிறைவேற்ற வேண்டும் என்று கடந்த சனிக்கிழமை நடந்த தி.மு.க. எம்.பி.கள் கூட்டத்திலும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. ஆனால் 9 ஆண்டுகளாக அதிக பெரும்பான்மை உள்ள பா.ஜ.க. அரசு அதனைக் கண்டு கொள்ளவில்லை.

உலகளாவிய பாலின இடைவெளி அறிக்கை 2022-இன் படி 146 நாடுகளின் பட்டியலில் இந்தியா 48-ஆவது இடத்தில் உள்ளது. இந்திய நாடாளுமன்றத்திலும் சட்டமன்றங்களிலும் பெண்கள் மிகக் குறைவான அளவிலேயே இருக்கிறார்கள். நாடாளுமன்ற சட்டமன்றங்களில் பெண்களுக்கு அதிகாரமளித்தல் மூலமாக இதனைச் சரி செய்ய முடியும். அந்த வகையில் 33 விழுக்காடு இடஒதுக்கீடு அமல்படுத்தப்பட வேண்டும்.

> **தமிழ்நாட்டின் மீது - தென்னிந்தியாவின் மீது தலைக்கு மேல் தொங்கும் கத்தியாக தொகுதி மறுவரையறை (delimitation) உள்ளது. மக்கள் தொகை அடிப்படையில், நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையை அதிகரித்து, தென்னிந்தியாவின் அரசியல் பிரதிநிதித்துவத்தை குறைக்கிற அரசியல் சூழ்ச்சி முறியடிக்கப்பட வேண்டும். அரசியல் விழிப்புமிக்க தமிழ்நாட்டை வஞ்சிக்கிற அநீதியான முயற்சி முளையிலேயே கிள்ளி எறியப்பட வேண்டும்.**

**பிரச்சினைகளை திசை திருப்ப பா.ஜ.க.வின் கண்துடைப்பு நாடகமா?**

பிரதமர் ராஜீவ்காந்தி அவர்கள், உள்ளாட்சி அமைப்புகளில் இடஒதுக்கீட்டை உறுதி செய்தார். நாடாளுமன்ற - சட்டமன்றங்களுக்கான இடஒதுக்கீட்டு மசோதாவை மாநிலங்களவையில் தாக்கல் செய்து வெற்றி பெற வைத்தார் பிரதமர் மன்மோகன் சிங். இவர்கள் இருவரது சாதனைகளும் இப்போது நினைவு கூரப்பட வேண்டியவை ஆகும்.

காலம் கடந்து செய்தாலும், கண்துடைப்புக்காகச் செய்தாலும், இப்போதைய பிரச்சினைகள் அனைத்தையும் திசைதிருப்பச் செய்தாலும், ஒன்றிய அரசு கொண்டு வரும் மகளிருக்கு 33 விழுக்காடு இடஒதுக்கீடு வழங்கும் மசோதாவை திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் வரவேற்கிறேன். ஆதரிக்கிறேன்.

பிற்படுத்தப்பட்ட - மிகவும் பிற்படுத்தப்பட்ட சமுதாயப் பெண்களுக்குப் பிரதிநிதித்துவம் வேண்டும் என்ற கோரிக்கையை புறந்தள்ளாமல், அதன் நியாயத்தை பரிசீலிக்குமாறு ஒன்றிய ஆட்சியாளர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

**மக்கள் தொகை கணக்கெடுப்பு நடத்தாமல் மகளிருக்கு சட்டம் இயற்றும் விசித்திரம்!**

பத்தாண்டுகளுக்கு ஒருமுறை நடைபெறும் மக்கள் தொகைக் கணக்கெடுப்பை இன்னும் நடத்தாத ஒரே நாடு இந்தியா. எப்போது நடைபெறும் என்ற உத்தரவாதத்தையும் இதுவரை பா.ஜ.க. அரசு தரவில்லை. எப்போது நடைபெறும் என்று தெரியாத மக்கள்தொகை கணக்கெடுப்பு, அதன் அடிப்படையில் நடக்கவுள்ள தொகுதி மறுவரையறை - அதன் பேரில் 2029 தேர்தலில் நடைமுறைக்கு வரும் மகளிர் ஒதுக்கீட்டுக்கு இப்போது சட்டம் இயற்றும் விசித்திரம் பா.ஜ.க.வால் அரங்கேற்றப்படுகிறது.

தமிழ்நாட்டின் மீது - தென்னிந்தியாவின் மீது தலைக்கு மேல் தொங்கும் கத்தியாக தொகுதி மறுவரையறை (delimitation) உள்ளது. மக்கள் தொகை அடிப்படையில், நாடாளு மன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையை அதிகரித்து, தென்னிந்தியாவின் அரசியல் பிரதிநிதித்து வத்தை குறைக்கிற அரசியல் சூழ்ச்சி முறியடிக்கப்பட வேண்டும். அரசியல் விழிப்புமிக்க தமிழ்நாட்டை வஞ்சிக்கிற அநீதியான முயற்சி முளையிலேயே கிள்ளி எறியப்பட வேண்டும்.

**மறுவரையறை என்ற பெயரில் தென்னிந்திய மக்களுக்கு தீங்கு கூடாது!**

மகளிர் மசோதாவை வரவேற்கும் அதே வேளையில், மறுவரையறை என்ற பெயரில் தென்னிந்திய மக்களுக்கு எந்தத் தீங்கையும் செய்துவிட மாட்டோம் என்ற உத்தரவாதத்தை வழங்கி, தென்னிந்திய மக்களை ஆட்கொண்டுள்ள அச்சத்தைப் போக்கிட வேண்டும் எனப் பிரதமர் நரேந்திர மோடி அவர்களை வலியுறுத்தி கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

---

## மக்களவையில் கனிமொழி கருணாநிதி கேள்வி...

முதல் பக்கத் தொடர்ச்சி

எங்களது தலைவரும் முதல்வருமான முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் இன்று வெளியிட்டுள்ள அறிக்கையில், 'இந்தியா மட்டுமே மக்கள் தொகை கணக்கெடுப்பு நடத்தப்படாமல் இருக்கிறது. பத்தாண்டுகளுக்கு ஒருமுறை நடைபெறும் மக்கள் தொகைக் கணக்கெடுப்பை இன்னும் நடத்தாத ஒரே நாடு இந்தியா. எப்போது நடைபெறும் என்ற உத்தரவாதத்தையும் இதுவரை பா.ஜ.க. அரசு தரவில்லை. எப்போது நடைபெறும் என்று தெரியாத மக்கள்தொகை கணக்கெடுப்பு, அதன் அடிப்படையில் நடக்கவுள்ள தொகுதி மறுவரையறை அதன் பேரில் 2029 தேர்தலில் நடைமுறைக்கு வரும் மகளிர் ஒதுக்கீட்டுக்கு இப்போது சட்டம் இயற்றும் விசித்திரம் பா.ஜ.க.வால் அரங்கேற்றப்படுகிறது.

**அநீதியான முயற்சி!**

தமிழ்நாட்டின் மீது தென்னிந்தியாவின் மீது தலைக்கு மேல் தொங்கும் கத்தியாக தொகுதி மறுவரையறை (DELIMITATION) உள்ளது. மக்கள்தொகை அடிப்படையில், பாராளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையை அதிகரித்து, தென்னிந்தியாவின் அரசியல் பிரதிநிதித்துவத்தை குறைக்கிற அரசியல் சூழ்ச்சி முறியடிக்கப்பட வேண்டும். அரசியல் விழிப்புமிக்க தமிழ்நாட்டை வஞ்சிக்கிற அநீதியான முயற்சி முளையிலேயே கிள்ளி எறியப்பட வேண்டும்' என்று கூறியுள்ளார்.

'நாங்கள் இந்த மசோதாவை ஆதரிக்கிறோம். ஆனால், இந்த சட்டத்தை நடைமுறைப்படுத்துவது என்பது ஏன் தொகுதி மறுசீரமைப்போடு தொடர்புபடுத்தப்படுகிறது? என்று கேள்வி எழுப்பியுள்ள எங்கள் தலைவர் ஸ்டாலின், 'இது 2024 தேர்தலை வைத்து பா.ஜ.க. நடத்தும் நாடகம்' என்று குறிப்பிட்டுள்ளார். மறுவரையறை என்ற பெயரில் தென்னிந்திய மக்களுக்கு எந்தத் தீங்கையும் செய்துவிட மாட்டோம் என்ற உத்தரவாதத்தை வழங்கி, தென்னிந்திய மக்களை ஆட்கொண்டுள்ள அச்சத்தைப் போக்கிட வேண்டும் என பிரதமர் நரேந்திர மோடி அவர்களைக் கேட்டுக் கொண்டிருக்கிறார்.

மேலும், பிற்படுத்தப்பட்ட மிகவும் பிற்படுத்தப்பட்ட சமுதாயப் பெண்களுக்குப் பிரதிநிதித்துவம் வேண்டும் என்ற கோரிக்கையை புறந்தள்ளாமல், அதன் நியாயத்தை பரிசீலிக்குமாறு ஒன்றிய ஆட்சியாளர்களைக் கேட்டுக் கொள்கிறேன் என்றும் கூறியுள்ளார்.

பெண்கள் பிரதிநிதித்துவத்தில் உலகில் உள்ள 193 நாடுகளில் இந்தியா 141 ஆவது இடத்தில் இருக்கிறது. நமது அண்டை நாடுகளான பாகிஸ்தான், பங்களாதேஷ், நேபாளை விட பின் தங்கியுள்ளது. இன்னும் எத்தனை காலம் காத்துக் கொண்டிருக்கப் போகிறோம், இந்த மசோதாவை நடைமுறைப்படுத்த? இந்த மசோதாவை வரும் நாடாளுமன்றத்திலேயே நடைமுறைப்படுத்த வேண்டும். இது பெண்களுக்கான இட ஒதுக்கீடு என்பது அல்ல... ஆண்டாண்டு காலமாக இழைக்கப்பட்ட பாரபட்சத்தையும், அநீதியையும் களைவதாகும்.

மக்கள் தொகைக் கணக்கெடுப்பு, தொகுதி மறுசீரமைப்பு என்றெல்லாம் நிபந்தனைகளை விதித்துக் கொண்டிருந்தால் இந்த மசோதா இப்போதைக்கு நடைமுறைக்கு வர முடியாது. காத்திருப்பு தொடர்ந்து கொண்டேதான் இருக்கும்.

ஓர் ஆண் பெண் தன்மையை கொண்டிருந்தால் அவரை கடவுள் என்று கொண்டாடுகிறீர்கள். ஆனால் ஒரு பெண், உறுதியாக இருந்தால் அவரை ஏற்றுக் கொள்ள மறுக்கிறீர்கள். கடவுளை நம்புகிறீர்கள்... இந்துயிசத்தை நம்புகிறீர்கள். உங்கள் கடவுள் காளியை ஏற்கிறீர்கள் அல்லவா? உறுதியான கடினமான தன்மை கொண்ட காளியை ஏற்கும் நீங்கள்... ஏன் உறுதி கொண்ட பெண்களை ஏற்க மறுக்கிறீர்கள்?

இந்திய விடுதலைப் போராட்டத்தில் பெண்கள் பங்கேற்றதை நீங்கள் பார்த்ததில்லையா? உறுதி கொண்ட தலைவரான இந்திரா காந்தியை இந்த நாடு பார்க்கவில்லையா? ஜெயலலிதாவும் மிக உறுதியான தலைவர்தான். எனக்கு இதை சொல்வதில் எந்தத் தயக்கமும் இல்லை. மாயாவதி, சோனியா காந்தி, மம்தா பானர்ஜி... நீங்கள் (பாஜகவினர்) அடிக்கடி மறந்துவிடும் சுஷ்மா ஸ்வராஜ் அவர்கள் இப்படி நிறைய பெண் தலைவர்களை சொல்லிக் கொண்டே போகலாம்.

மறைந்த அருண் ஜேட்லி ஒரு முறை விவாதத்தில் பேசினார். 'அடையாள அரசியல் என்பது கொள்கை அரசியலாக மாற வேண்டும்' என்று குறிப்பிட்டார்.

இந்த மசோதாவின் பெயர் நாரி ஷக்தி வந்தன் பில். பெண்களுக்குக் கொடுக்கப்படும் சலுகை அல்ல. இது சலுகை என சொல்வதை நிறுத்திக் கொள்ளுங்கள். பெண்களை வணங்குகிறோம், பெண்களை வழிபடுகிறோம் என்பதெல்லாம் தேவையில்லை. இது பெண்களுக்கான உரிமை. ஆண்களுக்கு சமமாக பெண்கள் நடத்தப்படுவதையே நாங்கள் எதிர்பார்க்கிறோம். இது எங்கள் நாடு, இது எங்கள் நாடாளுமன்றம்"

இவ்வாறு கனிமொழி கருணாநிதி பேசினார்.

---

புதிய நாடாளுமன்றக் கட்டிடத் திறப்பு விழாவில்

## குடியரசுத் தலைவர் திரவுபதி முர்மு புறக்கணிக்கப்பட்டது ஏன்?

### திரிணாமுல் காங்கிரஸ் - டெரிக் ஓ. பிரையன் கேள்வி

புதுடெல்லி, செப். 22-

பழைய நாடாளுமன்ற கட்டிடத்திற்கு விடை கொடுக்கும் விழா பழைய கட்டிடத்தின் மைய மண்டபத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது. நிகழ்ச்சிக்கு குடியரசு துணைத் தலைவரும் மாநிலங்களவை தலைவருமான ஜகதீப் தங்கர் தலைமை தாங்கினார்.

இந்த நிலையில் புதிய நாடாளுமன்றக் கட்டிடத்தை மாற்றுவதற்கான விழாவுக்கு குடியரசுத் தலைவர் திரவுபதி முர்முவை அழைக்காதது ஏன் என்று திரிணாமுல் காங்கிரஸ் எம்.பி. டெரிக் ஓ பிரையன் கேள்வி எழுப்பி உள்ளார்.

இதுகுறித்து அவர் தனது எக்ஸ் சமூக வலைதளத்தில் பழைய நாடாளுமன்ற கட்டிடத்தில் நடந்த நிகழ்வின் போது இந்திய குடியரசுத் தலைவர் திரவுபதி முர்மு எங்கே இருந்தார்? அவர் அழைக்கப்பட்டாரா? குடியரசுத் தலைவர் புறக்கணிக்கப்பட்டது ஏன்? என்றும் கேள்வி எழுப்பி உள்ளார்.

கடந்த மே மாதம் புதிய நாடாளுமன்ற கட்டிட திறப்பு விழாவில் குடியரசுத் தலைவர் திரவுபதி முர்முவுக்கு அழைப்பு விடுக்கப்படாததற்கு, எதிர்க்கட்சிகள் கடும் எதிர்ப்பு தெரிவித்தன. மேலும் 21 எதிர்க்கட்சிகள் அந்த விழாவை புறக்கணித்தன.

---

## தமிழ்நாடு ஆளுநர் ஆர்.என்.இரவியை நீக்கக் கோரிய கையெழுத்துப் படிவங்கள்!

### குடியரசுத் தலைவர் மாளிகையில் ஒப்படைத்தார் வைகோ!

சென்னை, செப். 22 -

ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ எம்.பி. விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

தமிழ்நாட்டின் ஆளுநர் ஆர்.என்.இரவி அவர்கள் இந்திய அரசியல் சட்டத்திற்கு விரோதமாகவும், தமிழ்நாடு அரசுக்கு விரோதமாகவும் செயல்பட்டு வருவதால், அவரை தமிழ்நாட்டின் ஆளுநர் பொறுப்பிலிருந்து நீக்க வேண்டும் என்று மறுமலர்ச்சி தி.மு.க. சார்பில், 57 எம்.பி.க்கள் உள்ளிட்ட 50 இலட்சம் பேரிடம் கையெழுத்துக்கள் பெறப்பட்டது.

அவற்றை அட்டைப் பெட்டிகளில் வைத்து, இரயிலில் கொண்டுவந்து, நேற்று முன்தினம் 20.09.2023 பகல் 12 மணி அளவில் நானும், கணேசமூர்த்தி எம்.பி., அவர்களும் குடியரசுத் மாளிகை அலுவலகத்தில் ஒப்படைத்தோம்.

எங்கள் கோரிக்கை மனு குடியரசுத் தலைவர் பார்வைக்கு அனுப்பப்படும் என்றும், அவர் தருகின்ற பதிலை உங்களுக்கு நாங்கள் தெரிவிக்கிறோம் என்றும் உறுதி கூறினார்கள்.

கையெழுத்திட்ட அரசியல் கட்சிகளின் முன்னணித் தலைவர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், பல்வேறு தரப்பில் உள்ள பொதுமக்கள் அனைவருக்கும் இந்த செய்தியை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

இரண்டு மாத காலம் இதற்காகப் பாடுபட்ட மறுமலர்ச்சி தி.மு.க. மாவட்டச் செயலாளர்கள் உள்ளிட்ட அனைத்துப் பொறுப்புகளில் உள்ள நிர்வாகிகளுக்கும் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் கூறினார்.



கூட்டுறவுத்துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் தலைமையில், நேற்று முன்தினம் (20.09.2023) சென்னை, கீழ்ப்பாக்கம், தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றிய அலுவலகத்தில், கூடுதல் பதிவாளர்கள், அனைத்து மண்டல இணைப்பதிவாளர்கள் ஆகியோர்களுடனான ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை செயலாளர் ஜகநாதன், கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் மரு.ந.சுப்பையன், கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் (நுகர்வோர் பணிகள்) திருமதி ஜெ.விஜயராணி, சிறப்புப் பணி அலுவலர் (தமிழ் நாடு கூட்டுறவு வங்கி) எம்.பி.சிவன்அருள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

## தமிழ்நாடு பட்டியலினத்தவர் - பழங்குடியினர் புத்தொழில் நிதி திட்டத்தின்கீழ்

# 8 நிறுவனங்களுக்கு ரூ.10.85 கோடி பங்கு நிதி வழங்குவதற்கான ஒப்புதல் ஆணை!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்!

**சென்னை, செப். 22-**

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (20.9.2023) தலைமைச் செயலகத்தில், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை சார்பில் தமிழ்நாட்டின் புத்தொழில் சூழமைவை மேம்படுத்தும் வகையில் 50-க்கும் மேற்பட்ட செயல் திட்டங்களை உள்ளடக்கிய "தமிழ்நாடு புத்தொழில் மற்றும் புத்தாக்க கொள்கை - 2023"னை வெளியிட்டார். மேலும், தமிழ்நாடு பட்டியலினத்தவர் / பழங்குடியினர் புத்தொழில் நிதித்திட்டத்தின் கீழ் 8 நிறுவனங்களுக்கு 10 கோடியே 85 இலட்சம் ரூபாய் பங்கு நிதி வழங்குவதற்கான ஒப்புதல் ஆணைகளையும் வழங்கினார்.**

தமிழ்நாட்டின் புத்தொழில் சூழமைவை (Startup Eco System) மேம்படுத்தும் வகையிலும், தமிழ்நாட்டினை மிகச் சிறந்த புத்தொழில் சூழமைவு கொண்ட இடங்களில் ஒன்றாக உருவாக்க வேண்டும் என்ற நோக்கத்துடனும் "தமிழ்நாடு புத்தொழில் மற்றும் புத்தாக்க கொள்கை - 2023" உருவாக்கப்பட்டுள்ளது. இந்தக் கொள்கையானது 2030க்குள் ஒரு ட்ரில்லியன் அமெரிக்க டாலர் பொருளாதார மாநிலமாக தமிழ்நாட்டினை உருவாக்க வேண்டும் என்ற இலக்கினை அடைவதில் புத்தொழில் நிறுவனங்களின் பங்களிப்பினை ஊக்குவிப்பதற்கும் அடிப்படையாக இருக்கும்.

இப்புதிய புத்தொழில் மற்றும் புத்தாக்கக் கொள்கையானது, தமிழ்நாட்டில் உள்ள புத்தொழில் நிறுவனங்களின் உருவாக்கத்தை அதிகரிப்பதற்கும், அந்நிறுவனங்களின் விரிவாக்கத்திற்கு உறுதுணையாகவும் இருக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. மேலும், மாநிலத்தின் மொத்த உள்நாட்டு உற்பத்தி குறியீடு (GDP) மற்றும் சமூக மூலதனம் (Social Capital) இரண்டிலும் அவற்றின் பங்களிப்புகளை அதிகரிப்பதற்கும் உந்து சக்தியாக இருக்கும்.

புத்தொழில் சார்ந்த அறிவாற்றலை மேம்படுத்துதல், மாநிலத்தின் புத்தாக்க சூழமைவினை வலுப்படுத்துதல், முதலீட்டு சூழமைவினை வலுப்படுத்துதல், சந்தை அணுகுதலுக்கு தேவையான வாய்ப்புகளை உருவாக்குதல், தொழில்முனைவு தளம் சார்ந்த செயல்பாட்டாளர்களை ஒருங்கிணைத்தல், புத்தொழில் ஆதரவு சேவை மையங்களை அமைத்தல் மற்றும் அனைவரையும் உள்ளடக்கிய ஒருங்கிணைந்த புத்தொழில் முனைவு வளர்ச்சியினை உறுதி செய்தல் ஆகிய ஏழு அம்சங்களை அடிப்படையாகக் கொண்டு, 50க்கும் மேற்பட்ட செயல்திட்டங்களுடன் இக்கொள்கை வடிவமைக்கப்பட்டுள்ளது.

### "தமிழ்நாடு புத்தொழில் மற்றும் புத்தாக்க கொள்கை - 2023" சிறப்பம்சங்கள்

**புத்தொழில் வரையறை திருத்தம்:** தற்போது "புத்தொழில்" என்பதற்கான வரையறை அம்சங்களுடன், பட்டியலினத்தவர் / பழங்குடியின சமூகத்தினர், பிற துறைகளில் ஏற்கனவே பயன்பாட்டில் உள்ள புதுமையான மாதிரிகளை பயன்படுத்தி தாங்கள் சார்ந்த சமூகங்களின் பொருளாதார மற்றும் சமூகப் பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் விதமாக ஒரு நிறுவனத்தினை உருவாக்கினால், அந்த நிறுவனமும் புத்தொழில் என்று மாநில அரசால் அங்கீகரிக்கப்படும்.

**இணை நிதியம் (CoCreation Fund):** பிற துணிகர முதலீட்டு நிறுவனங்களின் (Venture capital firms) வழியாக முதலீடு செய்யும் பெரு நிதியம் (Fund of Funds) ஒன்று ரூ.100 கோடி மதிப்பில் உருவாக்கப்படும். இந்த பெரு நிதியமானது வட்டார அளவில் செயல்படும் புத்தொழில் நிறுவனங்கள், ஊரக வாழ்வாதார மேம்பாடு, பசுமைத்தொழில்நுட்பம் மற்றும் பெண்களால் நடத்தப்படும் புத்தொழில் நிறுவனங்களில் முதலீடு செய்வதை நோக்கமாகக் கொண்டு செயல்படும் தனியார் துணிகர முதலீட்டு நிறுவனங்களில் முதலீடு செய்வதற்கு சிறப்புரிமை அளிக்கும்.




தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (20.9.2023) தலைமைச் செயலகத்தில், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை சார்பில் தமிழ்நாட்டின் புத்தொழில் சூழமைவை மேம்படுத்தும் வகையில் 50–க்கும் மேற்பட்ட செயல் திட்டங்களை உள்ளடக்கிய "தமிழ்நாடு புத்தொழில் மற்றும் புத்தாக்க கொள்கை – 2023"னை வெளியிட்டார். இந்த நிகழ்ச்சியில், குறு சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன், தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, குறு சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை செயலாளர் (பொறுப்பு) வி.அருண் ராய், தமிழ்நாடு புத்தொழில் மற்றும் புத்தாக்க நிறுவனத்தின் தலைமை நிர்வாக அலுவலர் சிவராஜா இராமநாதன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

**ஸ்டார்ட்அப் தமிழா:** மாநிலத்தில் புத்தொழில் முனைவு மற்றும் முதலீட்டுப் பண்பாட்டினை பரவலாக்கும் விதமாக "ஸ்டார்ட் அப் தமிழா" என்ற தொலைக்காட்சி நிகழ்ச்சி தயாரிக்கப்படும்.

**ஸ்மார்ட் கார்டு:** தொடக்க நிலையில் உள்ள புத்தொழில் நிறுவனங்களுக்கு தேவையான பொருட்கள் மற்றும் சேவைகளை பல்வேறு நிறுவனங்களிடம் இருந்து நியாயமான விலையில் பெறக்கூடிய வகையில் அத்தகைய தொகுப்பு அடங்கிய ஸ்டார்ட் அப் ஸ்மார்ட் கார்ட் திட்டம் நடைமுறைப் படுத்தப்படும்.

## தமிழ்நாடு புத்தொழில் மற்றும் புத்தாக்க கொள்கை - 2023 - வெளியீடு!

**சமூக நீதி தொழில் வளர் மையம்:** ஒடுக்கப்பட்ட சமூகங்களை சார்ந்தவர்களால் நடத்தப்படும் புத்தொழில் நிறுவனங்களுக்கு தேவையான பயிற்சிகள், ஆலோசனைகள் மற்றும் வழிகாட்டல்களை அளிக்கும் சமூக நீதி தொழில் வளர் மையம் நிறுவப்படும்.

**பெண்களுக்கான சிறப்பு தொழில் வளர் மையம்:** புத்தொழில் முனைவில் ஈடுபடும் பெண்களின் பிரத்யேக தேவைகளை கருத்தில் கொண்டு பல்வேறு சிறப்பம்சங்களுடன் ஒரு தொழில் வளர் மையம் அமைக்கப்படும்.

**மாற்றுத்திறனாளிகள் மற்றும் மூன்றாம் பாலினத்தவர்களுக்கான திட்டங்கள்:** மாற்றுத்திறனாளிகள் மற்றும் மூன்றாம் பாலினத்தவர்களால் உருவாக்கப்படும் புத்தொழில் நிறுவனங்களுக்கு ரூ.5 லட்சம் மானியம், டான்சீட் (Tanseed) திட்டத்தில் சிறப்புரிமை மற்றும் இலவச தொழில்வளர் காப்பான் போன்ற வாய்ப்புகள் வழங்கப்படும்.

**டான் ஃபண்ட் (TANFUND):** 'டான் ஃபண்ட்' என்ற பெயரில் உலகளாவிய துணிகர முதலீட்டாளர்களை தமிழ்நாட்டில் இயங்கும் புத்தொழில் நிறுவனங்களுடன் இணைக்கும் முதலீட்டு உதவித் தளம் தொடங்கப்படும்.

**உலக சந்தைகள் ஒருங்கிணைப்பு:** தமிழ்நாட்டில் இயங்கும் புத்தொழில் நிறுவனங்கள் வாய்ப்புகள் நிறைந்த பல்வேறு உலக நாடுகளிலும் கால் பதிக்க உதவும் வகையில் உலகிலுள்ள பல்வேறு முக்கிய நகரங்களிலும் புத்தொழில் ஒருங்கிணைப்பு மையங்கள் தொடங்கப்படும்.

மேலும், பெருநிறுவனங்களில் பணிபுரியும் அனுபவமும் ஆற்றலும் மிக்கவர்களை தொழில் முனைவோர்களாக மாற்ற உதவும் EIR (EntrepreneurinResidence) திட்டம், பல்வேறு தொழில்துறைகள் சார்ந்து இயங்கும் புத்தொழில் முனைவோர்களை அவர்கள் சம்பந்தப்பட்ட துறை வல்லுநர்கள், முதலீட்டாளர்கள் மற்றும் பிற துறை சார் செயல்பாட்டாளர்களுடன் இணைக்கும் 'துறைசார் ஒருங்கிணைப்பு' திட்டம் என ஐம்பதுக்கும் மேற்பட்ட செயல் திட்டங்கள் இந்த கொள்கை வரைவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

### தமிழ்நாடு பட்டியலினத்தவர் / பழங்குடியினர் புத்தொழில் நிதி

புதுயுக தொழில்முனைவில் அனைத்து சமூகத்தினரையும் உள்ளடக்கிய வளர்ச்சியினை அடைவதற்காக தமிழ்நாடு அரசால் தமிழ்நாடு பட்டியலினத்தவர் / பழங்குடியினர் புத்தொழில் நிதித்திட்டம், தமிழ்நாடு புத்தொழில் மற்றும் புத்தாக்க இயக்கத்தின் வழியாக செயல்படுத்தப்பட்டு வருகின்றது. இந்தப் பிரிவுகளைச் சார்ந்த தொழில் முனைவோர்களால் தொடங்கி நடத்தப்பட்டு வரும் புத்தொழில் நிறுவனங்களுக்கு பங்கு முதலீடாக அல்லது பிணையில்லா கடனாக நிதி வழங்க கடந்த நிதி ஆண்டில் 30 கோடி ரூபாய் நிதியுடன் இந்த நிதியம் தொடங்கப்பட்டது. இந்த நிதி ஆண்டில் 50 கோடி ரூபாயாக இந்நிதியம் உயர்த்தப்பட்டுள்ளது.

தமிழ்நாடு பட்டியலினத்தவர் / பழங்குடியினர் புத்தொழில் நிதி திட்டத்தின் கீழ் தேர்ந்தெடுக்கப்பட்ட 8 புத்தொழில் நிறுவனங்களில் 10 கோடியே 85 இலட்சம் ரூபாய் பங்கு முதலீடு செய்வதற்கான ஒப்புதல் ஆணைகளை பயனாளிகளிடம் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இன்று வழங்கினார்.

அரசு முதலீடு செய்வதால் அந்த நிறுவனங்களின் மீதான நம்பகத்தன்மை அதிகரிப்பதோடு அவர்களின் சந்தை விரிவாக்கத்திற்கும் உறுதுணையாக இருக்கும். சென்னை, கோயம்புத்தூர், திருப்பூர், இராமநாதபுரம் மாவட்டங்களை சேர்ந்த இந்த நிறுவனங்களில் 2 புத்தொழில் நிறுவனங்கள் பெண் தொழில்முனைவோர்களால் நடத்தப்படுகின்றது. பழங்குடியினரால் நடத்தப்படும் ஒரு புத்தொழில் நிறுவனமும் இடம்பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது.

பதப்படுத்தப்பட்ட கருவாடு வகைகளை, அதன் மணம் வெளியில் வராத வண்ணம் தனித்துவமான பேக்கிங் செய்து சந்தைப்படுத்தும் லெமூரியன் நிறுவனம் (Lemurian Ventures), வேளாண் நிலங்களில் பயன்படுத்துவதற்கேற்ற டிரோன் கருவிகளை தயாரிக்கும் வாயுரதா (Vayuratha) நிறுவனம், சினிமா தயாரிப்பு துறையில் நவீன தொழில்நுட்பத்தினை கொண்டியங்கும் 70 எம்.எம் டிஜிவெர்ஸ் (70 mm Digiverse) நிறுவனம், காய்கறிகளை கொண்டு மால்ட் உணவு வகைகளை தயாரிக்கும் வேர்வை புட்ஸ் (Vervai foods) நிறுவனம், தோடா பழங்குடியினரின் கைவேலைப்பாடு செய்த துணிகளை இணைய வழியில் சந்தைப்படுத்தும் ஐ கேம் டெக்னாசிஸ் (Icam Technosys) நிறுவனம், உற்பத்தி துறையில் இயங்கும் KSU ஹார் நெக்ஸன் (KSU Harnexon) நிறுவனம், ஐஓடி தொழில்நுட்ப துறையில் இயங்கும் என்ந்து டெக்னாலஜிஸ் (Enthu Technologies) மற்றும் ஆக்கம் டெக்னாலஜிஸ் (Auckam Technologies) ஆகிய எட்டு நிறுவனங்களுக்கு பங்கு முதலீட்டு ஒப்புதல் ஆணைகள் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்ச்சியில், குறு சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ. அன்பரசன், தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, குறு சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை செயலாளர் (பொறுப்பு) வி. அருண் ராய், தமிழ்நாடு புத்தொழில் மற்றும் புத்தாக்க நிறுவனத்தின் தலைமை நிர்வாக அலுவலர் சிவராஜா இராமநாதன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

---

## இரண்டு முறை ஏமாந்து வாக்களித்த மக்கள் வரும் தேர்தலில் ஏமாறமாட்டார்கள்!

# 2024 தேர்தலில் பி.ஜே.பி.க்குப் பாடம் கற்பிப்பீர்!

### திராவிடர்கழகத்தலைவர் கி.வீரமணி அறிக்கை!

*சென்னை, செப். 22-*

*மூன்று முறை தடை செய்யப்பட்டது ஆர்.எஸ்.எஸ். உருமாற்றங்களை அடிக்கடி மேற்கொள்ளும் தந்திரம் கொண்டது. இரு முறை ஆட்சிப் பொறுப்புக்கு வந்த ஒன்றிய பி.ஜே.பி. அரசு, கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றாமல், புதிய புதிய தந்திரங்களை போலி வாக்குறுதிகளைக் கொடுக்கிறது வரும் மக்களவைத் தேர்தலில் பொதுமக்கள் ஏமாறாமல் பி.ஜே.பி. ஆட்சியை வீட்டுக்கு அனுப்புவீர் என்று திராவிடர் கழகத் தலைவர் ஆசிரியர் கி.வீரமணி அவர்கள் அறிக்கை விடுத்துள்ளார்.*

*அவரது அறிக்கை வருமாறு:*

*ஆர்.எஸ்.எஸ். ஆட்சி ஒன்றியத்தில் 'பி.ஜே.பி.' என்ற அரசியல் பெயருடன்; 1980 ஆம் ஆண்டுதான் அது தொடங்கப் பெற்றது. அதற்கு முன்பிருந்த 'பாரதீய ஜனசங்' என்பதின் மாற்றமே இது!*

*தற்போது 36 அமைப்புகளை தன்னகத்தே கொண்டுள்ள ஆர்.எஸ்.எஸ். அமைப்பு அதன் நூற்றாண்டை வரும் 2025 இல் கொண்டாடவிருக்கிறது.*

*தந்தை பெரியார் அவர்கள் தொடங்கிய சுயமரியாதை இயக்கமும், கம்யூனிஸ்ட் கட்சியும் அவ்வாண்டில் தொடங்கப்பட்டவையே!*

*1925 முதல் பல உருமாற்றங்கள் முதலில் பார்ப்பனர் பனியா இவர்களின் நலனைப் பாதுகாக்கவே 'ஹிந்து சங்காத்தனில்' தொடங்கி, பிறகு 'ஹிந்து மஹாசபை' என்று மத அடிப்படையில் அமைப்புகளை முகவிலாசமாக மாற்றி, அதுவும் அவர்கள் எதிர்பார்த்த அளவுக்கு இளைஞர்களிடையே வளராததால், தொண்டுக்கான நிறுவனம் என்ற பெயரில், தொண்டு முகமூடி போட்டுக்கொண்டு 1925 இல் உருவாக்கப்பட்டதுதான் 'ராஷ்டிரிய சுய சேவக் சங்கம்' என்ற அமைப்பு!*

*இதனுடைய பணிகள் எதுவும் வெளிப்படையான கொள்கை ரீதியானவை என்பதில்லாமல், முகமூடி அணிந்து அவ்வப்போது தங்களது நிலைப்பாட்டை மாற்றி, முதலில் தொண்டு, பிறகு கலாச்சார அமைப்பு என்று கூறி பிறகு, பல்வேறு அரசியல் உருமாற்றங்கள் முதலியன.*

**வன்முறைக்காக மூன்றுமுறை தடை செய்யப்பட்டது ஆர்.எஸ்.எஸ்.**

*இந்நாட்டில், அதன் வன்முறைகளுக்காக, ரகசிய செயல்பாடுகளுக்காக மூன்றுமுறை தடை செய்யப்பட்ட ஓர் அமைப்பு உள்ளது என்றால், அந்தப் "பெருமை" ஆர்.எஸ்.எஸ் அமைப்பையே சாரும்!*



*இதன் தலைவர் பொறுப்பில் ஒரே ஒருவரைத் தவிர (ராஜேந்திரசிங்), அதுவும் சிலகாலம்தான் மராத்தி சித்பவன் பார்ப்பனர்கள் உயர்ஜாதி அமைப்பு 'ஹிந்துத்துவா' என்ற அரசியல் கோட்பாடுகளுக்கும் அவர்களே தோற்றுநர்கள்.*

*1. ஹெட்கேவார்*

*2. கோல்வால்கர்*

*3.பாலா சாகேப் தேவரஸ்*

*4. ராஜேந்திரசிங் (குறுகிய காலம்)*

*5. மோகன் பாகவத்*

*இதில் கோல்வால்கர் காலத்திலும், தேவரஸ் காலத்திலும் மும்முறை தடை செய்யப்பட்டது ஆர்.எஸ்.எஸ். இயக்கம்!*

*காந்தியாரை கோட்சே சுட்டுக் கொலை செய்த போதும் (1948),*

*நெருக்கடி நிலை பிரகடனப்படுத்திய காலகட்டத்திலும் (1976),*

*பிறகு பாபர் மசூதி இடிக்கப்பட்ட காலத்திலும் (1992) தடை செய்யப்பட்டது.*

*இருமுறை ஆட்சியிலும் பொய்யான வாக்குறுதிகள்!*

*பா.ஜ.க. அரசியலில் கொஞ்சம் காலம் தனியே நின்று படுதோல்வி அடைந்து, பிறகு கூட்டணி தயவில் 23 நாள் ஆட்சி முதல் இன்றுவரை பல அவதாரங்கள், 'உத்திகளை, வித்தை'களைக் காட்டி வந்தது ஆர்.எஸ்.எஸ். அதன்மீதான தடையின் காரணமாக (1914 முதல்) சிறையில் இருந்தபோது, அதன் தலைவர் அன்றைய பிரதமர் நேரு, உள்துறை அமைச்சர் பட்டேல் போன்றவர்களிடம் அடங்கி ஒடுங்கி, தங்களது செயலில் மாற்றம் உருவாக்கும் உறுதிமொழிக் கடிதங்கள் எழுதுவது பிறகு வழமைபோல ரகசிய முறையில் வன்முறைகளைக் கையாண்டு, பல வித யுக்திகளை மேற்கொள்வது அதன் வழமையான குணாம்சம்! கடந்த இரண்டு முறையும் 'வளர்ச்சி' போன்ற பொய்யை, 'வளப்படுத்துதல்' போன்ற பொய்யுரைகளைக் கூறி, இளைஞர்களுக்கு வாக்குறுதித் தேனை வாயில் தடவி, எப்படியோ ஆட்சியைப் பிடித்து, தங்களது திட்டங்களை நிறைவேற்றிக் கொண்டு, "கண்டதே காட்சி, கொண்டதே கோலம்" என்று அரசியல் களத்தில் ஆட்டம் நடத்துகின்றனர் பா.ஜ.க.வினர்!*

*இனியும் மக்கள் ஏமாற மாட்டார்கள்!*

*கடந்த முறை இவர்களைப் புரிந்துகொள்ளாத வாக்காளர்கள், இம்முறை சாமான்ய மக்கள் படும் துயரம்மூலமாக "படமுடியாதினி துயரம் பட்டதெல்லாம் போதும்" என்று முடிவுக்கு வந்து தேர்தல் நாளை ஆவலுடன் எதிர் நோக்குகின்றனர்!*

*அதை நன்கு புரிந்து கொண்டனர் தங்களது பழைய வித்தைகள், சொத்தைகள் ஆகிவிட்டன! பிரதமர் மோடி, அமித்ஷா என்ற முகங்கள் வாக்குகளை வாங்கித் தராது என்பதை தெற்கே கருநாடக மாநிலத்திலும், வடக்கே இமாச்சலப் பிரதேசம் மற்றும் அண்மையில் நடைபெற்ற இடைத்தேர்தல்களிலும் புரிந்து கொண்டனர்!*

*இராமர் கோவில் கட்டினால் விலைவாசி குறையுமா? மக்கள் கேள்வி!*

*இராமர் கோவிலை இவர்கள் கட்டினால், உழைக்கும் மக்கள் "எங்களுக்கு 'ரொட்டி எங்கே?' வேலை எங்கே? விலைவாசி விண்ணை முட்டுகிறதே மணிப்பூரில் பெண்கள் நிர்வாணப்படுத்தப்பட்டு பாலியல் வன்முறைக்கு உட்படுத்தப்பட்டதும், மனித உயிர்கள் பலியும், பசுப் பாதுகாவலர்களின் அட்டகாசமும்தானே மிச்சம்?" என்று உணர்ந்து வரும் நிலை வந்துவிட்டதால், தங்களது ஒப்பனையை மாற்றி, திடீரென்று ஒடுக்கப்பட்டோர் சமூகநீதிபற்றி ஆர்.எஸ்.எஸ்.காரர்கள் தங்களது பழைய எதிர்ப்பை மக்கள் மறந்திருப்பார்கள் என்ற நினைப்பில், கசிந்துருகி கண்ணீர் பெருக 'அய்யோ, 2000 ஆண்டுகளாக இப்படி மக்கள் கல்வி, வேலை வாய்ப்பற்று இருக்கிறார்களே' என்று ஒப்பனை கலையும்போது ஒப்பாரிப் பாட்டை ஒப்புக்காகப் பாடுகிறார்கள்!*

*மகளிர் வாக்கைப் பெற இட ஒதுக்கீடு மசோதாவா?*

*மகளிர் வாக்கும் அவர்கள் எதிர்பார்த்தபடி வராது போலிருக்கிறதே என்று நினைத்த அவர்கள், மூலையில் போடப்பட்டிருந்த மகளிர் இட ஒதுக்கீடு மசோதாவை திடீரென்று நிறைவேற்றி, அதையும் நிபந்தனைக்குட்படுத்தி மகளிர் வாக்குகளைப் பெற, சமூக நீதியோடு இதனையும் சேர்க்க முயலுகின்றனர்! அதிலும் ஏமாற்றமே அவர்களுக்கு மிஞ்சும். எதிர்க்கட்சிகளின் ஒருங்கிணைப்பு ஒற்றுமை இவர்களது வயிற்றில் புளியைக் கரைக்கிறது!*

**வாக்காளர்களே, எச்சரிக்கை!**

*இதற்கு மூலகாரணம் தமிழ்நாடு அல்லவா? தி.மு.க. தலைவர் முதல மைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அல்லவா! எனவே, அவர்களை வேறு 'திரிசூலம்'மூலம் அச்சுறுத்தி, அபாண்டம் கூறி, அவதூறு அம்புகளை ஏவிவிட்டு, தேர்தல் வெற்றியைக் குறுக்கு வழியில் பறிக்கலாமா? என்று திகைத்துக் குழம்பிப் போய் உள்ளனர்! 'மயக்க பிஸ்கெட்டு' களை மக்கள் ஏற்கமாட்டார்கள்.*

*எனவே, மேலும் சில புதிய வித்தைகளைக் காட்டுவார்கள் அந்த அரசியல் வித்தைக்காரர்கள்! வாக்காளர்களே, எச்சரிக்கையாக எதையும் ஆராய்ந்து செயல்படுங்கள்!*

*இவ்வாறு கி.வீரமணி அவர்கள் தமதுஅறிக்கையில் கூறியுள்ளார்.*



புதுக்கோட்டை மாவட்டம், திருமயம் அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளியில், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு நடைபெற்ற மாற்றுத்திறனாளிகளுக்கான சிறப்பு மருத்துவ முகாமினை, சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலை மற்றும் ஊழல் தடுப்பு சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி துவக்கி வைத்து, மாற்றுத்திறனாளிகளுக்கு பல்வேறு உதவி உபகரணங்களை வழங்கினார். உடன் மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி.மா.செல்வி, புதுக்கோட்டை வருவாய் கோட்டாட்சியர் முருகேசன், மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் எஸ்.உலகநாதன், ஒன்றியக்குழு உறுப்பினர் அழகு (எ) சிதம்பரம், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உள்ளனர்.

## முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழா!

# திருமயத்தில் மாற்றுத்திறனாளிகளுக்கு மருத்துவ முகாம்!

### அமைச்சர் எஸ்.ரகுபதி துவக்கி வைத்தார்!

புதுக்கோட்டை, செப். 22 -

புதுக்கோட்டை மாவட்டம், திருமயம் அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளியில், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு, மாற்றுத்திறனாளிகளுக்கான சிறப்பு மருத்துவ முகாமினை, சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலை மற்றும் ஊழல் தடுப்பு சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி 16.09.2023 அன்று துவக்கி வைத்து, மாற்றுத்திறனாளிகளுக்கு பல்வேறு உதவி உபகரணங்களை வழங்கினார்.

சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலை மற்றும் ஊழல் தடுப்பு சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி தெரிவித்ததாவது:-

முதலமைச்சர் அவர்கள் மாற்றுத்திறனாளிகளின் நலனிற்காக எண்ணற்றத் திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்கள். அந்தவகையில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவினை சிறப்பிக்கும் வகையில், மாற்றுத்திறனாளிகளுக்கான சிறப்பு மருத்துவ முகாம் திருமயம் அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளியில் துவக்கி வைக்கப்பட்டது.

இம்முகாமில் 13 பயனாளிகளுக்கு ரூ.1,31,500 மதிப்பிலான பல்வேறு உதவி உபகரணங்கள் வழங்கப்பட்டன. மேலும் புதிதாக மாற்றுத்திறனாளிகளுக்கு மருத்துவச் சான்றுடன் கூடிய தேசிய அடையாள அட்டைகளும் வழங்கப்பட்டன.

இம்முகாமில் மருத்துவர்கள் கலந்துகொண்டு பரிசோதனை செய்து, மாற்றுத்திறனாளிகளுக்கு மருத்துவச் சான்றுடன் கூடிய தேசிய அடையாள அட்டை வழங்கப்பட்டது. மேலும் UDID அட்டை பதிவு மற்றும் மறுவாழ்வு உதவிகள் பெற பரிந்துரை செய்யப்பட்டது. எனவே முதலமைச்சர் அவர்களால் செயல்படுத்தப்படும் மாற்றுத்திறனாளிகளுக்கான திட்டங்களை உரிய முறையில் பெற்று பயனடைய வேண்டும் என அமைச்சர் எஸ்.ரகுபதி தெரிவித்தார்.

இம்முகாமில், மாவட்ட வருவாய் அலுவலர் மா.செல்வி, புதுக்கோட்டை வருவாய் கோட்டாட்சியர் முருகேசன், மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் எஸ்.உலகநாதன், ஒன்றியக்குழு உறுப்பினர் அழகு (எ) சிதம்பரம், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்துகொண்டனர்.

## பயிர்களுக்கு பூச்சி மருந்து தெளித்தல் பணிகளை விவசாயிகள் எளிதில் மேற்கொள்ள

# ட்ரோன் கருவிகள் மானியத்தில் அளிக்கப்படும்!

### வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் அறிவிப்பு!

சென்னை, செப்.22-

பயிர்களுக்கு பூச்சி மருந்து தெளிக்க ட்ரோன் கருவிகள் மானியத்தில் அளிக்கப்படும் என அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் தெரிவித்துள்ளார்.



இது குறித்து அவரது அறிக்கை வருமாறு: -

விவசாயத்தில் நிலவும் வேலையாட்கள் பற்றாக்குறையினை நிவர்த்தி செய்யவும் விவசாயிகள் காலத்தே சாகுபடிப் பணிகளை மேற்கொண்டு பயிர் உற்பத்தித் திறனை உயர்த்தவும் தமிழ்நாடு அரசு, வேளாண் இயந்திரமயமாக்குதல் திட்டத்தின் கீழ் பல்வேறு வகையான வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகளை விவசாயிகளுக்கு மானியத்தில் வழங்கி வருகிறது.

இத்திட்டத்தில் நடப்பாண்டில் சென்னை நீங்கலாக அனைத்து மாவட்டங்களிலும், தனிப்பட்ட விவசாயிகளுக்கு மானிய விலையில் வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகள் வழங்குதல், மானிய விலையில் வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகள் வாடகைக்கு வழங்கும் மையங்கள் அமைத்தல் முதலான பணிகள் முதற்கட்டமாக 50 கோடி ரூபாய் மதிப்பில் செயல்படுத்தப்பட்டு, தற்பொழுது இரண்டாம் கட்டத்திற்காக 70 கோடி ரூபாய் நிதி விடுவிக்கப்பட்டுள்ளது.

வேளாண் இயந்திரமயமாக்கும் துணை இயக்கத் திட்டத்தின் கீழ், பயிர்களுக்கு பூச்சி மருந்து தெளித்தல், பூச்சி, நோய் கண்காணித்தல் போன்ற பணிகளை மேற்கொள்ள ட்ரோன் போன்ற நவீன வேளாண் கருவிகளும் மானியத்தில் வழங்கப்பட்டு வருகின்றன. நடப்பு 2023-24ஆம் நிதி ஆண்டில், தனிப்பட்ட விவசாயி களுக்கு வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகள் மானியத்தில் வழங்கும் திட்டத்தில், ட்ரோன்கள் வாங்க விரும்பும் சிறு, குறு, ஆதி திராவிடர், பெண் விவசாயிகளுக்கு 50 சதவீத மானியம் அல்லது அதிகபட்ச மானியத் தொகையாக ஐந்து இலட்சம் ரூபாய் மற்றும் இதர விவசாயிகளுக்கு 40 சதவீத மானியம் அல்லது அதிகபட்ச மானியத் தொகையாக நான்கு இலட்சம் ரூபாய் வழங்கப்படுகிறது. மேலும், ஆதிதிராவிடர், பழங்குடியினர் பிரிவினைச் சார்ந்த சிறு, குறு விவ சாயிகளுக்கு கூடுதலாக 20 சதவீதம் மானியம் மாநில அரசு நிதியிலிருந்து வழங்கப்படுகிறது.

விவசாயக் குழுக்கள், கூட்டுறவு சங்கங்கள், உழவர் உற்பத்தியாளர் அமைப்புகள் மற்றும் கிராமப்புற இளைஞர்கள் மூலம் மானியத்தில் அமைக்கப்படும் வட்டார மற்றும் கிராம அளவிலான வேளாண் இயந்திர வாடகை மையங்களில் தேவைப்படுகின்ற வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகளுடன் சேர்த்து ட்ரோன் கருவிகளையும் மானியத்தில் பெறலாம்.

மேலும், ஏற்கனவே அரசின் மானியத்தில் கிராமப்புற இளைஞர்கள், கூட்டுறவு சங்கங்கள் மற்றும் உழவர் உற்பத்தியாளர் அமைப்புகளால் அமைக்கப்பட்ட வேளாண் இயந்திர வாடகை மையங்களில் கூடுதலாக ட்ரோன் வாங்க 40 சதவீதம் அல்லது நான்கு இலட்சம் ரூபாய் வரை மானியமாக வழங்கப்படுகிறது.

ட்ரோன்களைக் கொண்டு வேளாண் இயந்திர வாடகை மையம் அமைக்க அல்லது ஏற்கனவே அமைக்கப்பட்ட வேளாண் இயந்திர வாடகை மையங்கள்/உயர் தொழில்நுட்ப வாடகை மையங்களில் ட்ரோன்களை வாங்கிட விரும்பும் வேளாண் பட்டதாரிகளுக்கு ட்ரோன்களின் அடிப்படை விலையில் 50 சதவீதம் அல்லது ஐந்து இலட்சம் ரூபாய் இவற்றில் எது குறைவோ அத்தொகை மானியமாக வழங்கப்படுகிறது.

ட்ரோனை மானியத்தில் பெறும் விவசாயிகள் அதனை இயக்குவதற்கான பயிற்சியினைப் பெற்று அதற்கான உரிமத்தினையும் பெற்று ட்ரோனை இயக்கலாம் அல்லது ஏற்கனவே பயிற்சி பெற்று உரிமம் பெற்ற இளைஞர்கள் மூலம் இயக்கலாம். ட்ரோனை வாங்க வங்கிக் கடன் பெறும் விவசாயிகளுக்கு வேளாண் உட்கட்டமைப்பு நிதியிலி ருந்து மூன்று சதவிகித வட்டி மானியம் வழங்கப்படுகிறது.

தமிழ்நாட்டில் இரண்டு ட்ரோன் நிறுவனங்களின் இரண்டு மாடல்களுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. அவற்றில் விருப்பமுள்ளவற்றை விவசாயிகள் தேர்வு செய்துகொள்ளலாம்.

ட்ரோன் கருவி வாங்க விருப்பமுள்ள விவசாயி கள் https://mts.aed.tn.gov.in/evaadagai/ என்ற இணையதளம் மூலம் பதிவு செய்து, உரிய வழிமுறைகளின்படி மானியத்தில் பெற்று பயன்பெறுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

## கலைஞர் மகளிர் உரிமைத் தொகையில்

# கை வைப்பதற்கு யாருக்கும் உரிமை இல்லை!

### துறையின் ஆய்வுக் கூட்டத்திற்குப் பின் அமைச்சர் கே.ஆர். பெரிய கருப்பன் பேட்டி!

சென்னை, செப். 22 -



கூட்டுறவுத்துறை அமைச்சர் கேஆர். பெரியகருப்பன் தலைமையில் நேற்று முன்தினம் (20.09.2023) சென்னை, கீழ்ப்பாக்கம், தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றிய அலுவலகத்தில், கூடுதல் பதிவாளர்கள், அனைத்து மண்டல இணைப் பதிவாளர்கள் ஆகியோர்களுடனான ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை செயலாளர் ஜகநாதன், கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் மரு. ந.சுப்பையன், கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் (நுகர்வோர் பணிகள்) திருமதி.ஜெ.விஜயராணி , சிறப்புபணி அலுவலர் (தமிழ்நாடு கூட்டுறவு வங்கி) .எம்.பி.சிவன்அருள். (ஓய்வு) ஆகியோர் முன்னிலை வகித்தனர். அனைத்து கூடுதல் பதிவாளர்கள், அனைத்து மண்டல இணைப்பதிவாளர்கள், மத்திய கூட்டுறவு வங்கிகளின் செயலாட்சியர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

கூட்டத்தில், கலைஞர் மகளிர் உரிமைத் தொகை பெறுவதற்காக கூட்டுறவு வங்கிகளில் புதிதாக சேமிப்பு கணக்கு துவங்கப்பட்ட விவரம், கூட்டுறவுத் துறை அறிவிப்புகள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தொடர் நடவடிக்கைகள், புதிய உறுப்பினர் சேர்க்கை, பயிர்கடன்கள் வழங்கிய விவரம், பயிர்க் கடன் வழங்குதல் மற்றும் கால்நடை பராமரிப்பு கடன் வழங்குதலில் முன்னேற்றம், கூட்டுறவுச் சங்கங்களில் வைப்புத் தொகை, கடன்கள் வழங்குதலில் முன்னேற்ற விவரம், தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்களை பல்நோக்கு சேவை மையங்களாக உருவாக்குதல், தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள் தணிக்கை முன்னேற்றம், தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்களில் நிதிச்சமமின்மை / ஆதாரக் குறைவு, தமிழ்நாடு மாநில தலைமைக் கூட்டுறவு வங்கி செயல்பாடுகள், தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம் செயல்பாடுகள், தமிழ்நாடு நுகர்வோர் கூட்டுறவு இணையம் செயல்பாடுகள், தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியம் செயல்பாடுகள், நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலைகளின் கட்டுப்பாடற்ற பொருட்கள் விற்பனை முன்னேற்றம், பிரதம கூட்டுறவு பண்டகசாலைகளில் சில்லறை விற்பனை முன்னேற்றம், கூட்டுறவு மருந்தகங்கள், நியாயவிலைக் கடைகள் ஆய்வு மற்றும் கண்டறியப்பட்ட முறைகேட்டுத் தொகை, நியாயவிலைக் கடைகளில் UPI வசதி ரொக்கமற்ற பணப் பரிவர்த்தனை குறித்தான முன்னேற்றம், நியாய விலை கடைகளுக்கு ISO 9001:2015 மற்றும் ISO 28000:2007 ஆகிய பன்னாட்டு தர நிர்ணய சான்று பெறுதல் குறித்தான முன்னேற்றம், காலிக்கோணிகள் விற்பனை மற்றும் நிலுவை விவரம், வாடகைக் கட்டடங்களில் இயங்கும் நியாயவிலைக் கடைகளுக்கு சொந்த கட்டடம் கட்ட இடம் தேர்வு செய்யப்பட்டு மாவட்ட ஆட்சியர்களால் நிருவாக அனுமதி வழங்கப்பட்ட விவரம் மற்றும் நிருவாக அனுமதி வழங்கப்பட்ட நியாயவிலைக் கடைகளுக்கான கட்டடங்களின் கட்டுமான நிலை குறித்த முன்னேற்றம், நியாயவிலைக் கடைகளில் 2கி.கி / 5கி.கி எரிவாயு (FTL) உருளைகள் விற்பனை தொடங்கப்பட்ட விவரம், பனைவெல்லம் தேவைப்பட்டியல் அளித்தது, கொள்முதல் மற்றும் விற்பனை, சிறுதானியம் தேவைப்பட்டியல் அளித்தது, கொள்முதல் மற்றும் விற்பனை (சென்னை மற்றும் கோயம்புத்தூர் மாவட்டங்கள் மட்டும்), தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்கு வழங்க வேண்டிய நிலுவைத் தொகை மற்றும் கழகத்திடமிருந்து வரவேண்டிய நிலுவைத் தொகை விவரம், வேளாண் விளைபொருட்கள் விற்பனை, கூட்டுறவு விற்பனை சங்கங்கள், பெரும்பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்களின் செயல்பாடுகள், கிடங்கு மேம்பாடு மற்றும் ஒழுங்குமுறை ஆணையத்தில் கிடங்குகளை பதிவு செய்தல் / eNWR issue / தானிய ஈட்டுக் கடன், மாவட்ட ஆள்சேர்ப்பு நிலையம் பணிகள் முன்னேற்றம், நீதிமன்ற வழக்குகளில் எதிர் வாதுரை (Counter Affidavit) தாக்கல் செய்யப்பட வேண்டிய இனங்கள் குறித்த விவரம், நீதிமன்ற தீர்ப்பில் கால நிர்ணயம் செய்து வழங்கப்பட்ட ஆணைகள் மீது நிலுவையில் உள்ள நடவடிக்கைகள் குறித்த விவரம், நீதிமன்ற அவமதிப்பு வழக்குகள் நிலுவை விவரம், முதல்வரின் முகவரி போன்ற பொருண்மை குறித்து கூட்டுறவுத்துறை அமைச்சர் கேஆர். பெரியகருப்பன் விரிவாக ஆய்வு மேற்கொண்டார்கள்.

மேலும், கூட்டுறவுத்துறையின் சார்பில் நடைபெறும் பணிகளை தொய்வின்றி, விரைந்து முடிக்கவும் அலுவலர்களுக்கு அறிவுரைகளை வழங்கினார்கள்.

பின்னர், மாநில அளவில் சிறப்பாக செயல்பட்டு கலைஞர் மகளிர் உரிமைத் தொகை பெறுவதற்காக அதிக அளவில் புதிதாக சேமிப்பு கணக்கு துவங்கியமைக்காக திண்டுக்கல் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியின் இணைப்பதிவாளர் / செயலாட்சியர் உள்ளிட்ட குழுவினருக்கும் மற்றும் 01.04.2023 முதல் 31.08.2023 வரை அதிக கடன், கலைஞர் மகளிர் உரிமைத்தொகை திட்டம் செயல்பாடுகளில் சிறப்பாக செயல்பட்டது, அதிக சேமிப்பு கணக்கு துவங்கியது, அதிக சங்கங்களை லாபத்தில் செயல்பட வைத்தது, அரசின் அறிவிப்புகளை விரைவாக செயல்படுத்திய சட்டபூர்வ இனங்களில் உரிய காலத்தில் நடவடிக்கை எடுத்தது உள்ளிட்ட அனைத்து வகையிலும் சிறப்பாக செயல்பட்டமைக்காக அரியலூர் மற்றும் ஈரோடு மண்டல இணைப்பதிவாளர்களை பாராட்டி பாராட்டு சான்றிதழ் மற்றும் பரிசுகளை கூட்டுறவுத்துறை அமைச்சர் கேஆர்.பெரியகருப்பன் வழங்கினார்.

மேலும், சென்னை மத்திய கூட்டுறவு வங்கியின் பெரியார் நகர் கிளையில் உதவி மேலாளராக பணிபுரிந்த செ.சின்னசாமி (லேட்) அவர்களின் மகள் செல்வி.சி.சிவசெல்வி அவர்களுக்கு கருணை அடிப்படையில் பணிநியமன ஆணையினை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் வழங்கினார்.

பின்னர் அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் செய்தியாளர்களிடம் தெரிவித்தாவது : -

மக்களுக்கு சேவை செய்கின்ற துறையாக, குறிப்பாக தமிழ்நாட்டில் இருக்கின்ற எந்த ஒரு சாமானிய மக்களும் இந்த துறையின் மூலம் பயனடையாதோர் இல்லை அல்லது எந்த ஒரு சேவையையோ பெறாதவர்கள் இல்லை என்று சொல்ல கூடிய அளவிற்கு அனைத்து இல்லங்களுக்கும், அனைத்து மக்களுக்கும் சேவை செய்கின்ற துறையாக இந்த துறை விளங்குகிறது. அது குடிமைப்பொருட்கள் வழங்குவதாக இருந்தாலும் சரி அல்லது அரசின் சார்பில் முதலமைச்சர் அவ்வப்போது அறிவிக்கின்ற சிறப்பு திட்டங்களை மக்களிடத்தில் கொண்டு போய் சேர்ப்பதாக இருந்தாலும், அதேபோல வங்கிகளை இணைத்து ஏழை, எளிய, நடுத்தர மக்களுக்கும், விவசாயிகளுக்கும், சிறு தொழில் செய்வோர்களுக்கும், கைம்பெண்கள், கணவரால் கைவிடப்பட்டவர்கள் என்று பாதிக்கப்பட்ட நலிந்த பிரிவினருக்கு பொருளாதாரத்தை உயர்த்துவதற்கான திட்டங்களுக்கு தேவையான நிதிகளை ஒதுக்கி, அவர்களுக்கு அதனை வழங்கி, அவர்களை பொருளாதார ரீதியிலாக உயர்த்துகின்ற பெரும்பங்கு இந்த துறைக்கு இருக்கின்றது.

அதேபோல, கூட்டுறவு சங்கங்கள் முறையாக தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகள் மூலமாக இயங்கின்ற துறையாகவும் இத்துறை இருக்கின்றது. புதிதாக இத்துறையின் மூலம் பயிற்சி தருகின்ற கல்வி நிலையங்களும் மாவட்ட வாரியாக இயங்கிவருகிறது. இப்படி பண்முகத் திறமை கொண்டது இந்த கூட்டுறவுத்துறை. சமீபத்தில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்ட கலைஞர் பெயரிலான மகளிர் உரிமைத்தொகை திட்டத்தை செயல்படுத்துவதில் முதலமைச்சர் அவர்களின் பாராட்டுகளையும் இத்துறையின் கூட்டுறவு வங்கிகள் பெற்றிருக்கிறது.

இத்திட்டத்தின் மூலம் புதிதாக 9 லட்சத்து 91 ஆயிரம் புதிய வங்கி கணக்குகள் கூட்டுறவு வங்கிகளுக்கு கிடைத்துள்ளது மகிழ்ச்சியான செய்தி. தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளுக்கு இணையாகவும், அதை விட கூடுதலாகவும் நமது கூட்டுறவு வங்கிகளின் சேவைகளை மக்களுக்கு வழங்கியிருப்பது பாராட்டுதலுக்குரியது. கூட்டுறவு சங்கங்களுக்கான தேர்தல்களை நடத்தி மக்கள் பிரதிநிதிகளை தேர்ந்தெடுப்பதும் இத்துறையின் பணியாகும்.

படித்த இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பினை உருவாக்கித் தர வேண்டும் என்ற தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் எண்ணத்தினை நிறைவேற்றும் வகையில், விற்பனையாளர்கள், கட்டுநர்கள் என 6,500 காலிப்பணியிடங்களுக்கு அறிவிப்புகள் வெளியிடப்பட்டு, சுமார் 4,50,000 விண்ணப்பங்கள் பெறப்பட்டு, அதில் 3,50,000 விண்ண ப்பதாரர்களுக்கு நேர்காணல் நடத்தப்பட்டு, அதில் 24 மாவட்டங்களுக்கான முடிவுகள் அறிவிக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள மாவட்டங்களுக்கான தேர்வுப்பட்டியல் விரை வில் வெளியிடப்படும் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்றைய தினம் கூட்டுறவுத்துறையில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வில், இத்துறையின் செயல்பாடுகள் திருப்திகரமாக உள்ளது. இருந்தாலும் இன்னும் சிறப்பாக செயல்பட வேண்டும் என அறிவுரைகளையும், ஆலோசனைகளையும் நமது அலுவலர்களுக்கு நானும், செயலாலர் அவர்களும், பதிவாளர் அவர்களும் வழங்கி உள்ளோம். இன்றைய காலகட்டத்தில் வங்கி சேவை என்பது போட்டிகள் நிறைந்த உலகமாக உள்ளது. அதிலே நவீனமயமாக்கும் பணிகளையும் சிறப்பாக முன்னெடுத்து வந்துள்ளோம். இன்னும் மூன்று அல்லது நான்கு மாதகாலங்களுக்குள் எல்லா வங்கிகளுக்கு இணையாக சேவையினை வழங்கி, வாடிக்கையாளர்களின் நன்மதிப்பை பெறக்கூடிய வங்கிச்சேவையை இத்துறையின் மூலம் வழங்க முடியும் என்ற நம்பிக்கை எங்களுக்கு இருக்கின்றது.

**செய்தியாளர்களுக்கு பேட்டி!**

கேள்வி : கடந்த காலங்களில் வெங்காயம், தக்காளி விலை உயர்வைப்பார்த்தோம். வரும் காலங்களும் மழைக்காலமாக இருப்பதால் ஏதேனும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதா?

பதில் : சந்தை நிலைமைகளை உன்னிப்பாக கவனித்து வருகின்றோம். கூட்டுறவுத்துறை மட்டுமே சந்தையை கட்டுப்படுத்துவது என்பது கடினமான ஒன்று. உணவு துறை, வேளாண்துறை, கூட்டுறவுத்துறை சேர்ந்த உயர் மட்ட அலுவலர்கள் கலந்தாலோசித்து வருகிறார்கள்.

கேள்வி : தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளில் குறைந்த இருப்புத்தொகை (Minimum Balance) இல்லை என்ற காரணத்தினால் கலைஞர் மகளிர் உரிமைத்தொகை திட்டத்தில் வழங்கப்பட்ட உரிமைத்தொகை பிடித்தம் செய்யப்பட்டுள்ளது.

பதில் : இதுபோன்ற செய்திகள் முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு செல்லப்பட்டு, நிதித்துறை அமைச்சர் மூலம் வங்கிகளுக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

”இது உரிமைத்தொகை இதிலே கை வைப்பதற்கு யாருக்கும் உரிமை இல்லை” என்ற கண்டிப்பான அறிக்கை இப்போது வெளிவந்திருக்கிறது. எனவே, எதிர்காலத்தில் இதுபோன்று நடக்க வாய்ப்பில்லை.

கேள்வி : பயிர்கடன் தற்போது வரை எவ்வளவு வழங்கப்பட்டுள்ளது? நிர்ணயிக்கப்பட்ட இலக்கை விட அதிகமாக வழங்கப்பட்டுள்ளதா?

பதில் : கடந்த ஆட்சி காலத்தை விட, ஏன்? கடந்த ஆண்டை விட பயிர்கடன் அதிகமாக வழங்கப்பட்டுள்ளது. கடந்த ஆண்டு ரூ.12 ஆயிரம் கோடி இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டு, ரூ.13,500 கோடியைத் தாண்டியது. இந்தாண்டு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால், எங்களுக்கு பயிர்கடனுக்காக ரூ.14 ஆயிரம் கோடி இலக்கு நிர்ணயம் செய்துள்ளார்கள். கடந்த ஆண்டைப் போல இந்தாண்டும் நாங்கள் இலக்கையும் தாண்டி பயிர்கடன் வழங்கி அதனை நிறைவேற்றுவோம் என்ற நம்பிக்கை இருக்கின்றது.

கேள்வி : கூட்டுறவுத்துறையின் CoBazaar என்ற செயலி மக்களிடத்தில் நல்ல வரவேற்பைப் பெற்றுள்ளது. இந்த செயலியினை விரிவுபடுத்தும் திட்டம் உள்ளதா?

பதில் : நிச்சயமாக. மக்கள் சேவையில் இத்துறை பல்வேறு யோசனைகளை முன்னெடுத்து செயல்படுத்தி வருகிறது. CoBazaar செயலியில் நவீன யுக்திகளைப் பயன்படுத்தும் எண்ணம் ஆய்வில் உள்ளது. விரைவில் அதற்கான அறிவிப்பு வெளியிடப்படும்.

இவ்வாறு அமைச்சர் கே. ஆர்.பெரியகருப்பன் பேட்டி அளித்தார்.

## டி.கே.எஸ்.இளங்கோவன் பங்கேற்பு! அமைச்சர் கா.ராமச்சந்திரன் துவக்கி வைத்தார்!

# நீலகிரியில் கலைஞர் நூற்றாண்டு விழா கருத்தரங்கம்!

### மாவட்டச் செயலாளர் பா.மு.முபாரக் தலைமையில் நடைபெற்றது!

ஊட்டி, செப் 22-

திராவிட முன்னேற்ற கழக தலைவர், முதல்வர் அவர்களின் அறிவிப்பிற்கிணங்க, முத்தமிழறிஞர் - சமூக நீதி காவலர் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவினை மிக சிறப்புடன் கொண்டாடிடும் வகையில் நீலகிரி மாவட்டத்தில் கழக கொடியேற்று விழா நிகழ்ச்சிகள், மருத்துவ முகாம்கள், ஆதவரவற்ற இல்லங்களில் அறுசுவை உணவுகள் வழங்கும் உள்ளிட்ட பல்வேறு நிகழ்ச்சிகள் கடந்த ஜூன் மாதம் முதல் நடைபெற்று வருகிறது.

இதன் தொடர்ச்சியாக தலைவர் கலைஞர் நூற்றாண்டு விழா கருத்தரங்கம் உதகை YWCA ஆனந்தகிரி கூட்ட அரங்கில் மாவட்டச் செயலாளர் பா.மு.முபாரக் தலைமையில் நடைபெற்றது. மாவட்ட துணை செயலாளர் ரவிகுமார் அனைவரையும் வரவேற்றார். கருத்தரங்கத்தை கழக தேர்தல் பணி செயலாளரும், சுற்றுலாத் துறை அமைச்சருமான கா.ராமசந்திரன் துவக்கி வைத்தார்.

கருத்தரங்கத்தில் கழக செய்தி தொடர்பு செயலாளர் டி.கே.எஸ்.இளங்கோவன் கலைஞர் ஒரு கருவூலம் எனும் தலைப்பிலும், மாநில மருத்துவர் அணி செயலாளர் மருத்துவர் எழிலன் கலைஞர் ஓர் அறிவாலயம் எனும் தலைப்பிலும், கழக கொள்கை பரப்பு துணை செயலாளர் பெருநற்கிள்ளி கலைஞர் ஓர் அறிவகம் எனும் தலைப்பிலும், கழக செய்தி தொடர்பு துணை செயலாளர் பொள்ளாச்சி சித்திக் கலைஞர் ஒரு நூலகம் எனும் தலைப்பிலும், ஈரோடு தெற்கு மாவட்ட மகளிர் தொண்டரணி துணை அமைப்பாளர் ஈரோடு சத்தியவதி கலைஞர் ஓர் அன்பகம் எனும் தலைப்பிலும் கருத்துரை வழங்கினர்.

நிகழ்ச்சியில் மாவட்ட அவை தலைவர் போஜன், மாவட்ட துணைச் செயலாளர்கள் தமிழ்செல்வன், லட்சுமி, மாவட்ட பொருளாளர் நாசர் அலி, தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் முஸ்தபா, காசிலிங்கம், இளங்கோவன், திராவிடமணி, ராஜூ, எக்ஸ்போ செந்தில், மாநில சிறுபான்மை பிரிவு துணை செயலாளர் அன்வர்கான், மாநில விளையாட்டு அணி துணை செயலாளர் வாசிம் ராஜா நகர செயலாளர்கள் ஜார்ஜ், ராமசாமி, சேகரன், இளஞ்செழியன் பாபு, ஒன்றிய கழக செயலாளர்கள் லியாகத் அலி, பரமசிவன், லாரன்ஸ், காமராஜ், கண்ணன், பிரேம்குமார், பீமன், சிவானந்தராஜா, சுஜேஷ், தலைமை பொதுக்குழு உறுப்பினர்கள் கருப்பையா, சதக்கத்துல்லா, பில்லன், ஷீலாகேத்ரின், ராஜேந்திரன், உதயதேவன், மோகன் குமார், ராஜா, செல்வம், காளிதாசன், பேரூர் கழக செயலாளர்கள் பிரகாஷ்குமார், உதயகுமார், சதீஷ்குமார், நடராஜன், ரமேஸ்குமார், சஞ்சீவ் குமார், சின்னவர், சுப்ரமணி, காளிதாஸ், மார்டின், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் இமயம்சசிகுமார், விவேகானந்தன், ஆல்வின், காந்தல் ரவி, எல்கில் ரவி, ராஜா, வெங்கடேஷ், ஆலன், அன்வர் அப்துல்லா, ஜெயந்தி, மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் நவுபுல், பாபு, பத்மநாபன், வினோத் குமார், முரளிதரன், நகராட்சி தலைவர்கள் வாணீஸ்வரி, ஷீலாகேத்ரின், சிவகாமி, பஞ்சாயத்து யூனியன் தலைவர்கள் ராம்குமார், சுனிதா, கீர்த்தனா, மாயன், நாகராஜ், பேரூராட்சி தலைவர்கள் கலியமூர்த்தி, ஜெயகுமாரி, கௌரி, சித்ராதேவி, ஹேமா மாலினி, வள்ளி, சத்திய வாணி, ராதா உட்பட கழக நிர்வாகி கள் கலந்துகொண்டனர்.

கூட்ட முடிவில் உதகை நகர செயலாளர் ஜார்ஜ் நன்றி கூறினார்.

## முரசொலி துணை ஆசிரியராகப் பணிபுரியும்

# எஸ்.சுந்தரமூர்த்தியின் சகோதரர் எஸ்.மணிவாசகன் மறைவு!

வேலூர், செப். 22-

முரசொலியில் துணை ஆசிரியராகப் பணிபுரியும் எஸ்.சுந்தரமூர்த்தியின் இளைய சகோதரர் எஸ்.மணிவாசகன் அவர்கள் (வயது 65) உடல் நலக் குறைவின் காரணமாக வேலூர் அரசு பொது மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்தார்.

இந்நிலையில் சிகிச்சை பலனின்றி நேற்று முன்தினம் (20.09.2023) காலை இயற்கை எய்தினார் என்பதனை அறிவிக்க வருந்துகிறோம்.



செய்தியறிந்ததும் கழகத்தினர், உறவினர்கள், நண்பர்கள் மறைந்த மணிவாசகன் அவர்களின் உடல் மீது மலர் மாலை வைத்து இறுதி அஞ்சலி செலுத்தினர்.

அன்னாரின் இறுதி ஊர்வலம் நேற்று முன்தினம் அவரது சொந்த ஊரான ஆர்க்காட்டில் உள்ள அவரது இல்லத்தில் இருந்து புறப்பட்டு ஆர்க்காட்டில் உள்ள இடுகாட்டில் இறுதிச் சடங்குகள் நடைபெற்றன.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

**ஆயிரம்விளக்கு மு. நடராசன்**

**செப்டம்பர் 22 (2004)**



இளமைப் பருவத்திலேயே கழகத்தில் இணைந்து பணியாற்றியவர்.

ஆயிரம்விளக்கு பகுதியில் இருபத்தைந்து ஆண்டுகள் வட்டக் கழகச் செயலாளராகவும், பத்து ஆண்டுகள் பகுதிக் கழகச் செயலாளராகவும், மத்திய சென்னை மாவட்ட துணைச் செயலாளராகவும், தென்சென்னை மாவட்டப் பொருளாளராகவும் பணியாற்றியவர்.

கழகம் அறிவித்த போராட்டங்களில் பங்கேற்று சிறை சென்றவர்.

சென்னை மாநகராட்சி 110வது வார்டு கவுன்சிலராக இருமுறையும், மண்டலக்குழுத் தலைவராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டு, அப்பகுதி மக்களுக்கு தேவையான அடிப்படை வசதிகளை செய்து கொடுத்து, அவர்களின் நன்மதிப்பைப் பெற்றவர்.

இவரது பணியினை பாராட்டும் வகையில் தலைவர் கலைஞர் அவர்களிடம் இருமுறை கணையாழி பெற்றவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (20.09.2023) தலைமைச் செயலகத்தில், இந்து சமய அறநிலையத்துறையின் நிர்வாக கட்டுப்பாட்டிலுள்ள திருக்கோயில்களில் பணிபுரிந்து ஓய்வுபெற்ற திருக்கோயில் பணியாளர்களுக்கு துறை நிலையிலான ஓய்வூதியத் திட்டத்தின்கீழ், வழங்கப்பட்டு வந்த ஓய்வூதியத்தை ரூ.3,000/–லிருந்து ரூ.4,000/–மாகவும், குடும்ப ஓய்வூதியத்தை ரூ.1,500/–லிருந்து ரூ.2,000/–மாகவும் உயர்த்தி அதற்கான காசோலைகளை வழங்கிடும் அடையாளமாக, ஓய்வுபெற்ற 5 திருக்கோயில் பணியாளர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியம் பெறும் 5 பணியாளர்களின் குடும்பத்தினருக்கு ஓய்வூதியத்திற்கான காசோலைகளை வழங்கி, தொடங்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, தலைமைச் செயலாளர் சிவ்தாஸ் மீனா, சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை முதன்மைச் செயலாளர் டாக்டர் க.மணிவாசன், இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் க.வீ.முரளீதரன், கூடுதல் ஆணையர் அ.சங்கர் ஆகியோர் கலந்து கொண்டனர்.



தமிழ்நாடு அரசின் நிதித்துறை முதன்மை செயலாளர் த.உதயச்சந்திரன் தாயார் திருமதி. லீலாவதி அவர்கள் மறைவு செய்தி அறிந்த கழக இளைஞரணிச் செயலாளரும், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் மறைந்த லீலாவதி உடலுக்கு மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினார். உடன் அமைச்சர்கள் எ.வ.வேலு, எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், சு.முத்துசாமி, மு.பெ.சாமிநாதன்,பி.மூர்த்தி, நாமக்கல் கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினருமான கே.ஆர்.என்.இராஜேஸ்குமார், நாமக்கல் மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர் எஸ்.எம்.மதுரா செந்தில் மற்றும் கழக முன்னணியினர் அஞ்சலி செலுத்தினர்.

### கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம்

# சமுதாயம் - நாட்டின் வளர்ச்சிக்கு தூண்டுகோலான திட்டம்!

## மதுரையில் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் புகழாரம்!

*மதுரை, செப். 22 -*

500 பெண்களுக்கு கலைஞர் உரிமைத் தொகையை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வழங்கி பேசுகையில் கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம் சமுதாய மற்றும் நாட்டின் வளர்ச்சிக்கு தூண்டுகோலாக உள்ளது என்றும் தி.மு.க. ஆட்சியில் தான் பெண்களின் முன்னேற்றத்துக்கு ஏராளமான திட்டங்கள் மகளிர் உரிமைத் திட்டம் சமுதாய வளர்ச்சி மற்றும் நாட்டின் வளர்ச்சிக்கு பெரிய தூண்டுகோலாக உள்ளது என்றும் குறிப்பிட்டார்.

இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் மதுரை மாவட்டத்தில் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ளார். அதன்படி, கலைஞர் மகளிர் உரிமைத்தொகை வழங்கும் நிகழ்ச்சி மதுரை மேலூரில் நடைபெற்றது. இதில், 500 பெண்களுக்கு உரிமைத் தொகையை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வழங்கினார். வணிக வரித்துறை அமைச்சர் மூர்த்தி, சிறப்பு திட்ட செயலாக்கத்துறை செயலாளர் தாரேஸ் அகமத், மாவட்ட ஆட்சியர் சங்கீதா, சட்டமன்ற உறுப்பினர் கோ. தளபதி, மேயர் இந்திராணி பொன்வசந்த் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். இந்த



நிகழ்ச்சியில் பேசிய அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், தி.மு.க. ஆட்சியில் பெண்களின் கல்விக்காக செயல்படுத்தப்பட்டுள்ள மாதம் ஆயிரம் ரூபாய் வழங்கும் திட்டம், மகளிருக்கு கட்டணமில்லா பேருந்து சேவை உள்ளிட்ட பல்வேறு திட்டங்களை பட்டியலிட்டார். மகளிர் உரிமைத் திட்டம் சமுதாய வளர்ச்சி மற்றும் நாட்டின் வளர்ச்சிக்கு பெரிய தூண்டுகோலாக உள்ளதாகவும் கூறினார்.

முன்னதாக நேற்று முன்தினம் மதுரைக்கு வருகை தந்த அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் செய்தியாளர்களுக்கு பேட்டியளிக்கையில் "பெண்களுக்கான 33 சதவிகித இட ஒதுக்கீடு மசோதாவில் உரிய விளக்கம் இல்லை. மக்கள் தொகை கணக்கெடுப்பை நடத்த வேண்டும் என்கிறார்கள். அதேபோல எல்லை நிர்ணயம் செய்ய வேண்டும் என்கிறார்கள்" என்றும் கூறியுள்ளார்.

### திருவாரூர் மாவட்ட இலக்கிய அணி சார்பில்

# கலைஞர் நூற்றாண்டு விழா சிறப்பு கருத்தரங்கம்!

## மாவட்டச் செயலாளர் பூண்டி கே.கலைவாணன் தலைமை!

*திருவாரூர், செப். 22 -*

திருவாரூர் மாவட்ட தி.மு.க. இலக்கிய அணி சார்பில் கலைஞர் நூற்றாண்டுவிழா சிறப்பு கருத்தரங்கம் 23.09.2023 சனிக்கிழமை அன்று மாலை நடைபெற இருக்கிறது. பூண்டி.கே.கலைவாணன் தலைமையில் தலைமைக் கழகப் பேச்சாளர்கள் பங்கேற்று கருத்தரங்கத்தில் பேச இருக்கின்றனர்.

முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா, தமிழ்நாடு முதல்வர் திராவிட நாயகர் தளபதி அவர்களின் வழிகாட்டுதல்களின் படி தமிழ்நாடு முழுவதும் எழுச்சியோடு நடைபெற்று வருகிறது. திருவாரூர் மாவட்டச் செயலாளரும், சட்டமன்ற உறுப்பினருமான பூண்டி கே.கலைவாணன் ஆலோசனைப்படி மாவட்ட இலக்கிய அணியின் சார்பில் கருத்தரங்கம் 23.09.2023 சனிக்கிழமை அன்று மாலை 4.00 மணிக்கு திருவாரூர் கீழ வீதி சாந்தி திருமண மண்டபத்தில் நடைபெற இருக்கிறது.

இந்தக் கருத்தரங்கத்திற்கு மாவட்டச் செயலாளர் பூண்டி கே.கலைவாணன் எம்.எல்.ஏ., தலைமை ஏற்கிறார். தலைமைக் கழகப் பேச்சாளரும் தமிழ்நாடு சட்டப் பேரவை சிறப்பு கொறடாவுமான கோவி.செழியன் "கலைஞர் ஒரு சமூக நீதி காவலர்" எனும் தலைப்பிலும் , மாநில இலக்கிய அணி துணை செயலாளர் ஆடுதுறை உத்திராபதி "கலைஞர் ஒரு சகாப்தம்" என்கிற தலைப்பிலும், மாவட்ட இலக்கிய அணி துணை அமைப்பாளர் மன்னை சோம இளங்கோவன் "அரசியல் வித்தகர் கலைஞர்" எனும் தலைப்பிலும் கருத்துரையாற்ற இருக்கின்றனர்.

மாவட்ட ஊராட்சி தலைவர் தலையாமங்கலம் ஜி.பாலு, ஒன்றிய பெருந்தலைவர் புலிவலம் ஏ.தேவா,

மாவட்ட ஊராட்சி துணை தலைவர் சேகர் கலிய பெருமாள், ஒன்றிய செயலாளர்கள் ஆர்.பாலச்சந்திரன், ஐ.வி.குமரேசன், பால.ஞான வேல், நகரச் செயலாளர்கள் வாரை. எஸ்.பிரகாஷ், எஸ்.வி.பக்கிரசாமி, பூண்டி.கலைவேந்தன், மாவட்ட இலக்கிய அணி தலைவர் அண்ணாதாசன், துணைத் தலைவர் தியாகராஜன், அமைப்பாளர்கள் எண்கண் மணி, துணை அமைப்பாளர்கள் ஜாகிர் உசேன், தங்க. குணசேகரன்,பால.முத்து, செல்லத்துரை, சோமசுந்தரம் உள்ளிட்டோரும் முன்னிலை ஏற்கின்றனர்.



சென்னை கலைவாணர் அரங்க வளாகத்தில் உள்ள மாநில செய்தி நிலைய கூட்டரங்கில், நேற்று முன்தினம் (20.09.2023) முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் தமிழ்நாட்டிற்கு ஆற்றிய அரும்பணிகளில் அவரது பரிமாணங்களைப் போற்றும் வகையில் அமைக்கப்பட்ட குழுக்களில் "இதழாளர் கலைஞர்" என்ற குழுவின் ஆலோசனைக் கூட்டம், இக்குழுவின் தலைவரும் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சருமான மு.பெ.சாமிநாதன் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடுவாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் செஞ்சி கே.எஸ். மஸ்தான், பால்வளத்துறை அமைச்சர் த. மனோ தங்கராஜ், செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநரும், உறுப்பினர் செயலருமான த. மோகன், உறுப்பினர்கள். இந்து ராம், நக்கீரன் கோபால், கே.வைத்தியநாதன், விஜய் சங்கர், பாபு ஜெயக்குமார், அருண்ராம், கோவி. லெனின், மு. குணசேகரன், செந்தில்வேலன் (வேல் வீச்சு) மற்றும் அரசு அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

# தமிழ்நாடு நிதித்துறை செயலாளர் உதயச்சந்திரன் தாயார் மறைவு!

## அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் -அமைச்சர்கள் - எம்.எல்.ஏக்கள் அஞ்சலி செலுத்தினர்!

*நாமக்கல், செப். 22 -*

தமிழ்நாடு நிதித்துறை செயலர் உதயச்சந்திரனின் தாயார் லீலாவதி நாமக்கல்லில் காலமானார்.

நாமக்கல், நகராட்சிக்குட்பட்ட சேலம் ரோட்டில் உள்ள என்ஜிஜிஓ காலனியைச் சேர்ந்தவர் உதயச்சந்திரன். ஐஏஎஸ் அதிகாரியான இவர், பல்வேறு மாவட்டங்களில் பணிபுரிந்துள்ளார். தற்போது, சென்னையில், தமிழ்நாடு அரசின் நிதித்துறை செயலாளராகவும், சிறப்பு திட்டங்கள் அமலாக்கத் துறை செயலாளராகவும் பதவி வகித்து வருகிறார்.

இந்த நிலையில், நாமக்கல்லில் உள்ள அவரது வீட்டில் வசித்து வந்த, அவரது தாயார் லீலாவதி (72), கடந்த சில நாள்களாக உடல் நலக்குறைவால் பாதிக்கப்பட்டிருந்தார். சேலம் தனியார் ஆஸ்பத்திரியில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்ட லீலாவதி நேற்று 20 ம் தேதி சிகிச்சை பலனின்றி காலமானார்.

நாமக்கல் சேலம் சாலை, முருகன் கோயில் பின்புறம், NGGOS காலனியில் உள்ள அன்னாரது இல்லத்தில் அவரது உடலுக்கு தமிழ்நாடு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், பொதுப்பணித்துறை மற்றும் நெடுஞ்சாலைகள் துறை அமைச்சர் எ.வ. வேலு, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், வணிகவரி மற்றும் பத்திரப்பதிவுத்துறை அமைச்சர் மூர்த்தி, வீட்டுவசதி துறை அமைச்சர் செ.முத்துசாமி, வனத்துறை அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன், நாமக்கல் மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர் எஸ்.எம்.மதுரா செந்தில், சட்டமன்ற உறுப்பினர்கள் நாமக்கல் பெ.இராமலிங்கம், கே.பொன்னுசாமி, மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் சி. விஸ்வநாத், துணை அமைப்பாளர் மல்லை ஜெகதீஸ்குமார், நகரகழக செயலாளர் ராணா ஆனந்த், பூபதி, சிவக்குமார், நாமக்கல் நகர மன்ற தலைவர் து.கலாநிதி மற்றும் ஒன்றிய, பேரூர் கழக செயலாளர்கள், கழக நிர்வாகிகள், சார்பு அணி நிர்வாகிகள் உள்ளிட்ட பலர் அஞ்சலி செலுத்தினர்.

### முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழா!

# தமிழ்நாடு முழுவதும் நலத்திட்ட உதவிகள் வழங்கி சிறப்பாக கொண்டாடுவோம்!

## கழக நெசவாளர் அணி கூட்டத்தில் தீர்மானம்!

*சென்னை, செப். 22 -*

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா தமிழகம் முழுவதும் சிறப்பாக நலத்திட்ட உதவிகளுடன் கொண்டாட நடைபெற்ற நெசவாளர் அணியின் மாவட்ட, மாநகர தலைவர், அமைப்பாளர்கள் கூட்டம், தியாகராயர் நகர், அக்கார்டு ஓட்டலில் நடைபெற்றது.

கூட்டத்திற்கு மாநில நெசவாளர் அணி தலைவர் நன்னியூர் ராஜேந்திரன், தலைமை தாங்கினார்.

துணைத் தலைவர் மாநில நெசவாளர் அணி ஓ. ஏ. நாகலிங்கம், வரவேற்றுப் பேசினார்.

மாநில செயலாளர்கள்: எஸ்.எல்.டி.ப. சச்சிதானந்தம், க.பழனிச்சாமி, காஞ்சி தி. அன்பழகன், பரணி. கே. மணி, நெல்லை சொ. பெருமாள், கே.எம்.நாகராஜன், சிந்து ரவிச்சந்திரன், துணை செயலாளர்கள்: வசந்தம் ஜெயக்குமார், ஜி.வி.மணி மாறன், கோவிந்தசாமி, ஆ. ராமசாமி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இக்கூட்டத்தில் உயர் கல்வித் துறை அமைச்சர் / கழக துணை பொது செயலாளர் க. பொன்முடி, கைத்தறி & துணிநூல் துறை அமைச்சர் ஆர்.காந்தி, கழக அமைப்புச் செயலாளர் ஆர். எஸ். பாரதி, சென்னை (மே) மாவட்ட செயலாளர் நே. சிற்றரசு ஆகியோர் கலந்து கொண்டுசிறப்புரையாற்றினர்.

சென்னை (மே) மாவட்ட அமைப்பாளர் என். அரவிந்தகுமார் நன்றி கூறினார்.

கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு:

திராவிட இயக்கத்தின் முதுபெறும் தலைவரும். தந்தை பெரியாரின் குருகுலத்தில் பயின்று. பேரறிஞர் அண்ணாவின் பாசறையில் வளர்ந்து, தமிழ்த்தாயின் தலைமகன், எழுத்தாற்றல், பேச்சாற்றல், நிர்வாகத் திறமை ஆகியவற்றில் ஆளுமையோடு தன்மான உணர்வுக்கும், சுயமரியாதை சிந்தனைக்கும் வழிவகுத்து நம் ரத்தநாளங்களோடும் இரண்டறக் கலந்துள்ள தமிழ்நாட்டின் ஒப்பற்ற தலைவர் தன்னுடைய 80 ஆண்டுகால பொது வாழ்க்கையில் 50 ஆண்டுகாலம் கழகத் தலைவராகவும், 13 முறை சட்டமன்ற தேர்தலில் களம்கண்டு வெற்றி வாகை சூடி சாதனை படைத்தவரும், 5 முறை தமிழ்நாடு முதலமைச்சராக பொறுப்பேற்று, மாநிலத்தில் அனைத்து மக்களும் பயன்பெறும் வகையில் திட்டங்களை தீட்டி தன் ஆட்சிக்காலத்தில் அதனை நடைமுறைபடுத்திய இந்திய ஜனநாயக காவலராக திகழ்ந்த முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவினை நலத்திட்டங்கள் வழங்கியும், கழக அரசின் விளக்கியும், அனைத்து மாவட்டங்களிலும் நெசவாளர் அணி சார்பில் சிறப்பாக கொண்டாடுவது என தீர்மானிக்கப்படுகிறது.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா தொடர்பாக, கண்காட்சி நடைபெறும் இடங்களில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் நெசவாளர்கள் மற்றும் நெசவுத் தொழில் வளர்ச்சிக்காக செய்த நலத்திட்டங்களை விளக்கும் படங்கள் வைக்கப்பட்டு. கழக அரசின் நெசவாளர்களுக்கான எதிர்கால திட்டங்களான ஜவுளி நகரம், ஜவுளிப் பூங்காக்கள் குறித்த காணொலி படங்கள் காட்சிப்படுத்துதல் எனவும், கண்காட்சியில் கலந்து கொள்பவர்கள் பிளாஸ்டிக்கை தவிர்த்து, சுற்றுச்சூழலுக்கு உகந்த பருத்தி துணிப்பைகளை பயன்படுத்துவதை ஊக்குவிக்கும் வகையில் "மீண்டும் மஞ்சப்பை திட்டத்திற்கு" வலுசேர்க்கும் விதமாக பருத்தி நூலில் நெசவு செய்யப்பட்ட பைகளில் கலைஞர் நூற்றாண்டு இலட்சினை பொறித்து வழங்கிடுவது எனவும் தீர்மானிக்கப்படுகிறது.

மேற்கண்டவாறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

### அக்டோபர் 9ஆம் தேதி அன்று

# தமிழ்நாடு சட்டப் பேரவைக் கூட்டம்!

## பேரவைச் செயலாளர் அறிவிப்பு!

*சென்னை, செப். 22 -*

தமிழ்நாடு சட்டப் பேரவைக் கூட்டம் அக்டோபர் 9ஆம் தேதி அன்று தொடங்குகிறது என்று சட்டப் பேரவை செயலாளர் கி.சீனிவாசன் தெரிவித்துள்ளார்.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் அடுத்தக் கூட்டத்தை, 2023ஆம் ஆண்டு, அக்டோபர் திங்கள் 9-ஆம் நாள், திங்கட்கிழமை அன்று காலை 10.00 மணிக்கு, சென்னை - 600 009, தலைமைச் செயலகத்திலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் பேரவைத் தலைவர் அவர்கள் கூட்டியுள்ளார்கள்.

மேலும், அன்று 2023 - 2024ஆம் ஆண்டின் கூடுதல் செலவுக்கான மானியக் கோரிக்கைகள் (முதல்) பேரவைக்கு அளிக்கப் பெறும்.

இவ்வாறு பேரவை செயலாளர் கி.சீனிவாசன் தெரிவித்துள்ளார்.

### தமிழ்நாடு அரசின் நிதித்துறை முதன்மைச் செயலாளர்

# த.உதயச்சந்திரன் தாயார் லீலாவதி மறைவு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

*சென்னை,செப். 22 -*

தமிழ்நாடு அரசின் நிதித்துறை முதன்மைச் செயலாளர் த.உதயச்சந்திரன் தாயார் மறைவு குறித்து தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் இரங்கல் செய்தி வருமாறு:

தமிழ்நாடு அரசின் நிதித்துறை முதன்மைச் செயலாளர் த.உதயச்சந்திரன் அவர்களின் அன்னையார் திருமதி. லீலாவதி அவர்கள், உடல் நலக் குறைவால் மறைவெய்தினார் என்ற செய்தியறிந்து மிகவும் வருந்தினேன்.

அவரது மறைவால் வாடும் உதயச்சந்திரன், அவரது குடும்பத்தினர் மற்றும் உறவினர்கள் அனைவருக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.




நீலகிரி மாவட்ட தி.மு.க. சார்பில் மாவட்டச் செயலாளர் பா.மு.முபாரக் தலைமையில், முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா கருத்தரங்கம் உதகையில் நடைபெற்றது. சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் துவக்கி வைத்தார். கருத்தரங்கத்தில் கழக செய்தி தொடர்பு தலைவர் டி.கே.எஸ். இளங்கோவன், பெருநற்கிள்ளி, மருத்துவர் நா.எழிலன் எம்.எல்.ஏ., ஈரோடு சத்தியவதி, பொள்ளாச்சி சித்திக் ஆகியோர் சிறப்புரையாற்றினர்.

2024-நாடாளுமன்றத் தேர்தல் பணிகளை மேற்கொள்வதற்காக

# காஞ்சிபுரம் வடக்கு மாவட்டத்தில் பூத் வாரியாக கழக செயல் வீரர்கள் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் - அமைச்சர் தா.மோ.அன்பரசன் அறிவிப்பு!



2024-ஆம் ஆண்டு நடைபெற உள்ள நாடாளுமன்றத் தேர்தல் பணிகளை சிறப்பான முறையில் மேற்கொள்வதற்காக, காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட பகுதி - ஒன்றிய - நகர- பேரூர்களில் அடங்கியுள்ள வாக்குச்சாவடிகளில் உள்ள கழகத்தினர் அனைவரையும் ஒருங்கிணைத்து பூத் வாரியாக செயல் வீரர்கள் கூட்டம் நடத்துவதற்காக மாவட்ட கழகத்தின் சார்பில் பிரதிநிதி ஒருவர் அனுப்பி வைக்கப்பட உள்ளார்.

மாவட்ட கழகத்தால் அனுப்பி வைக்கப்படும் பிரதிநிதிகள் முன்னிலையில் பூத் வாரியாக கழக செயல் வீரர்கள் கூட்டம் கீழ்க்காணும் விவரப்படி நடைபெற உள்ளது. அதன் விவரம் பின்வருமாறு:-

### 28. ஆலந்தூர் சட்டமன்றத் தொகுதி<br>திருப்பெரும்புதூர் நாடாளுமன்றத் தொகுதி

| | அடங்கியுள்ள பகுதிகள் | பாகம் எண்கள் | அடங்கிய வாக்குச் சாவடிகள் | மாவட்ட கழகத்தால் அனுப்பி வைக்கப்படும் பிரதிநிதிகள் |
|---|---|---|---|---|
| 1 | குன்றத்தூர் வடக்கு ஒன்றியம் | 1 - 27 | 27 | எம்.எஸ்.கே.இப்ராகிம்<br>தலைமை பொதுக்குழு உறுப்பினர் |
| | | 28-44, 56-67 | 29 | கீதா ஆனந்தன்<br>தலைமை பொதுக்குழு உறுப்பினர் |
| | | 45 - 55,125- 136<br>165 - 168 | 27 | இரா.பாஸ்கரன்<br>தலைமை பொதுக்குழு உறுப்பினர் |
| | | 137 - 164 | 28 | ஆர்.டி.பூபாலன்<br>தலைமை பொதுக்குழு உறுப்பினர் |
| 2 | கன்டோன்மெண்ட் நகரம் | 173 -207 | 35 | கோல்டு டி. பிரகாஷ்<br>மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் |
| | | 208 -224 | 17 | ஜெயராம் மார்த்தாண்டன்<br>மாவட்ட வர்த்தர் அணி அமைப்பாளர் |
| 3 | கவுல்பஜார் ஊராட்சி | 169 - 172 | 4 | கண்டோன்மெண்ட் சி. முத்து |
| 4 | மூவரசம்பட்டு ஊராட்சி | 390 - 401 | 12 | மாவட்ட பிரதிநிதி |
| 5 | ஆலந்தூர் வடக்கு பகுதி | 68 -99 | 32 | டி.எஸ்.எம்.ஜெயகரன்,<br>மாவட்ட கலை இலக்கிய பகுத்தறிவு<br>பேரவை அமைப்பாளர்<br>நங்கநல்லூர் வேல்முருகன்<br>மாவட்ட பிரதிநிதி |
| | | 111 - 124 | 14 | ப.குமரவேல்<br>மாவட்ட விவசாய அணி தலைவர் |
| | | 100-110 | 11 | பழவந்தாங்கல் சுந்தரராஜன்<br>பகுதி கழக அவை தலைவர் |
| | | 225 - 238<br>276 - 278 | 17 | பழவந்தாங்கல் ரமேஷ்<br>மாவட்ட பிரதிநிதி |
| | | 3239 -241, 244, 245,<br>246, 248 269-284,307 | 21 | தி.க.பாஸ்கரன், மாவட்ட<br>ஆதிதிராவிட நல அணி அமைப்பாளர் |
| 6 | ஆலந்தூர் தெற்கு பகுதி | 285 - 305,333 | 22 | ஜி.ஆர்.வெங்கடேசன்<br>மாவட்ட பிரதிநிதி |
| | | 242,243,247,<br>249 - 259, 261,267,<br>268, 306,308-311 | 22 | த.அன்பழகன்<br>மாவட்ட மருத்துவரணி<br>துணை அமைப்பாளர் |
| | | 322 - 327, 331, 332,<br>334, 335, 341 - 347,<br>350 - 352 | 20 | திருமாறன்<br>மாவட்ட பிரதிநிதி |
| | | 260, 262 - 266, 312 - 321,<br>328 - 330 | 19 | ஆதம்பாக்கம் மனோகரன்<br>மாவட்ட பிரதிநிதி |
| | | 336 - 340, 359 - 373,<br>376, 386 | 22 | பாபுகுமார்<br>மாவட்ட பிரதிநிதி |
| | | 348, 349, 353 - 358<br>374, 375, 377 - 385<br>387 - 389 | 22 | முகலிவாக்கம் கோட்டீஸ்வரன்<br>பகுதி கழக துணை செயலாளர் |

### 29. திருப்பெரும்புதூர் சட்டமன்றத் தொகுதி<br>திருப்பெரும்புதூர் நாடாளுமன்றத் தொகுதி

| | அடங்கியுள்ள பகுதிகள் | பாகம் எண்கள் | அடங்கிய வாக்குச் சாவடிகள் | மாவட்ட கழகத்தால் அனுப்பி வைக்கப்படும் பிரதிநிதிகள் |
|---|---|---|---|---|
| 1 | திருப்பெரும்புதூர் வடக்கு ஒன்றியம் | 1 - 30 | 30 | அமரம்பேடு ரமேஷ்<br>மாவட்ட இலக்கிய அணி அமைப்பாளர் |
| | | 31 - 47 | 17 | ஜி.ஏ. ராயப்பன், மாவட்ட சிறுபான்மை<br>அணி துணை அமைப்பாளர் |
| 2 | திருப்பெரும்புதூர் தெற்கு ஒன்றியம் | 44 -48,53 - 57<br>276 - 293 | 28 | ஜெ. சிவபாதம், திருப்பெரும்புதூர்<br>வடக்கு ஒன்றிய அவை தலைவர் |
| | | 81 -102, 272-275<br>294-296 | 29 | எம். மணிவண்ணன்<br>திருப்பெரும்புதூர் வடக்கு ஒன்றிய பொருளாளர் |
| 3 | திருப்பெரும்புதூர் பேரூர் | 58 - 80 | 23 | பொடவூர் ரவி<br>மாவட்ட இலக்கிய அணி தலைவர் |
| 4 | குன்றத்தூர் தெற்கு ஒன்றியம் | 103-117,248-261 | 29 | மா. கணேஷ்பாபு<br>தலைமை பொதுக்குழு உறுப்பினர் |
| | | 118-132,262-269<br>337-344, 351-352 | 33 | செந்தில் தேவராஜ், மாவட்ட விவசாய<br>தொழிலாளர் அணி அமைப்பாளர் |
| | | 133-138,172-179<br>345-350, 353-361 | 29 | ப. ராமமூர்த்தி, மாவட்ட இளைஞரணி<br>துணை அமைப்பாளர் |
| | | 222-237, 316-319,<br>325-336 | 32 | ச.வேலுமணி<br>மாவட்ட பிரதிநிதி |
| | | 238-247, 270, 271<br>297-315, 320-324 | 36 | L.D. ஜார்ஜ், மாவட்ட சிறுபான்மை<br>பிரிவு துணை அமைப்பாளர் |
| 5 | குன்றத்தூர் நகரம் | 180 - 204 | 25 | இரா. பொன்னுராம்<br>தொ.மு.ச. பேரவை செயலாளர் |
| | | 205 - 221 | 17 | மாங்காடு சீனிவாசன்<br>தலைமை பொதுக்குழு உறுப்பினர் |
| 6 | மாங்காடு நகரம் | 139 -158 | 20 | டி.வி.சரவணன், மாவட்ட நெசவாளர்<br>அணி துணை அமைப்பாளர் |
| | | 159 -171 | 13 | கே.எத்திராஜ்<br>தலைமை பொதுக்குழு உறுப்பினர் |

### 30. பல்லாவரம் சட்டமன்றத் தொகுதி<br>திருப்பெரும்புதூர் நாடாளுமன்றத் தொகுதி

| எண் | பகுதி – ஒன்றியம் | பாகம் எண்கள் | பூத் | மாவட்ட கழகத்தால் அனுப்பி வைக்கப்படும் பிரதிநிதிகள் |
|---|---|---|---|---|
| 1 | பம்மல் வடக்கு பகுதி (அனகாபுத்தூர் & திருநீர்மலை) | 1-10, 12, 14, 21, 23,<br>29-34, 38, 45-49 | 26 | மு.ரஞ்சன்<br>தலைமை பொதுக்குழு உறுப்பினர் |
| | | 11, 13, 15-20, 22, 24-28,<br>35-37, 40-42, 50 | 21 | பேராசிரியர் எல்.பிரபு<br>மாவட்ட மாணவரணி அமைப்பாளர் |
| | | 399-437 | 39 | ப. டில்லி, மாவட்ட பிரதிநிதி |
| 2 | பம்மல் தெற்கு பகுதி (பம்மல்) | 39, 43, 44, 314-317<br>327-340, 348-357,<br>360-362, 370 | 35 | கோ.காமராஜ்<br>தாம்பரம் மாநகர அவைதலைவர்-<br>துணை மேயர் |
| | | 318, 319, 321, 322,<br>341-347, 358, 359,<br>363-366, 371-376, 382, 385 | 25 | சி.பார்த்தசாரதி<br>மாவட்ட பிரதிநிதி |
| | | 320, 323-326, 367-369,<br>377-381, 383, 384, 386-398 | 28 | ராமச்சந்திர ராஜா<br>மாநகர பிரதிநிதி |
| 3 | பல்லாவரம் வடக்கு பகுதி | 103-119, 143-147,150-154,<br>167,168,291,297,299,301,<br>304,307,308 - | 36 | இரா.நரேஷ்கண்ணா<br>தாம்பரம் மாநகர<br>துணை செயலாளர் |
| | | 120-142,265-268,276,277,<br>279,283,287, 288 | 33 | ச.பிரபு, தாம்பரம் மாநகர<br>இளைஞரணி துணை அமைப்பாளர் |
| 4 | பல்லாவரம் தெற்கு பகுதி | 162-166, 169-175,178,179,<br>189-192, 272-275, | 25 | ந.மூவேந்தன், மாவட்ட கலை<br>இலக்கிய பேரவைத் தலைவர் |
| | | 269-271, 278,284-286, 289,<br>290, 292-296,298,300, 302,<br>303,305,306,309-313 | 25 | குமரேசன்<br>மாநகர பிரதிநிதி |
| | | 148,149,155-161,193-208, | 25 | விக்கி (எ) விக்னேஷ்வரன், மாவட்ட<br>மாணவர் அணி துணை அமைப்பாளர் |
| 5 | செம்பாக்கம் வடக்கு பகுதி | 176, 177, 180-187, 238-240,<br>243-245, 258, 259, 262, 263 | 20 | பி.கே.ஏ. சத்தியபிரபு, தாம்பரம்<br>மாநகர இளைஞரணி அமைப்பாளர் |
| | | 188, 209-221,249, 251,252,<br>255-57,260,261,264 | 23 | துரை இளங்கோவன், பம்மல்<br>தெற்கு பகுதி துணைச் செயலாளர் |
| | | 222-237, 241, 242,<br>246-248, 250, 253, 254 | 24 | தாமோதரன், மாவட்ட ஆதி திராவிட<br>நல அணி துணை அமைப்பாளர் |
| 6 | புனித தோமையர்மலை (பொழிச்சலூர்) | 51-84 | 34 | மு.நி தமிழ்குமரன், மாவட்ட<br>மாணவரணி மு. து. அமைப்பாளர் |
| | புனித தோமையர்மலை (திரிசூலம்) | 89-102 | 14 | சி.ரஞ்சித், மாவட்ட விளையாட்டு<br>மேம்பாட்டு அணி துணை அமைப்பாளர் |
| 7 | சென்னை மாநகராட்சி மீனம்பாக்கம் வட்டம் | 85-88 | 4 | பப்பிதா, பம்மல் வடக்கு பகுதி<br>துணை செயலாளர் |

### 31. தாம்பரம் சட்டமன்றத் தொகுதி<br>திருப்பெரும்புதூர் நாடாளுமன்றத் தொகுதி

| எண் | பகுதி – ஒன்றியம் | பாகம் எண்கள் | பூத் | மாவட்ட கழகத்தால் அனுப்பி வைக்கப்படும் பிரதிநிதிகள் |
|---|---|---|---|---|
| 1 | பெருங்களத்தூர் வடக்கு பகுதி | 1-36 | 36 | வ. விஜயரங்கம் (எ) கண்ணன்<br>தாம்பரம் மாநகர பொருளாளர் |
| | | 37-40, 69-80, 82-84,89-91,<br>96-100,170-172, 202, 203,204 | 33 | சா.லட்சுமிபதி ராஜா, செம்பாக்கம்<br>தெற்கு பகுதி துணைச் செயலாளர் |
| 2 | பெருங்களத்தூர் தெற்கு பகுதி | 81, 85-88, 92-95,<br>101-109, 269-349 | 32 | க.தேவேந்திரன்<br>தலைமைப் பொதுக்குழு உறுப்பினர் |
| | | 81,85-88,92-95, 101-109,<br>310-310, 314-319,321,324 | 36 | க.ராமசந்திரன், செம்பாக்கம்<br>தெற்கு பகுதி அவை தலைவர் |
| | | 311-313, 320, 322, 323,<br>325-349 | 31 | ஷாஜகான், மாவட்ட சிறுபான்மையினர்<br>அணி துணை அமைப்பாளர் |
| 3 | தாம்பரம் மேற்கு பகுதி | 41-68, | 28 | ஆர்.எஸ்.சங்கர்<br>தலைமைப் பொதுக்குழு உறுப்பினர் |
| | | 110-134 | 25 | பொன். சதாசிவம், தாம்பரம்<br>மாநகர துணைச் செயலாளர் |
| | | 135-144,<br>147-156,160 | 21 | சுதாகர், மாவட்ட தொண்டர்<br>அணி துணை அமைப்பாளர் |
| 4 | தாம்பரம் கிழக்கு பகுதி | 145-146, 157-159, 166-169,<br>249-252, 261-268, 380-383,<br>396,401,409-411 | 30 | க.வசந்தகுமாரி<br>தாம்பரம் மாநகராட்சி மேயர் -<br>மாநகர துணைச் செயலாளர் |
| | | 161-165, 374-379, 384-395,<br>397-400, 402-408, | 34 | வ.க.ரவி, பெருங்களத்தூர்<br>தெற்கு பகுதி துணைச் செயலாளர் |
| 5 | செம்பாக்கம் தெற்கு பகுதி | 174-180, 182, 184-201,205, 206, | 28 | தாம்பரம் நாராயணன்<br>மாவட்ட அமைப்புசார ஓட்டுநர்<br>அணி அமைப்பாளர் |
| | | 173,181,183,207-228, 230, | 26 | வழக்கறிஞர் நடராஜன்<br>மாவட்ட வழக்கறிஞர் அணி<br>துணை அமைப்பாளர் |
| | | 229,231-248,253-260, | 27 | மு.ஸ்ரீதர், பம்மல் வடக்குப் பகுதி<br>துணைச் செயலாளர் |
| 6 | புனித தோமையர்மலை (4 ஊராட்சிகள்) | முடிச்சூர்-350-369 -20 பூத்<br>திருவஞ்சேரி-370-373 -4 பூத்<br>அகரம்தென்-412-424 -13 பூத்<br>மதுரபாக்கம்- 425-427 -3 பூத் | 40 | ஆதிமாறன்<br>தலைமைச் செயற்குழு உறுப்பினர் |

### 32.செங்கல்பட்டு சட்டமன்றத் தொகுதி<br>காஞ்சிபுரம் (தனி) நாடாளுமன்றத் தொகுதி

| | அடங்கியுள்ள பகுதிகள் | பாகம் எண்கள் | அடங்கிய வாக்குச் சாவடிகள் | மாவட்ட கழகத்தால் அனுப்பி வைக்கப்படும் பிரதிநிதிகள் |
|---|---|---|---|---|
| 1 | காட்டாங்குளத்தூர் வடக்கு ஒன்றியம் | 1-34 | 34 | எஸ்.ஆல்பர்ட், மாவட்ட<br>சிறுபான்மையின அணி அமைப்பாளர் |
| | | 35-43, 49-54, 266-276 | 26 | நந்திவரம் சம்பத்குமார்<br>மாவட்ட கலை இலக்கிய பகுத்தறிவு<br>பேரவை துணை அமைப்பாளர் |
| | | 75-94, 97, 118, 121-126 | 28 | அரங்க கிரிச்சந்திரன்<br>மாவட்ட பிரதிநிதி |
| | | 44-48, 55-58, 95, 96, 98-100<br>101-117, 119,120 | 33 | வி. ராஜேந்திரன்<br>மாவட்ட பிரதிநிதி |
| | | 59-74 | 16 | இரா. கருணாநிதி, மாவட்ட பிரதிநிதி |
| 2 | காட்டாங்குளத்தூர் தெற்கு ஒன்றியம் | 174-176, 340-347, 408-411<br>425, 429, 431,432, 437-439 | 22 | க. அன்புசெல்வன்<br>தலைமை செயற்குழு உறுப்பினர் |
| | | 292-304, 308-314 317-319 | 23 | ஊரப்பாக்கம் தமிழ்செல்வன் |
| | | 186-192,277-291 | 22 | ஜிஜேந்திரன் ராமு<br>தலைமை பொதுக்குழு உறுப்பினர் |
| | | 305-307, 412-424, 426-428,<br>430, 433-436 | 24 | பெப்சி கண்ணன், மாவட்ட<br>தொழிலாளர் அணி அமைப்பாளர் |
| 3 | கூடுவாஞ்சேரி நகரம் | 127 - 157 | 31 | டி.கே.கமலகண்ணன், மாவட்ட<br>இளைஞரணி துணை அமைப்பாளர் |
| | | 158-185 | 28 | த.விநோத்குமார், மாவட்ட<br>பொறியாளர் அணி அமைப்பாளர் |
| 4 | மறைமலைநகர் நகரம் | 193-220 | 28 | ஆர். ராஜி, மாவட்ட பிரதிநிதி |
| | | 221-241 | 21 | ஜெ. ஆறுமுகம், மாவட்ட பிரதிநிதி |
| | | 242-265 | 24 | மணிகண்டன், மாவட்ட<br>இளைஞரணி துணை அமைப்பாளர் |
| 5 | செங்கல்பட்டு நகரம் | 348 - 377 | 30 | செ.அருள்தேவி, தலைமை<br>பொதுக்குழு உறுப்பினர் |
| | | 378-407 | 30 | கே.பி.ராஜன். செங்கல்பட்டு<br>தொகுதி தகவல் தொழில்நுட்ப<br>அணி ஒருங்கிணைப்பாளர் |

### 33. திருப்போரூர் சட்டமன்றத் தொகுதி<br>காஞ்சிபுரம் (தனி) நாடாளுமன்றத் தொகுதி

| | அடங்கியுள்ள பகுதிகள் | பாகம் எண்கள் | அடங்கிய வாக்குச் சாவடிகள் | மாவட்ட கழகத்தால் அனுப்பி வைக்கப்படும் பிரதிநிதிகள் |
|---|---|---|---|---|
| 1 | திருப்போரூர் வடக்கு ஒன்றியம் | 24-37, 51-65<br>69-77 | 38 | எஸ். அஸ்கர் அலி<br>மாவட்ட பிரதிநிதி |
| | | 1-23, 38-42, 47-50 | 32 | மு. செல்வகுமார், தலைமை<br>பொதுக்குழு உறுப்பினர் |
| | | 43-46, 78-96, 98, 99,113-117 | 30 | பா. ஞானபிரகாசம், மாவட்ட<br>விவசாய அணி அமைப்பாளர் |
| 2 | திருப்போரூர் தெற்கு ஒன்றியம் | 66-68, 97, 100 - 112,131- 143 | 30 | வி. விஜயகுமார், மாவட்ட<br>இளைஞரணி துணை அமைப்பாளர் |
| | | 144-163 | 20 | கோவிந்தன், மாவட்ட மீனவரணி<br>துணை அமைப்பாளர் |
| | | 164-185 | 20 | கௌரிசங்கர், திருப்போரூர் வடக்கு<br>ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் |
| 3 | திருப்போரூர் பேரூர் | 118 - 130 | 13 | ஜி.சி.அன்புசெழியன். தலைமை<br>செயற்குழு உறுப்பினர் |
| 4 | திருக்கழுக்குன்றம் வடக்கு ஒன்றியம் | 186 - 211 | 26 | ஆசிரியர் பழனி. மாவட்ட நெசவாளர்<br>அணி துணை அமைப்பாளர் |
| | | 212-224,250-253 | 17 | திருமலை. திருக்கழுக்குன்றம்<br>தெற்கு ஒன்றிய அவை தலைவர் |
| | | 256-268,282-297 | 29 | டி. ஜெயச்சந்திரன், மாவட்ட பிரதிநிதி |
| | | 298-309 | 12 | எம்.சி.ராகவன், மாவட்ட விவசாய<br>அணி துணை தலைவர் |
| 5 | திருக்கழுக்குன்றம் பேரூர் | 225 - 249,254 - 255 | 27 | கே.ரவிக்குமார், மாவட்ட<br>தொழிலாளர் அணி துணை அமைப்பாளர் |
| 6 | மாமல்லபுரம் நகரம் | 267 - 281 | 13 | மடையத்தூர் சுப்பிரமணியன்<br>மாவட்ட பிரதிநிதி |

மாவட்ட கழகத்தால் அனுப்பி வைக்கப்படும் பிரதிநிதிகள் அனைவரும் உடனடியாக அவரவர்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள பகுதி - ஒன்றிய - நகர- பேரூர்களுக்கு சென்று, அந்தந்த பகுதி - ஒன்றிய - நகர- பேரூர் செயலாளர்களுடன் கலந்து பேசி, பூத் கமிட்டி செயல் வீரர்கள் கூட்டம் நடத்துவதற்கான தேதி, நேரம், இடம் ஆகியவற்றை அட்டவணையாக பட்டியலிட வேண்டும்.

பின்னர் அட்டவணையில் குறிப்பிட்டுள்ள நாட்களில் -நேரங்களில் பூத் செயல் வீரர்கள் கூட்டத்தை நடத்துவதற்காக, அந்தந்த வார்டு செயலாளர்களுடன் கலந்தாலோசனை செய்து, பூத்தில் உள்ள கழக நிர்வாகிகள் அனைவரின் பெயரும் இடம் பெறும் வகையில் பூத் செயல் வீரர்கள் கூட்ட அழைப்பிதழை முறையாக அச்சிட ஏற்பாடு செய்து, அந்த அழைப்பிதழை அந்த வாக்குச்சாவடியில் உள்ள கழகத்தினர் அனைவருக்கும் அளித்திட உரிய ஏற்பாடுகளை செய்திட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

வாக்குச்சாவடி நிலை முகவர்கள், வாக்குச் சாவடி தேர்தல் பணிக்குழு உறுப்பினர்கள், வார்டு கழக நிர்வாகிகள் மற்றும் கழகத்தினர் அனைவரையும் இந்த பூத் செயல்வீரர்கள் கூட்டத்தில் இணைந்து பங்கேற்கச் செய்யும் வகையில், வாக்குச்சாவடி வாரியாக பூத் கமிட்டி செயல் வீரர்கள் கூட்டத்தை மாவட்ட கழகத்தால் அனுப்பி வைக்கப்படும் பிரதிநிதிகள் கூட்டி, கழகத்தினர் அனைவரையும் ஒருங்கிணைத்து நாடாளுமன்ற தேர்தல் பணிகளை முடுக்கி விட வேண்டும் என்று அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.


**அமைச்சர் தா.மோ.அன்பரசன்**
செயலாளர், காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட தி.மு.க.













முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (20.9.2023) தலைமைச் செயலகத்தில், தியாகி இம்மானுவேல் சேகரனார் அவர்களுக்கு பரமக்குடியில் திருவுருவச் சிலையுடன் கூடிய மணிமண்டபம் அமைக்கப்படும் என்று அறிவித்தமைக்காக, தியாகி இம்மானுவேல் சேகரனார் அவர்களின் மகள் திருமதி. பிரபாராணி மற்றும் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் ஆர்.எஸ். ராஜகண்ணப்பன், ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் திருமதி. என். கயல்விழி செல்வராஜ், தமிழ்நாடு அரசின் தில்லி சிறப்புப் பிரதிநிதி ஏ.கே.எஸ். விஜயன், சட்டமன்ற உறுப்பினர்கள் காதர்பாட்சா முத்துராமலிங்கம், திருமதி.ர.தமிழரசி, சண்முகையா, செ.ஸ்டாலின் குமார், செ.முருகேசன். திருமதி.க.சிவகாமசுந்தரி, ராஜா ஈஸ்வரன், சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் அ. அசோகன், மக்கள் விடுதலை கட்சியின் நிறுவனரும், சட்டமன்ற முன்னாள் உறுப்பினருமான முருகவேல்ராஜன், தேவேந்திரர் பண்பாட்டு கழகத்தின் தலைவர் பாலா, செல்வகுமார், பாலு, பூமிநாதன், ஜெயச்சந்திரன், சுரேஷ், மாரியப்பன், கிருஷ்ணமூர்த்தி, சங்கர், அய்யப்பன், சிவக்குமார், எம்.ஆர். சங்கர் ஆகியோர் சந்தித்து நன்றி தெரிவித்துக் கொண்டனர்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (20.9.2023) சென்னை, கலைவாணர் அரங்கத்தில், விகடன் குழுமத்தின் சார்பில் நடைபெற்ற "கலைஞர் 100 விகடனும் கலைஞரும்" நூல் வெளியீட்டு விழாவில் அமைக்கப்பட்ட முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் வாழ்க்கை வரலாற்று நிகழ்வுகளைப் பற்றிய புகைப்படக் கண்காட்சியை பார்வையிட்டார். உடன் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில தலைவர் இரா.முத்தரசன், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் கே.பாலகிருஷ்ணன், மக்கள் நீதி மய்யத்தின் தலைவர் கலைஞானி கமல்ஹாசன், விகடன் குழுமத்தின் நிர்வாக இயக்குநர் பா. சீனிவாசன், தி இந்து குழுமத்தின் இயக்குநர் என். ராம், தினமலர் இணை ஆசிரியர் கிருஷ்ணமூர்த்தி, ஆனந்த விகடன் ஆசிரியர் தி. முருகன் ஆகியோர் உள்ளனர்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (20.9.2023) அவரது இல்லத்தில், அண்மையில் திருமணம் நடைபெற்ற நெய்வேலி சட்டமன்ற உறுப்பினர் சபா. ராசேந்திரன் மகன் சபா. இரா. சுமந்த் – திருமதி தனரஞ்சனி ஆகியோர் சந்தித்து வாழ்த்துப் பெற்றனர். உடன் தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் சி.வி. கணேசன் மற்றும் மணமக்களின் குடும்பத்தினர் உள்ளனர்.




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (20.9.2023) தலைமைச் செயலகத்தில், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை சார்பில் தமிழ்நாடு பட்டியலினத்தவர் / பழங்குடியினர் புத்தொழில் நிதித்திட்டத்தின் கீழ் 8 நிறுவனங்களுக்கு 10 கோடியே 85 இலட்சம் ரூபாய் பங்கு நிதி வழங்குவதற்கான ஒப்புதல் ஆணைகளை வழங்கினார். இந்த நிகழ்ச்சியில், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ. அன்பரசன், தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை செயலாளர் (பொறுப்பு) வி. அருண் ராய், தமிழ்நாடு புத்தொழில் மற்றும் புத்தாக்க நிறுவனத்தின் தலைமை நிர்வாக அலுவலர் சிவராஜா இராமநாதன் ஆகியோர் கலந்து கொண்டனர்.



இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், விபத்தில் பாதிக்கப்பட்ட மதுரை மாவட்டத்தைச் சேர்ந்த ஜூடோ விளையாட்டு வீரர் ஆர்.பரிதி விக்னேஸ்வரனை நேற்று முன்தினம் (20.09.2023) நேரில் சந்தித்து, தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளை சார்பில் ரூ.2 இலட்சம் நிதியுதவியினை வழங்கினார். உடன் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ. மேகநாதரெட்டி, உள்ளார்.

### விபத்தில் பாதிக்கப்பட்ட ஜூடோ விளையாட்டு வீரர்

# ஆர்.பரிதி விக்னேஸ்வரனுக்கு ரூ. 2 இலட்சம் நிதி!

## அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வழங்கினார்!

சென்னை, செப். 22-

இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் விபத்தில் பாதிக்கப்பட்ட மதுரை மாவட்டத்தைச் சேர்ந்த ஜூடோ விளையாட்டு வீரர் ஆர். பரிதி விக்னேஸ்வரனுக்கு தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளை சார்பில் ரூ.2 இலட்சம் நிதியுதவியினை நேற்று முன்தினம் வழங்கினார்.

இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் விபத்தில் பாதிக்கப்பட்ட மதுரை மாவட்டத்தைச் சேர்ந்த ஜூடோ விளையாட்டு வீரர் ஆர்.பரிதி விக்னேஸ்வரனை நேற்று முன்தினம் (20.09.2023) நேரில் சந்தித்து, தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளை சார்பில் ரூ.2 இலட்சம் நிதியுதவி யினை வழங்கினார்.

மதுரை மாவட்டம், கோச்சடை பகுதியைச் சேர்ந்த ஜூடோ விளையாட்டு வீரர் ஆர். பரிதி விக்னேஸ்வரன் கோயம்புத்தூரில் உள்ள ஸ்ரீஈஸ்வர் பொறியியல் கல்லூரியில் முதலாம் ஆண்டு படித்து வந்துள்ளார். இவர் ஜூடோ விளையாட்டில் தேசிய அளவில் கடந்த 2023ஜூலை மாதம் கர்நாடக மாநிலம், பெல்லாரியில் நடைபெற்ற தேசிய கேடட் ஜூடோ போட்டியில் (NATIONAL CADET JUDO CHAMPIONSHIP) கலந்து கொண்டு ஐந்தாம் இடம் பெற்றுள்ளார். மேலும், மாநில அளவிலான போட்டிகள் மற்றும் மாவட்ட அளவிலான போட்டிகளில் கலந்து கொண்டு தங்கப் பதக்கங்கள் மற்றும் பல்வேறு பதக்கங்களை வென்றுள்ளார்.

இவர் கடந்த 26/07/2023 அன்று மதுரையில் ஜூடோ பயிற்சிக்காகச் செல்லும் போது ஏற்பட்ட விபத்தில் பாதிக்கப்பட்டதில் இடது காலில் ஒரு பகுதியை இழந்துள்ளார். இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் அவர்கள் பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வதற்காக மதுரைக்குச் சென்றார். பாதிக்கப்பட்ட விளையாட்டு வீரரை அமைச்சர் அவர்கள் நேற்று முன்தினம் (20.9.2023) நேரில் சந்தித்து, தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளை சார்பில் ரூ.2 இலட்சத்திற்கான நிதியுதவியினை வழங்கினார்.

இந்நிகழ்வின்போது, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ. மேகநாதரெட்டி உடனிருந்தார்.

# திராவிட சினிமா

24

**திராவிடக் கொள்கைகளை, சமதர்ம நோக்கங்களை, சமூகநீதிச் சிந்தனைகளைத் திரைத்துறை மூலம் மக்களிடம் கொண்டு சேர்த்தனர் நமது முன்னோடிகள். அந்த வகையில் திரைப்படம் என்கிற நவீன ஊடகத்தின் மூலம் அரசியல் மாற்றத்துக்கான திருப்புமுனைகளை உருவாக்கின, திராவிடம் பேசிய திரைப்படங்கள். அந்த வரலாற்றை மீண்டும் வாசிக்கத் தருகிறது திராவிட சினிமா.**

■ **வீ.மா.ச.சுபகுணராஜன்**



படங்கள் உதவி : ஞானம்



# ‘பூமாலை’ காட்டும் திராவிடச் சிந்தனை!

1965-ஆம் ஆண்டு மேகலா பிக்சர்ஸ் சார்பில், முரசொலி மாறன் அவர்களின் தயாரிப்பாக வெளிவந்தது ‘பூமாலை’ திரைப்படம்.

கலைஞரின் கதை, திரைக்கதை வசனத்தில் உருவான திரைப்படத்தை, சுதர்சனம் இசையில், அமிர்தம் அவர்களின் ஒளிப்பதிவில், ப.நீலகண்டன் இயக்கியிருந்தார். எஸ்.எஸ்.ராஜேந்திரன், விஜயகுமாரி, அஞ்சலிதேவி, எஸ்.ஏ.அசோகன், நாகேஷ், மனோரமா மற்றும் பலர் நடித்திருந்தனர்.

பாலியல் வன்கொடுமைக்கு ஆளாகி ஒரு குழந்தையையும் ஈன்றெடுக்க நேரும் இளம்பெண்ணின் கதை. இந்த ஒற்றை வரிக்கதையை கலைஞரின் திரைக்கதை கையாண்டிருக்கும் விதம், திரைப் படத்தைச் சமூக மாற்றத்துக்கான கருவியாகக் கையாள எண்ணுவோருக்கு ஒரு கையேடு.

## பூமாலையின் முன்னிருந்த வழிகள்

ஒரு பெருமழை பெய்யும் வெளிச்சமற்ற இரவில், முகமறியவியலாத ஆண் மனித மிருகத்தால் பாலியல் வல்லுறவுக்கு ஆளான பெண்ணின் கதையை அந்தப் புள்ளியிலிருந்து நகர்த்தும் வழிகளை யோசித்துப் பாருங்கள். அவள் முன் இருக்கும் வழிகளில் முதலாவது உயிரை மாய்த்துக் கொள்வது.

அதைவிடுத்து வீடு திரும்பி, தான் கர்ப்ப மடைந்திருப்பதும் தெரிய வந்தால், அவளுக்கான வாய்ப்பு என்ன? அவளது கையறு நிலையைக் கருதாது அவதூறும் பழியும் பேசும் குடும்ப உறுப்பினர்கள் அவளை எப்படி எதிர்கொள்வார்கள்?

பூமாலை மீது அன்பும், மாறாத நம்பிக்கையும் கொண்ட அப்பாவும் அண்ணனும் அவளது அவலநிலையை முற்றாகப் புரிந்து கொள்கிறார்கள். அப்பா, ‘அறியாமல் நடந்ததற்கு நீ பொறுப்பல்ல, உயிர்துறப்பது தவறு. நீ வாழ்ந்துதான் ஆக வேண்டுமென’ உறுதியாகப் பேசி, அவளது அண்ணனிடம் அதற்கான பொறுப்பையும் கொடுத்துவிட்டு உயிர்விடுகிறார்.

குழந்தைப் பிறப்பை ரகசியமாக்கி, அதையும் கைவிட்டு தங்கையை வாழ வைக்க முயல்கிறான் அண்ணன். எதிர்பாராத திருமண உறவில் ஈடுபட முடியாமல் தவிப்பவளிடம், குழந்தை மீள்கிறது.

இந்தத் திருப்பங்களில், அவளது வாழ்வின் அசாதாரண நிலையறிந்து, அவளுக்கு உறுதுணையாக இருக்கிறார் கணவனின் விதவை அக்கா. ஆனால், ஊரார் அவதூறு பழியை அவள் மீது சுமத்துகின்றனர். அக்காவின் உயிர்த் தியாகத்தில் முடிச்சுகள் அவிழ்கின்றன.

## கலைஞர் காட்டிய நவீனம்

காலத்துக்கேற்றாற் போல தன்னைத் தகவமைத்துக் கொள்ளும் திறன் கொண்டவர் கலைஞர். ஆனால், தகவமைத்துக் கொள்ளுவது கருத்து சமரசத்தில் அல்ல. மாறாக, தனது சீர்திருத்தச் சிந்தனைகளைச் சொல்லும் முறையை மாற்றுவது. அது அடிப்படையாக ஒரு படைப்பாளியின் பண்புதான் எனக் கடந்துவிட முடியாது.

தங்களது கொள்கை நிலைப்பாடுகளில் தடு மாறித் தடம் புரண்டவர்கள் ஏராளம். கேட்டால், இந்து தத்துவ விசாரங்களின் ஆழமறியாமல் ஒருநாளில் செய்த பிழை எனக் கடப்பதோடு, பகுத்தறிவு- சுயமரியாதைச் சிந்தனைகளைப் பகடி பேசி, பிழைத்துத் தொலைப்பார்கள். எவ்வளவு வெளிப்படையாகச் சொன்னாலும், தன் பிற்போக்குச் சிந்தனைகளின் சாராம்சத்தைக் கைவிட முடியாது என அகம்பாவம் பேசிய ‘மௌனி’களே இங்குத் தமிழ் நவீனத்தின் உன்னத அடையாளங்கள் ஆயினர்.

அன்றும் இன்றும் பார்ப்பனிய மனோபாவத்தின் பிடியிலிருந்து விலக முடியாமல் இருக்கும் குறுங்குழுவினர் ‘நவீனத்தை’ தேன் தடவிய வார்த்தைகளில் மொழியப்பட்ட ’உன்னத இலக்கிய’ பம்மாத்துகளில் பாரம்பரியம் / மரபு எனும் வாதங்களில் முன் வைக்கின்றனர்.

அவர்களின் பழைமையான முடைநாற்றத்தின் கொண்டாட்டத்தை ‘கலை கலைக்காகவே‘ எனும் வாதத்தில் வளைத்தனர். கலையின் அரசியல் இயக்க விசை அறியாதவர்கள் ஏமாறலாம், ஆனால் ‘அரசியலற்ற கலை’ என்ற ஒன்று ஒரு போதும் இருக்கவியலாது என்ற புரிதல் கொண்டவரிடம் இந்த வாதம் காலத்தில் தூளாகிப் போனது. அவர்களின் ‘கலை உன்னதம்’ சனாதனக் கோடாரிகளுக்குச் சாணை பிடித்த வேலையென இப்போது அம்பலமாகிப் போனது.

## கலை கலைக்காகத்தானா?

திரைப்படத்திலும் நேரடியாகவும் ‘கலை கலைக்காக’ என்ற அபத்தம் பேசப்படுகிறது. சுந்தரம் சொல்கிறான், ‘கலை கலைக்காக மட்டும்தானாம்’ என்கிறார்கள் சில ‘பெரியவர்கள்’ என்று. அக்கா பதிலிறுக்கிறாள், ‘அது எப்படி இருக்க முடியும். விளக்கு விளக்குக்காக மட்டுமே இருக்க முடியுமா? வெளிச்சம் தர வேண்டாமா? அது மாதிரி கலையும் மனித சமுதாயத்துக்குப் பயன்படணும்’ என்று.

> **விளக்கு விளக்குக்காக மட்டுமே இருக்க முடியுமா? வெளிச்சம் தர வேண்டாமா? அது மாதிரி கலையும் மனித சமுதாயத்துக்குப் பயன்படணும்!**

கலை கலைக்காக வாதத்தின் அடிப்படை ‘கலை’ அதன் உன்னதத்தின் உச்சியில் ’வாசகனை’ உச்சரிக்கப்படாத வார்த்தைகளின் வழி உரையாடல் நிகழ்த்தி, அவனை உச்சாணியில் ஏற்றி விடும் என்பதே. உச்சாணியில் ஏறியவன் வாய் திறந்து, ‘உன்னதச் சனாதனமும்’, ‘சுயசாதி பெருமிதமும்‘ பேசும் போதுதான் உரையாடல் வழியாகக் கடத்தப்பட்ட ‘உன்னதம்’ அம்பலமாகும்.

## ஆணின் தவறு... பெண்ணுக்குத் தண்டனை...

சுந்தரத்துக்கு ரவி என்றொரு நண்பன். பகுத்தறிவாளன், கலை, இலக்கியம், பண்பாடு என வாழ்பவன். ‘உன்னையே நீ எண்ணிப் பார்‘ என நூல் எழுதி ‘அக்காவுக்கு’ காணிக்கையாக்குபவன்.

திரைக்கதையின் கவனம் முற்றாக அந்தப் பெண்ணின் இருப்பு மீதே. அவளின் வலியும் வேதனையும், கிடுக்கியில் மாட்டிக் கொண்ட நிலையுமே பேசப்படுகிறது. அதிலும் தாய்மைப் பேறின் பிடியிலிருந்து மீள முடியாமலும், கன்னியான புதிய காதல் மனைவி என்ற ‘பாத்திரத்தை’ ஏற்க முடியாமலும் தவிக்கும் போராட்டத்தை அற்புதமாகச் சித்தரித்திருக்கிறார் கலைஞர்.

அதன் தொடர்ச்சியாக ஒரு ஆதரவற்ற குழந்தையின் ‘தாயாகும்‘ அக்காவின் மீது அள்ளி வீசப்படும் மனமலங்களின் குவியலில் அவள் மூழ்குவதும் காட்சியாகிறது. தன் குற்றத்தைப் பகுத்தறிவாள நண்பனிடம் பேசி அதிலிருந்து தன்னை விடுவித்தும் கொள்கிறான் ஆண்.

தான் இழைத்த மாபெரும் கொலைபாதகத்திலிருந்து ‘விடுதலை‘ பெற்று விடும் ஆணின் வாய்ப்பு, எந்தக் குற்றமும் செய்யாத பெண்களுக்கு அறவே மறுக்கப்படுகிறது. ’தவறு செய்வது ஆண், தண்டனை அனுபவிப்பது பெண்’ என்கிறது கலைஞர் வரிகள்.

## அழுவதா திராவிடச் சிந்தனை?

இந்த ஆண் உலகத்தின் அதிகாரத்தை அப்பட்டமாகத் தோலுரிப்பதை, இதைவிட கலைநயமாக எப்படிச் சொல்லி விடுவார்கள். வெகு மக்கள் புரிதலைக் கோரும் திரைப்படம், அதன் மிகச் சிறந்த கருவியான பாடல் வழி உன்னதத்தைக் கடத்தும் விதம் பாருங்கள்...

“பெண்ணே உன் கதி இது தானா உன் பெண்மை ஆண்மைக்குப் பலிதானா உலகே உனக்குச் சுமைதானா உன் உடலே உனக்குப் பகைதானா...”

‘பெண்ணின் உடலே பெண்ணிற்குப் பகைதானா’ என்ற கவிஞர் மாயவநாதனின் வரிகளில், காண முடியாத கலை உன்னதம் என்னவாக இருக்க முடியும்? அதற்காக இந்தப் பெண்கள் கண்ணீர் சிந்தும் செயலற்றவர்கள் இல்லை.

இறுதியில், கணவன், மனைவியையும், அக்காவையும் அவதூறுக்குள்ளாக்கிய கொடூரன் தானே என உணர்ந்து மனைவியிடம், குற்றவுணர்ச்சியின் அவமானத்துடன் கேட்கிறான். “உன்னை இந்த நிலைக்கு ஆளாக்கிய கொடூரன் உன் முன்னால் வந்தால் என்ன செய்வாய்” என்று.

பெண் வெடித்துக் குமுறுகிறாள், ‘அந்த மிருகத்தை இரண்டாகக் கிழித்து எறிந்து விடுவேன்‘ என்று. இதுதான் திராவிடச் சிந்தனை. பெண்களைக் கண்ணீர் சிந்துவோராகக் காட்டி இரக்கம் தேடும் உன்னதங்கள் அல்ல அவை. மாறாக எழுந்து நின்று போராடு, ஆணுக்குச் சமமாக நில் என்பதே..!

...படம் விரியும்

## டிஜிட்டலில் 50 ஆண்டுச் ‘செம்மலர்’!




திராவிட இயக்கம் போலவே, பகுத்தறிவு மற்றும் சமத்துவச் சிந்தனைகளை முன்னெடுத்துச் சென்றதில் பொதுவுடைமை இயக்க இதழ்களுக்கும் பங்குண்டு. அவற்றில் முக்கியமான இதழ், சி.பி.எம். கட்சியின் ‘செம்மலர்’ மாத இதழ்.

கடந்த 50 ஆண்டுகளாக அச்சு இதழாக வந்துகொண்டிருந்தது ‘செம்மலர்’. அந்த இதழ்கள் அனைத்தும் தற்போது டிஜிட்டல் மயமாக்கப்பட்டு, அனைவரும் எளிதில் பதிவிறக்கம் செய்து, பயன்படுத்தக் கூடிய வகையில் தெற்காசிய திறந்த மின்னணு ஆவணக் காப்பகத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது.

இந்த மாபெரும் பணியை சென்னையில் உள்ள ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலகம் மேற்கொண்டது. மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலக் கருவூலம் இந்தப் பணிகளை ஒருங்கிணைத்தது. 1970-ஆம் ஆண்டு மே முதல் 2022-ஆம் ஆண்டு வரையிலான 587 செம்மலர் இதழ்கள் கிடைக்கும்.

https://bitly.ws/VeF7

## :ப்ளாஷ்பேக்



## திருவாரூர் சூட்டிய அறிவுக்கொடி!



சௌந்தரராஜன்

1965-இல் நடைபெற்ற இந்தித் திணிப்பு எதிர்ப்புப் போராட்டத்தில் பங்கேற்றதுடன், மொழிப் பற்றுக் கொண்ட ஆசிரியராகவும் எனது பணியை 2006-ஆம் ஆண்டு வரை செய்தேன். 1979-ஆம் ஆண்டு திருவாரூருக்குப் பொதுக்கூட்டத்தில் பங்கேற்க தலைவர் கலைஞர் வருகை தந்தார். அப்போது மயிலாடுதுறையிலிருந்து, 11 மாதமே ஆன என் மகளை அழைத்துக் கொண்டு தலைவரைச் சந்திக்கச் சென்றேன். அன்னை மணியம்மை அவர்களின் நூற்றாண்டும் அந்த சமயத்தில் நடைபெற்றுக் கொண்டிருந்தது. தலைவர் கலைஞர்தான் என் மகளுக்குப் பெயர் வைக்க வேண்டும் என்பதில் உறுதியாக இருந்தேன். 1.09.1979 அன்று என் மகளுக்கு ‘அறிவுக்கொடி’ என்று பெயர் வைத்தார். ஒரு தமிழாசிரியனாகவும் கலைஞரின் தொண்டனாகவும் பெருமையாக உணர்ந்த தருணம் அது.

**-பா.சௌந்தரராஜன், கிளைச்செயலாளர், குளிச்சார், மயிலாடுதுறை மாவட்டம்.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறு குறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்ப வேண்டிய முகவரி : அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை-600 018. வாட்ஸ்அப் எண்: 90033-24473 மின்னஞ்சல் youthwing@dmk.in


## கருவூலம்

### விவசாயத்துக்கு டிராக்டர்

**1970-ஆம் ஆண்டு கண் சிகிச்சைக்காக லண்டன் சென்றார் கலைஞர். அங்கு சென்ற இடத்திலும் தமிழ்நாட்டின் தொழில் வளர்ச்சிக்காகப் பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டார். ஸ்டாண்டர்டு தொழிற்சாலை, டிராக்டர் தொழிற்சாலை, பெட்ரோ கெமிக்கல் தொழில்கள் திறப்பதற்கான ஒப்பந்தங்களில் ஈடுபட்டார். பெர்கூசன் டிராக்டர் தொழிற்சாலையைப் பார்வையிடச் சென்றபோது, அவருக்குப் பரிசாக வழங்கப்பட்ட டிராக்டரை கோவை வேளாண்மைப் பல்கலைக் கழகத்துக்கு அன்பளிப்பாக அளித்தார்.**

## திராவிடத்தால் வாழ்கிறோம்

248




எழுத்து : கோவி.லெனின்
ஓவியம் : கி.சொக்கலிங்கம்

-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/21 - 23 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/21-23. Phone : 28179191, 28179131